
கல்கி

ஸ்வீட்டா...ஸ்டைலா...ஸ்மார்ட்டா...



KALKI • 22.02.2009 • ரூ.10.00 • 96 பக்கங்கள்



கடவுள்...பூஜா...
...பாலா!

உ

மைலாப்பூர் மற்றும் காஞ்சிபுரத்தில்
குறைந்த விலையில் உயர்ந்த தரத்துடன்
காஞ்சிபுரம் பட்டுச் சேலைகளை வழங்கும்

ஸ்ரீ காமாட்சி சில்க்ஸ்

நிறுவனத்தின்



ராசாத்தி நகர்

- காஞ்சிபுரம் அருகில் -

1200 சதுர அடி - ரூ. ~~1,00,000/-~~ ரூ. 75,000/- மட்டுமே

இலவசம்!
(உடனே பத்திரபதிவு செய்பவருக்கு)

1. பத்திரப்பதிவு முற்றிலும் இலவசம்
2. ¼ சவரன் தங்கக்காசு
3. ரூ. 2,000/- மதிப்புள்ள பட்டுச்சேலை

மனையின் சிறப்பம்சங்கள்

* காஞ்சிபுரம் அருகில் (முத்துவேடு) (12km from kanchipuram) காஞ்சிபுரம் - பழைய ஆற்காடு ரோடு State Highway-ல்
* பாலாற்றுக்கு அருகில் உள்ளதால் குறைந்த ஆழத்தில் சுவையான குடிநீர்.
* குடியிருப்புகளுக்கு அருகில்
* Bangalor Highways இருந்து 6km
* மிகக்குறைந்த காலத்தில் முதலீடு இரட்டிப்பாகும் வாய்ப்பு.

தொடர்புக்கு: 93808 07989, 94440 07925

ஸ்ரீ காமாட்சீ சீல்க்ஸ்™

Specialists in Wedding Collections

சென்னை: எண். 13/7, (அடி தளம்) வடக்கு மாட வீதி, மயிலாப்பூர், சென்னை - 4. (கபாலீஸ்வரர் கோயில் அருகில்) போன்: 044 - 2493 3097, 2461 0444

காஞ்சிபுரம்: எண். 2, திருசக்கராபுரம் தெரு, அருணா தியேட்டர் அருகில், காஞ்சிபுரம் - 631 501 போன்: 044 - 2722 0248


கல்கி
22.02.2009
02 சினி சிப்ஸ்
04 பாலிடிக்ஸ் பஜார்
08 நான் கடவுள் - விமர்சனம்
14 அயோத்யா அபாயம்!
- தலையங்கம்
34 மரபணு விதை...
மனிதகுலத்துக்கு வதை!
- நம்மாழ்வார்

■ நியூஸ் பாய் ■

சி னி சி ப் ஸ்



'**நா**ன் கடவுள்' படத்தைப் பார்த்து நெகிழ்ந்துபோன ரஜினி, பாலாவைக் கூப்பிட்டுப் பாராட்டித் தள்ளியிருக்கிறார். நேரம் கிடைக்கும்போதெல்லாம், 'அந்த ஸீன் எப்படி எடுத்தீங்க... இந்த ஸீன் எப்படி எடுத்தீங்க..?' என்று விசாரிப்பு வேறாம். அநேகமாக பாலாவின் அடுத்த படத்தின் ஹீரோ ரஜினியாகவும் இருக்கக்கூடுமாம்.

(பாராட்டுக்குப் பாராட்டு மாச்சு; படத்துக்குப் படமுமாச்சு. சூப்பர் ஸ்டாரா... கொக்கா!)

'**நா**க்க மூக்க' நகுலன், படத்துக்கு என்ன கதை; யார் ஹீரோயின்... இவை பற்றியெல்லாம் கவலைப்படுவதில்லையாம். ஷூட்டிங் ஸ்பாட்டில் எனக்கு கேரவன் உண்டா என்றுதான் கேட்கிறாராம்.

(அப்பத்தானே கூட வர்ற 'ஃப்ரண்டி'யோட கடலை போட முடியும்!)

'**ச**க்கரகட்டி' எடுத்த கலாபிரபு, அடுத்த படத்தை ஹிந்தியில் எடுக்கப் போகிறாராம். காரணம் கேட்டால்,''என் முதல் தமிழ்ப் படம் சக்கரகட்டியை யாருமே சரியாப் புரிஞ்சுக்கல. என் ஆடியன்ஸ் ஹிந்தி ஏரியாவுலதான் இருக்காங்க'' என்று 'பில்டப்' பிடிக்கிறாராம்.

(ஹிந்திலயாவது இனிக்க இனிக்க படம் கொடுங்க!)

தான் ஹீரோ வேடம் கட்டிய 'சற்றுமுன் கிடைத்த தகவல்' படத்தைப் பார்த்துவிட்டு, கோலிவுட் டைரக்டர்கள் ஹீரோவாக நடிக்கக் கூப்பிடுவார்கள் என்ற கனவில் மிதந்திருக்கிறார் கனல் கண்ணன். ஒருவரும் பேசாததால் தானே கதை, இயக்கம் என இறங்கிவிட்டாராம்!

(தெரியாத பிசாசைவிட தெரிஞ்ச சாத்தானே மேல்)

செல்வராகவன், தன்னை விட்டால் போதும் என்று படத்தை முடித்துக் கொடுத்திருக்கிறார் 'பருத்தி வீரன்' கார்த்தி. காரணம், நான்கு மாதம் கால்ஷீட் என்று சொல்லிவிட்டு ஒரு வருடம் இழுத்து அடித்ததுதானாம்.

(செல்வராகவன் சரியான 'செலவு' ராகவன்தான்!)

'**எ**னக்கு வித்தியாசமான கதையோ, ஸ்கிரிப்டோ தேவையில்லை. நான் சொல்வது போல, என் இமேஜுக்குத் தகுந்தாற்போல படம் எடுக்கத் தெரிஞ்ச டைரக்டர் போதும்' என்று 'கட் அண்ட் ரைட்'டாகப் பேசியிருக்கிறாராம் 'தல' அஜித்!

(என்னைக்குமே 'தல'யோட பேச்சு வெட்டு ஒண்ணு துண்டு ரெண்டுதான்.)

விஜய்யின் வேட்டைக்காரன் படத்திலிருந்து கேமராமேன் ரவிவர்மாவைச் சப்தமில்லாமல் தூக்கி அடித்து விட்டதாம் தயாரிப்பாளர் தரப்பு. விஜய் யிடம் கேமராமேன் முறையிட்டும் 'பப்பு' வேகலையாம்.

(இதுக்குப் பேர்தான் தயாரிப்பாளர் ஆப்பா?)

தனது படங்களில் கதை, திரைக்கதை, பாடல், இயக்கம், வசனம், நடிப்பு... என ஒன் மேன் ஷோ நடத்திய இயக்குநர் பேரரசு, அடுத்த படத்தில் மியூஸிக் டைரக்டர் பொறுப்பையும் ஏற்றிருக்கிறாராம்.

(ஆடியன்ஸுக்குத்தான் இம்சைக்கு மேல இம்சை.)

'**ச**ர்ச்சை புகழ்' நயன்தாராவைத் தனது அடுத்த படத்தில் ஹீரோயினாக புக் செய்திருக்கிறார் உதய நிதி ஸ்டாலின். எனவே, நயன்தாரா மீதிருந்த 'நடிக்கத் தடை'யை அவசர அவசரமாக வாபஸ் வாங்க காதும்காதும் வைச்சது மாதிரி வேலை நடக்குதாம்.

(இல்லேன்னா 'சூரியன்' கூப்பிட்டுச் சுட்டுடும். அப்படித்தானே தயாரிப்பாளரே?)

கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர்:
லக்ஷ்மி நடராஜன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர் : **சீதா ரவி**
உதவி ஆசிரியர் : **கதிர்பாரதி**
வடிவமைப்பு :
எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன், ச.கார்த்திகேயன், பா.கோபால்
தொலைபேசி :
044 - 4343 8888 (30 lines)
தொலைநகல் : **044 - 4343 8899**
மின்னஞ்சல் - ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com
விளம்பரப் பிரிவு :
marketing@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்கள் :
info@kalkiweekly.com
கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com
சந்தா விவரம் - உள்நாடு :
ஒரு வருடம் : ரூ. 500/-
ஆறு மாதம் : ரூ. 270/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : ரூ. 3,800/-

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

“பா.ம.க. பதுங்குவது ஏன்?”



- பீட்டர் அல்போன்ஸ் கேள்வி

‘ராஜீவ்காந்தி கொலையை மறப்போம். ஈழத் தமிழர்களைக் காப்போம்’ என்று சட்டமன்றத்தில் பேசி பரபரப்பை ஏற்படுத்தினார் காங்கிரஸ் எம்.எல்.ஏ. பீட்டர் அல்போன்ஸ். ஆச்சர்யத்தோடு அவரைச் சந்தித்தோம்.

காங்கிரஸ் கல்லடிபடுவது ஏன்?

''இலங்கைப் பிரச்னையில் சில கட்சிகள் நடந்துகொள்வதைப் பார்க்கும்போது அவர்கள் நோக்கம் காங்கிரஸைப் பலவீனப்படுத்துவதுதான் என்பது தெளிவாகவே தெரிகிறது. காங்கிரஸ் தலைமையிலான மத்திய அரசையும், தி.மு.க. தலைமையிலான மாநில அரசையும் அரசியல் ரீதியாக வீழ்த்தமுடியாத கோழைகள், இலங்கைப் பிரச்னையில் குழப்பத்தை ஏற்படுத்துகிறார்

ார் பாலிடிக்ஸ் பஜார் பாலிடிக்ஸ் பஜார் பாலிடிக்ஸ் பஜார் பாலிடிக்

“தமிழின உணர்வை மழுங்கடிக்கிறார் கலைஞர்!”

''காங்கிரஸுடன் எங்களுக்கு எந்தப் பிரச்னையும் இல்லை. ஆனால், முத்துக்குமார் தியாகத்தைத் தொடர்ந்து எழுந்த தமிழின உணர்வை, தமது அமைச்சர்களின் அறிக்கை மூலம் திசைதிருப்பி மழுங்கடிக்கிறார் கலைஞர்'' என்று குற்றம்சாட்டுகிறார் பா.ம.க. அமைப்புச் செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான வேல்முருகன்.

கருணாநிதி மீது கோபமா?

''1983, 1985ம் ஆண்டுகளில் ‘ஈழத் தமிழருக்காக எந்தவித தியாகங்களையும் செய்ய தி.மு.க. தயங்காது’ என்று தீர்மானம் போட்டார்கள். 25 வருடங்களுக்குப் பின்னேயும் அதையேதான் சட்டமன்றத்தில் சொல்கிறார் கருணாநிதி. ஆளும்கட்சியாக இருக்கும்போது வாய்களைப் பொத்திக்கொண்டு அடக்கி வாசிப்பதும், எதிர்க்கட்சியாக இருக்கும்போது, தன்னைவிட்டால் ஈழத் தமிழர்களுக்குப் போராட ஆளில்லை என்று ஆதரவைத் தேடிக்கொள்வதும் அவரது யுக்தி. தமிழகத்தின் பெரிய கட்சியின் தலைவராக இருப்பவர், அத்துடன் முதல்வராகவும் இருக்கின்ற கருணாநிதிக்கு, இலங்கையில் நடக்கும் போரை நிறுத்தி, இன அழிப்பைத் தடுக்கவேண்டிய பொறுப்பு எங்களைவிட அதிகமாக இருப்பதாகவே மருத்துவர் அய்யா சொல்கிறார்.

கள். தமிழர்களுக்கு உதவவேண்டும் என்பது அவர்கள் நோக்கமல்ல; சில குறிப்பிட்ட அரசியல் தலைவர்கள் தீட்டிய சதித்திட்டத்துக்கு காங்கிரஸ் கூட்டணியில் இருக்கும் பா.ம.க. துணை போகக் கூடாது!''

கை கொடுக்கும் காங்கிரஸ்!

''இடதுசாரி இயக்கங்கள் அணுசக்தி ஒப்பந்தத்தைக் காரணமாக வைத்து காங்கிரஸுக்குக் கொடுத்த ஆதரவை விலக்கிக்கொண்டன. ஆனால், அந்தப் பிரச்னையைத் தேர்தலின்போது, மக்களிடம் எடுத்துச்செல்ல அவர்களுக்குத் தைரியமில்லை. எனவே, தமிழகத்தில் இலங்கைப் பிரச்னையைக் கையிலெடுத்துக் கொண்டு, மூன்றாவது அணிக்குத் தளம் அமைக்கும் முயற்சியில் இறங்கியிருக்கிறார்கள். இதுபோல் ஒவ்வொரு மாநிலத்திலும் காங்கிரஸை எதிர்க்க சில பிரச்னைகளைத் தூக்கி நிறுத்துகிறார்கள். ஆனால், அவர்கள் முயற்சி எடுபடாது. காரணம், இலங்கைத் தமிழர்களின் நல்வாழ்வுக்காக காங்கிரஸைவிட வேறு யாரும் எதுவும், செய்துவிடவில்லை. தமிழர்களுக்காக, ராஜீவ்காந்தி தமது இன்னுயிரைக் கொடுத்தார். அந்தத் துயர சம்பவத்துக்கு முன் இலங்கை வான்வெளியில் நமது விமானங்கள் பறந்து, தமிழர்களுக்கு உணவுப் பொட்டலங்களைப் போட்டது எவ்வளவு தைரியமான செயல்? இந்தியாவில் தமிழக முதல்வருக்கு என்ன அதிகாரங்களோ அதே போன்ற அதிகாரங்களோடு இலங்கைத் தமிழர் பகுதியில் முதல்வரை அமர்த்த

“இலங்கை விவகாரத்தில் மத்திய அமைச்சரவையில் அன்புமணியின் செயல்பாடு என்ன என்பதை தமிழக மக்களுக்குத் தெரிவிக்க வேண்டும்!”

ஜார் பாலிடிக்ஸ் பஜார் பாலிடிக்ஸ் பஜார் பாலிடிக்ஸ் பஜார் பாலிடிக்



- வேல்முருகன் பாய்ச்சல்

இந்த வகையில் மத்திய அரசுடன் மோதல் ஏற்பட்டு ஆட்சிக்கு ஆபத்து ஏற்படுமேயானால், பா.ம.க. தி.மு.கவுக்குத் துணை நிற்கும் என்பதையும் மருத்துவர் அய்யா சொல்லியிருக்கிறார். இதைவிட வேறு என்ன வேண்டும்?''

காங்கிரஸுடன் என்ன பிரச்னை?

''மத்திய கூட்டணியில் தலைமைப் பொறுப்பை ஏற்றிருக்கும் காங்கிரஸுடன் எந்தப் பிரச்னையும் இல்லை. காங்கிரஸ் ஒரு பெரிய கட்சி. சிறிய கட்சியான எங்களால் அதைப் பலவீனப்படுத்த முடியாது. தி.மு.க. - காங்கிரஸ் கூட்டணியில் தற்போது பா.ம.க. இல்லை என்பதையும் காங்கிரஸ் தோழர்கள் உணர வேண்டும். இங்கிருக்கும் காங்கிரஸ் தலைவர்கள் மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுத்துப் போரை நிறுத்த, நடவடிக்கை எடுக்க வலியுறுத்த வேண்டும். தவிர இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கத்தின் கீழ் அனைவரும் ஒன்றுபட வேண்டுமென்று தி.மு.க. - காங்கிரஸ் கட்சிகளுக்கும் அழைப்பு விடப்பட்

வசதியாக ஒப்பந்தம் போட்டார்... இப்படி அடுக்கிக்கொண்டே போகலாம்! ஆனாலும், 57 வருடங்களாக இருந்துவரும் பிரச்னையை 57 நாட்களில் தீர்க்கச் சொல்வது அபத்தம். இந்தப் பிரச்னையில் தீர்வு காணும் தைரியமும் வாய்ப்பும் மத்திய அரசுக்கு மட்டுமே உண்டு. தேர்தலில் இதனால் காங்கிரஸ் கூட்டணிக்கு எந்த பாதிப்பும் வராது.''


* அன்புமணி

பா.ம.க.?

''காங்கிரஸ் - தி.மு.க.வைக் களங்கப்படுத்த ம.தி.மு.க., வலது கம்யூனிஸ்ட் இயக்கங்கள் முயற்சி செய்வதைப் புரிந்துகொள்ளமுடிகிறது. ஆனால் பா.ம.க. மத்திய அரசில் பங்கு வகிப்பதால் அதற்கென்று பொறுப்பு இருக்கிறது. காபினெட் அமைச்சராக அன்புமணி இருக்கிறார். மத்திய அரசு ஆயுதம் கொடுப்பதாகவும், ராணுவத்தை உதவிக்கு அனுப்புவதாகவும் குற்றச்சாட்டு. அமைச்சரவையில் ராணுவ அமைச்சரை இது பற்றி அன்புமணி ஏதேனும் கேட்டதுண்டா? இலங்கை விவகாரத்தில் அன்புமணியின் செயல்பாடுகளைத் தமிழக மக்களுக்கு விளக்க வேண்டிய கடமை பா.ம.க.வுக்கு உண்டு! அவர்கள் பதுங்கக் கூடாது!''

சட்டசபை சர்ச்சை?

''ராஜீவ் மரணத்தை காங்கிரஸ்காரன் என்றைக்கும் மறக்கமாட்டான். நான் சொன்னதன் சாராம்சம்: காங்கிரஸின் நீண்ட வரலாற்றில் மக்கள் பிரச்னைகளுக்காக, இந்திரா, ராஜீவ்... ஆகியோர் உயிரைக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால், அதற்காக பிரச்னைகளைத் தீர்க்காமல் காங்கிரஸ் நழுவி ஓடி விடாது.'' ●

ஜார் பாலிடிக்ஸ் பஜார் பாலிடிக்ஸ் பஜார் பாலிடிக்ஸ் பஜார் பாலிடி

டது. அவர்கள் இணைந்திருந்தால் இன்னமும் உறுதியாக தமிழகம் போராடியிருக்கும்.''

பா.ம.க. அமைச்சர்கள் ராஜினாமா?

''சட்டமன்றத்தில் போர் நிறுத்த தீர்மானம் போட்டதற்கு மருத்துவர் அய்யாதான் காரணம். அதேபோல அறிவாலயத்தில் அனைத்துக் கட்சிக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டதும் பா.ம.க. முயற்சியால் தான். அந்தக் கூட்டத்தில் 'பாராளுமன்ற உறுப்பினர்கள் ராஜினாமா செய்யவேண்டும்' என்று முடிவு எடுக்கப்பட்டது. 'தி.மு.க. பாராளுமன்ற உறுப்பினர்கள் ராஜினாமா செய்தால், அதைத் தொடர்ந்து பா.ம.க. உறுப்பினர்களும் ராஜினாமா செய்வார்கள்' என்று மருத்துவர் அய்யா சொன்னார். இலங்கைப் பிரச்னைகளுக்காக ஐம்பது ஆண்டுகளாகப் போராடிக்கொண்டிருப்பதாகப் பெருமைப்பட்டுக் கொள்ளும் கலைஞர், எந்தவித தியாகத்துக்கும் தயார் என்று சொன்ன கலைஞர், குறைந்தபட்சம் பாராளுமன்ற உறுப்பினர்களைக்கூட ராஜினாமா செய்யச் சொல்லாமல், கோழை போல் பின்வாங்கினார். மத்திய அரசில் அங்கம் வகிக்கும் பெரிய கட்சியே, இப்படி நடந்துகொண்டால், நாங்கள் மட்டும் ராஜினாமா செய்து என்ன நடந்துவிடப் போகிறது?


* கருணாநிதி

பா.ம.க. செய்தது என்ன?

''பிரதமருக்கும் சோனியாவுக்கும், பலமுறை மருத்துவர் அய்யா கடிதங்கள் எழுதிவிட்டார். நேரில் பார்த்து போர் நிறுத்தத்துக்கு இந்தியா குரல் கொடுக்கவேண்டும் என்று வலியுறுத்திவிட்டார். மத்திய அமைச்சர் அன்புமணி, வேலு

ஆகியோர் எங்கள் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் பலமுறை பிரதமரையும் சோனியாவையும் பார்த்து, இதேபோன்று கருத்தை வலியுறுத்தி வருகிறார்கள். மத்திய அமைச்சரவையை, சில அதிகாரிகள் தவறாக வழிநடத்தி, தமிழர்களுக்கு துரோகம் செய்வதையும் சுட்டிக்காட்டியாகி விட்டது. சிவசங்கரமேனன், பிரணாப் முகர்ஜி... இலங்கை சென்று வந்ததற்குப் பிறகுதான், மேலும் தமிழர்கள் கொன்று குவிக்கப்பட்டார்களே தவிர, பிரச்னைக்கு எந்தத் தீர்வும் வரவில்லை.''

> "இலங்கைப் பிரச்னையில், ஆளுங்கட்சியாக இருக்கும்போது ஒரு நிலைப்பாடு; எதிர்க்கட்சியாக இருக்கும்போது வேறொரு நிலைப்பாடு என்பதுதான் கலைஞர் யுக்தி!"

பொன்முடி அறிக்கை?

''இலங்கைப் பிரச்னை கொழுந்துவிட்டு எரியும் இந்தத் தருணத்தில், 'ராஜினாமா செய்யத் தயாரா?' என்று எங்களுக்கு பொன்முடி சவால் விடுகிறார். நாங்கள் தயார்; நீங்கள் தயாரா? ஆனால் அடுத்து நடக்கும் இடைத்தேர்தலை, 'திருமங்கலம்' போல நடத்தக்கூடாது. யாரும் பிரசாரத்துக்குப் போகாமல் மீடியா மூலமே பிரசாரம் நடத்தி, தேர்தல் நடத்த வேண்டும். ரெடியா? குடும்ப அரசியல் என்று எங்களைப் பார்த்துச் சொல்கிறார் மத்திய அமைச்சர் ராஜா? இவர் என்னதான் திசைதிருப்பினாலும், நாடு 'ஸ்பெக்ட்ரம்' ஊழலை மறக்கக்கூடாது. மகன்களும், மகள்களும், பேரன்களும், பேத்திகளும் இவருக்குத் தலைவர்களாக இருக்க, கண்ணாடி வீட்டிலிருந்து எங்களைப் பார்த்து கல்வீசுகிறார்.''

- ப்ரியன்

விமர்சனம்

இயந்திரமயமான நகர வாழ்விலிருக்கும் ஒருவனைக் கடத்தி, யாருமற்ற மௌன அடர்வனத்தில் விட்டுவிட்டால், முதலில் பயமும் மிரட்சியும் வரும். அந்தப் படபடப்பு குறைந்தபின் தப்பிக்கும் வழி தேடும். வழி தெரிந்த பிறகு பதற்றம் தணிந்து மனம் காட்டின் அம்சங்களை ரசிக்கத் துவங்கிவிடும். அதுபோலத்தான்...

வழக்கமான... குஷிபடுத்தும் குத்துப்பாட்டு, மொக்கையான ரசனைக்கு கட்டாயப்படுத்தும் டூயட் ஸாங், காதில் பூக்கூடையை வைக்கும் ஃபைட், கிச்சு கிச்சு மூட்டும் காமெடி டிராக், "காதல், காதல், காதல். காதல் போயின் சாதல்" என்று மகாகவியைக் கொச்சைப்படுத்திவரும் கோலிவுட் ஸ்பெஷல் மசாலா... இவை எதுவுமின்றி அறியப்படாத இரு பிரதேசங்களுக்குத் தமிழ் ரசிகனைக் கடத்தியுள்ளது 'நான் கடவுள்'.

பிரதேசம் ஒன்று: வலியும் கண்ணீரும், அன்பும் கிண்டலும் நிரம்பித் ததும்பும் பிச்சைக்காரர்கள். அவர்களை முடமாக்கி வெறும் 'உருப்படி'யாகவே பாவித்து, கொடுமைப்படுத்திப் பிச்சையெடுக்க வைத்துப் பெருந்தொழில் நடத்தும் தாதாக்களின் பிடியிலிருக்கும் பிச்சைக்காரர்களின் உலகம்.

பிரதேசம் இரண்டு: வடக்கே காசியில் எரியும் பிணங்களுக்கு நடுவே ஒற்றைக் காலில் நின்று யோகம் செய்யும் 'நானே கடவுள்' என அறிவித்து, கட்டுப்பாடற்று சராசரி வாழ்விலிருந்து விலகி நிற்கும் சாமியார்களின் உலகம்.



இந்த இரண்டு உலகங்களுக்கு ரசிகனை அழைத்துச் செல்ல ஒரு கதையும் லாஜிக்கான ஆதாரச் சரடும் வேண்டும்.

கதை: காசியிலிருந்து தம் ஊருக்கு வரும், தன்னைக் கடவுளாக அறிவிக்கும் ருத்ரா பிச்சைக்காரர்களைக் கொடுமைப் படுத்தும் தாதாக்களை வதம் புரிகிறார். மீண்டும் காசிக்கே செல்கிறார். போலீஸும் கோர்ட்டும்கூட மனித கடவுளை (ருத்ரா) கைது செய்ய முடியாமல் கையாலாகாமல் கைகட்டி நிற்கிறது.

மையச் சரடு: வாழ முடியாதவனுக்கு மரணம் வரமாக அமையும். வாழத் தகுதியற்றவர்க்கு மரணம் தண்டனையாக மாறும். குருட்டுப் பிச்சைக்காரி பூஜாவுக்கு கருணைக் கொலையை வரமாகவும் வில்லன் ராஜேந்திரனுக்கு அகோர மரணத்தை தண்டனையாகவும் அளிக்கிறான் ருத்ரா.

பிளஸ்:

* துயரத்தின் உச்சத்தில் கடவுளைக் கெட்ட வார்த்தையில் கவிஞர் விக்கிரமாதித்தியன் திட்டும்போது தியேட்டரில் விசில் சப்தம் பறவையாய் மாறிப் பறக்கிறது. அது நாஸ்திகக் கூச்சல் அல்ல. காட்சியின் வலியை உணர்ந்த ரசிகனின் துயரத்தில் வந்த ஆடியோ சர்டிபிகேட். இம்மாதிரி காட்சிகள் நிறைய...
* கும்மியடிக்கும் சென்டிமென்ட் அலியாக காட்டிய கோலிவுட் சினிமாவில் முக்கிய வேடத்தில் வலம்வருகிறார் 'திருநங்கை' கீர்த்தனா.
* இந்து மதத்திலிருந்து கிறித்துவத்துக்குப் போகும் குருட்டுப் பிச்சைக்காரி பூஜாவுக்கு ஜெபிக்கும்போது அடி இன்னும் கூடுதலாகிறதே தவிர குறையவில்லை. க்ளைமாக்ஸில் எல்லா மதத்துக் கடவுள்களையும் குற்றவாளிக் கூண்டில் ஏற்றும் பூஜாவின் நடிப்பை, 'பெரியாரே' பாராட்டுவார்.
* ஆர்யாவின் கெட்-அப்பும் வில்லனின் நடிப்பும் அபாரம்.

நான் கடவுள்

மைனஸ்:

✱ படம் முழுக்க கஞ்சா போதையையும் தியான மயக்கத்தையும் பிரித்துக் காட்டாமல் ருத்ராவைப் போதைக்காரனாக நினைக்கவைக்கும் அபாயம்.

✱ ''இவ்வளவு நாளா சாப்பிடாமலா இருந்த... உடம்பைப் பாரு, நல்லா குப்பைத் தொட்டியாட்டம்'' என்று சாப்பிட அழைக்கும் தாயின் கண்ணீரை உதாசீனப்படுத்துகையில், மனித அந்தஸ்திலிருந்தே ருத்ராவைக் குறைத்து விடுகிறது.

✱ கொஞ்சம் இழுவையான திரைக்கதை.

இவற்றையெல்லாம் கடந்து செல்ல உதவுகின்றன, எரிகிற பிணத்தின் தீயைக் கூட அழகிய நவீன ஓவியமாய் காட்டும் ஆர்தர் ஏ.வில்சன் கேமரா, காதுகளை கௌரவப்படுத்தும் இளையராஜாவின் பின்னணி இசை, இதற்கு முன்பே பிச்சைக்காரர்களின் வாழ்வை ஏழாவது உலகமாக எழுத்தில் வரைந்து காட்டிய நாவலாசிரியர் ஜெயமோகனின் காரமான வசனம் - இவை படத்தின் மாய ஹீரோக்கள்.

ஜட்ஜ்மென்ட்: ஜிகினாக்கள் மின்னும் பிரதேசத்தில் ஒரு மின்மினிப் பூச்சியாய் ஜீவ வெளிச்சம் பாய்ச்சும் இந்தப் படம் வருங்கால முயற்சிக்கு ஒரு வரம்.

மௌனம் சாதித்து மழுங்கிப் போன ரசனையால், இதை வரவேற்காமல் விட்டுவிட்டால் அது ரசனையின் மீது விழும் சாபம்.

புதிய அனுபவத்துடன் கனத்த இதயத்தோடு படம் பார்த்து வெளியேறுகையில் நமக்குள்ளும் கடவுள் கண் விழித்து உறுத்தத் தொடங்கி விடுவதை மறுக்கமுடியாது.

- அமிர்தம் சூர்யா



ஜாலி எலெக்ஷனுக்காக ரெண்டு காலேஜ்க்கு விசிட் செஞ்சோமில்ல... அப்போ ஊறுபட்ட சரக்கு போரு போட்டு வெச்சா மாதிரி அவங்களோட திங்கிங்ஸைக் குவிச்சுட்டாங்க! C.T.T.E. காலேஜ் செதுக்கல் இடது பக்கமும், R.B.கோத்தி ஜெயின் காலேஜ் கலக்கல் வலது பக்கமும் ஆரவாரமா கொறிக்க அச்சாகியிருக்கு... ஹார்லிக்ஸ் சில்ட்ரனா மாறி அப்படியே சாப்பிடுங்க...



வாழ்க்கை என்பது நீ சாகும் வரை அல்ல. மற்றவர்கள் மனத்தில் நீ வாழும் வரை...

- ரம்யா

காலேஜ்

ரீமிக்ஸ் ஸாங்

செமஸ்டர் நெருங்குதே
டென்ஷன் எகிறுதே
புக்கு சுருங்குதே
பிட்ல அடங்குதே
சின்சியரா படிச்ச ஒவ்வொரு சப்ஜெக்டும்
டோட்டல்ல சேர்ந்துடுதே
கடைசியா அரியர்ஸ்ல முடிச்சுடுதே.

- மூ.கௌசல்யா

(இது 'அடியே கொல்லுதே' பாடலின் ரீமிக்ஸாம்... அட தேவுடா...)



ஒரு தேக்கரண்டி பாலுடன் சில துளி கிளிசரின் மற்றும் ரோஸ்வாட்டர் சிறிதளவு சேர்த்தால் பொலிவு பெறும்.

- ஆர். சூர்யகுமாரி



வாழ்க்கை

சிவப்பு மனிதனுக்கும்
நிழல் கறுப்புதான்
கறுப்பு மனிதனுக்கும்
இரத்தம் சிவப்புதான்
வண்ணங்களில்
இல்லை வாழ்க்கை
உங்கள் எண்ணங்களில்
மிளிர்வதே வாழ்க்கை!

- மோ.நந்தினி






S.M.S ஏரியா

நான் உன் மேல வெச்சிருக்கிற பாசம் வெங்காயம் மாதிரி. அதை வெட்ட நினைத்தால் உனக்கு கண்ணீர்தான் வரும்.

காதலும் ஒரு இசைதான். காதலித்துப் பாருங்கள். சங்கு ஊதுவாங்க!

- எம்.பஷீரா பேகம்





'படி'ராணி...

"**தா**த்தா, இனிமே கம்ப்யூட்டர் படிச்சாதான் வேலை கிடைக்குமாம்"

"அப்போ நீ படிச்சா வேலை கிடைக்காதா?"

"நீ பொக்கை தாத்தா இல்ல... மொக்க தாத்தா."





காதல்

புலன்களின் பசி
இருட்டைப் போர்த்தி
அர்த்தமற்றதாக்குகிறது!
ஆண் பெண் வித்தியாசத்தை.

-ஆர். குமுதினி



உங்ககிட்ட காசு இருந்தா call taxi
காசு இல்லேன்னா காலே தான் taxi
(யாரும் லிஃப்ட் கேக்காம இருந்தா சரி...)

எவ்வளவு பெரிய வீராங்கனையா இருந்தாலும், குளிர் அடிச்சா திருப்பி அதை அடிக்க முடியாது. கரெக்ட்டா?

தொகுப்பு : நளினி சம்பத்குமார்,

நீ நடந்தால்

உடை எவ்வளவு முக்கியமோ நடையும் அவ்வளவு முக்கியம். ஒருத்தர் நடக்கும் ஸ்டைலை வைத்தே ஆள் எப்படி எனச் சொல்லிவிட முடியும். நடையில்தான் எத்தனை வகை... ராஜ நடை, அன்ன நடை, விறு நடை.... எனச் சொல்லிக் கொண்டே போகலாம். ஆனால் இன்றைய காலகட்டத்துக்கு தேவை கான்ஃபிடன்ட் நடை. தன்னம்பிக்கையுடன் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியுமே 'இவர் வித்தியாசமானவர்' எனச் சொல்ல வைக்கும். நடை, உடை, பாவனை... என்பதில் நடைதான் முதலில்!



● முதற்கட்டமாக, நடக்கும்போது முகவாய்க் கட்டை தூக்கியிருக்க வேண்டும். நிலம் பார்த்து நடப்பேன் என்று வீம்பாக கீழே பார்த்து நடந்தால் 'அநியாயத்துக்கு வெட்கப்படும் பர்ஸனாலிட்டி', 'எதிலுமே பற்றற்றவர்' என்ற பிரமை ஏற்படும்.

● உங்களுடைய தோள்கள் நடக்கும் போது பின்னால் இருக்குமாறு பார்க்கவும். கூன் போடக் கூடாது. முதுகு வளைந்தால் தொப்பை விழும். உங்களைக் குண்டாகக் காண்பிக்கும்.

● பெரிய பெரிய அடியாக எடுத்து வைக்கவும். சின்னச் சின்ன அடியாக எடுத்து வைத்தால் உங்களைச் 'சந்தேக பார்ட்டி' என எண்ண வைக்கும்.

● நடக்கும் போது சுற்றி என்ன நடக்கிறது என்பதைக் கண்டிப்பாகப் பார்க்க வேண்டும். நட்சத்திரம், நிலவு, ஃபேன், ஒட்டடை, பால்கனி... என்ற ரீதியில் பார்த்து நடக்கக் கூடாது.

● ஆபீஸாக இருந்தாலும், சாலையில் இருந்தாலும், நடக்கும்போது பக்கத்தில் கடந்து போகும் மனிதர்களிடம் ஒரு 'ஐ கான்டாக்ட்' வேண்டும். இதனால் நட்பு, சிநேக பாவம் வளரும்.

● கான்ஃபிடன்ட் நடை மாத்திரம் போதாது, முகத்தில் புன்சிரிப்பு மாட்ச் செய்ய வேண்டும். அப்போதுதான் டபுள் பவர்.

● ஒவ்வொரு முறை நடக்கும்போதும் 'நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை' என்பதை நினைவில் கொள்ளவும். (தீர்க்கதரிசி கவிஞன்!)

ஹை ஹீல்ஸில் நடப்பது எப்படி எனத் தவிக்கும் இளம் பெண்களுக்குச் சில டிப்ஸ்:

● முதலில் ஹைஹீல்ஸில் நின்று பிராக்டிஸ் செய்யவும். கண்ணாடிக்கெதிரே

நடக்கும்போது பெரிய பெரிய அடியாக எடுத்து வைக்கவும். சின்னச் சின்ன அடியாக எடுத்து வைத்தால் உங்களைச் 'சந்தேக பார்ட்டி' என்று எண்ண வைக்கும்!

நின்று பார்த்தால்தான் உங்களுக்குப் பழகும்.

● வெறுந்தரையில் ஹைஹீல்ஸ் போட்டு நடக்கவும். கார்ப்பெட் அல்லது வழுக்கும் தரையில் நடக்கக்கூடாது.

● முதலில் சின்ன ஹீல்ஸாக வாங்கிப் போடவும். இரண்டு இன்ச் போதுமானது.

● ஸ்டிலெட்டோ, ஸ்பைக் ஹீல்ஸ், பாயின்டட் போன்ற ஹைஹீல்ஸ் நன்றாகப் பழக்கப்பட்ட பிறகே போடவும்.

● நடப்பதற்குச் சிரமப்பட்டு தாறுமாறாக நடக்கக் கூடாது. குதிகால் வலி, இடுப்பு வலியுடன் ஹைஹீல்ஸ் போடக்கூடாது. 'ஃபேஷன் பண்ணிப்பேன் வலி இருந்தாலும்' என அடம்பிடித்து நீங்கள் போட்டாலும், முகம் காட்டிக் கொடுத்துவிடும்.

● முதன்முதலாகப் போட்டு நடக்கும்

நடையழகு!

போது சறுக்கி விழுந்து விடுவோம் போலத் தோன்றும். அதற்குத்தான் ப்ராக்டீஸ் தேவை. வீட்டில் போட்டுப் போட்டு நடந்து கான்ஃபிடன்ஸ் வந்த பிறகே வெளியில் செல்லவும்.


● உங்களுடைய வேலைக்கேற்றாற்போல் ஹைஹீல்ஸின் உயரம் இருத்தல் நலம். அதிக நேரம் நிற்க வேண்டுமானால், சீட்டில் உட்காராமல் ஓடிக் கொண்டேயிருக்கும் வேலையானால் உயரக் குதிகாலணி தேவையில்லை.

● ஹைஹீல்ஸுடன் மாடிப்படி ஏறும் போது ஓரமாகவே நடக்கவும். தடுக்கினால் சடக்கென்று பிடித்துக்கொண்டு விடலாம்.

● மாடல் போல் நடக்க வேண்டும், கேட்வாக் பண்ண வேண்டும் என்ற ஆசையில் ஹைஹீல்ஸ் வாங்கிப் போடும் பெண்கள், மாதக்கணக்காக அசுரப் பயிற்சி செய்யும் மாடல்களை முதலில் நினைவுகொள்ள வேண்டும். சும்மா காப்பியடிக்கக் கூடாது.

● கடையில் போய் வாங்கினோம், போட்டுக் கொண்டு நேரா பார்ட்டிக்குப் போனோம் என்பது ஹைஹீல்ஸுக்குப் பொருந்தாது. ப்ராக்டீஸ் ப்ராக்டீஸ்...

- லதா சேகர்





கல்கி



2009 பிப்ரவரி 22
ஸர்வதாரி மாசி 10
மலர் : 67
இதழ் : 30

தமிழ்த்திரு
நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா - *பாரதியார்*

அயோத்யா அபாயம்!

ராமர் கோயிலை மீண்டும் தூசி தட்டி எடுத்து வைத்துள்ளது பா.ஜ.க. ஆனால், அதன் துரதிர்ஷ்டம், அதே சமயம் பார்த்து, கல்யாண் சிங் பாப்ரி மஸ்ஜித்தைத் தகர்த்ததற்காக தார்மிகப் பொறுப்பு ஏற்றுக் கொண்டிருக்கிறார்! காங்கிரஸ் மாநாட்டில், ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசுதான் மதச் சார்பின்மையை மீட்டுக் கொடுத்ததாக சோனியா காந்தி பேசியிருக்கிறார்!

மக்களின் பிரச்னைகளைப் பல விதங்களில் தீர்த்து வைத்து வோட்டு பெற, அரசியல் கட்சிகளுக்கு இங்கே ஏராளமான வாய்ப்புகள் காத்திருக்கின்றன. ஆனால், அவற்றையெல்லாம் விட்டுவிட்டு, ஜாதி-மத உணர்வுகளைத் தூண்டும் குறுக்கு வழியைத்தான் ஒவ்வொரு தேர்தலின்போதும் கட்சிகள் மேற்கொள்கின்றன.

கட்சிகளுக்கு மாறுபட்ட கொள்கைகள் இருப்பதைத் தவிர்க்க முடியாது. அந்த மாறுபாடே ஆரோக்கியமான விவாதங்களுக்கும் அதன் பயனான வளர்ச்சிக்கும் வழி வகுக்கும். இங்கேயோ, அந்த மாறுபாடுகள் பரஸ்பரத் தாக்குதலுக்கு மட்டுமே பயன்படுகின்றனவேயொழிய, வளர்ச்சிக்கு அல்ல!

"ராம ஜன்ம பூமியில் ஏன் ராமர் கோயில் கட்டக் கூடாது என்பதற்கு இதுவரை யாராலும் நம்பத் தகுந்த காரணம் தர முடியவில்லை. ஆகவே, பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தால் அப்பணியை மேற்கொள்ளும்" என்று சூளுரைக்கும் அத்வானிக்கு, ஹிந்து - முஸ்லிம் ஒற்றுமை பாதிக்கப்படும்; இந்தியாவின் ஒருமைப்பாடு அச்சுறுத்தப்படும்; சர்வதேச





அளவில் பாதகமான விளைவுகள் ஏற்படும் என்பனவெல்லாம் நம்பத் தகுந்த காரணங்களாகத் தோன்றாமல் போனது எப்படி? நரேந்திரமோடிக்கு விஸா தர மறுத்த அமெரிக்கா, நாளை இந்தியப் பிரதமரை வரவேற்க மறுக்கும் சூழல்கூட உருவாகலாம். தார்மிக அடிப்படையிலும், தொலைநோக்கு அடிப்படையிலும் பா.ஜ.க.வின் ராமர் கோயில் திட்டம் உகந்தது அல்ல.

பா.ஜ.க. தனது ஹிந்து சார்பை எத்தனையோ ஆக்கபூர்வமான வழிகளில் வெளிப்படுத்த முடியும். நாட்டின் ஹிந்து கோயில்களைப் புனருத்தாரணம் செய்ய உதவலாம்; அவற்றை நன்கு பராமரித்து, மதித்துப் போற்ற மக்களிடையே விழிப்புணர்வு இயக்கம் நடத்தலாம். இன்று ஹிந்து கோயில்களை அசுத்தத்தாலும் அலட்சியத்தாலும் நாசம் செய்யும் புண்ணியவான்களாக ஹிந்துக்களே இருக்கிறார்கள். வழிபாடு நடத்த வந்த இடத்தில் வடுக்களை விட்டுச் செல்கிறார்கள். இவர்களைச் சீர்திருத்தி, நமது தொன்மங்களைக் குறித்துப் பெருமிதம் கொள்ளக் கற்றுத் தந்தாலே, ஹிந்து மதம் பலப்பட்டு விடும். இறை உணர்விலும் தொன்மங்களிலும் நம்பிக்கை கொண்ட ஓர் அரசியல் அமைப்பு இதைச் சிறப்பாகச் செய்ய முடியும். அதன் மூலம் மக்களின் நன்றியறிதலையும் பெற முடியும். ஆனால், தொன்மங்களைக் காக்கும் போர்வையில், அநாகரிகமான பண்பாட்டுப் போலீஸ் வேலைதான் இங்கே நடைபெறுகிறது!

எந்த மதத்துக்கும் அகச்சீரமைப்பு இருக்கிறவரை அபாயம் ஏற்படாது; அழிவு நிகழாது. இதனை மனத்தில் கொண்டு, அகச்சீரமைப்பைப் பலப்படுத்துவதற்குப் பதிலாக பா.ஜ.க., ஹிந்து மதத்தின் காவலனாகத் தன்னை முன்னிலைப்படுத்திக் கொண்டு, அரசியல் ஆதாயம் தேட முற்படுகிறது. அதனை ஆதரிக்கும் சங் பரிவார் அமைப்புகளோ, பிற மத துவேஷத்தை வளர்க்கின்றன. இந்தப் போக்கு பா.ஜ.க.வைக் காப்பதற்குப் பதில் கவிழ்ந்துவிடும்.

ராம ராஜ்யம் என்பது உண்மையான மதச்சார்பின்மையை உள்ளடக்கிய உன்னத அரசாங்கம். இதை உணர்ந்தால், அத்வானி அண்ட் கோ, அயோத்தியா அஜெண்டாவைக் கைவிட்டுவிட்டு, அனைத்திந்திய மேன்மைக்கான ஒற்றுமை அஜெண்டாவை மேற்கொள்வர். ●

இனி 'மதுரை மீனாட்சி' கோயிலை அச்சு அசலாய் காசியிலும் பார்க்கலாம். தொழிலதிபர் பொள்ளாச்சி நா.மகாலிங்கத்தின் 'அருட்ஜோதி ஃபவுண்டேஷன்' சார்பில் மதுரை மீனாட்சி கோயிலைப் போன்று மற்றொரு கோயிலை நிர்மாணிக்கும் பணியில் ஈடுபட்டுவருகிறார் மூத்த சிற்பக்கலை வல்லுநர் டாக்டர் வை. கணபதி ஸ்தபதி. சமீபத்தில் இந்திய அரசின் பத்மபூஷன் விருது பெற்ற அவரிடம் பேசினோம்...

காசிக்குப் பயணமாகும் மீனாக்ஷியை எப்படி உருவாக்குவீர்கள்? அதற்கு விசேஷமான கல் தேவையா? மீனாக்ஷியின் அளவு எவ்வளவு?

''குறளில் இருக்கும் முப்பாலைப் போல மூன்று கேள்விகள். சரி சொல்றேன்... சிற்பம் இறைவனைப் பிரதியெடுக்கும் பிரதிமா விஞ்ஞானம். இது கலைக்கு அப்பாற்பட்ட விஞ்ஞானம். இறைவனை விஞ்ஞானமயமாக்கி 'இடங்கால கணக்கு'ப்படி வடிவங்களை உருவாக்குவோம். கற்களிலே ஆண் கல், பெண் கல், அலி கல் என்று மூன்று வகை உண்டு. ஒவ்வொரு கல்லைத் தட்டினால் வரும் ஓசையும் அதிலிருந்து வெளிப்படும் 'வேவ் ஆஃப் எனர்ஜி'யும் வெவ்வேறானவை. இவற்றைக் கணக்கெடுத்து, கல்லைத் தட்டினால் பெண்ணின் குரல் போல மெல்லியதும் நீண்டு ஒலிக்கக்கூடியதுமான 'பெண் கல்'லிலிருந்து மீனாக்ஷியைப் பிரதி எடுப்பேன். கோயில் வடிவமும் சிலையும் ஒத்துப்போகும் அளவிலே மீனாக்ஷி இருப்பாள். காசிக்குப் போனாலும் நீங்கள் மதுரையைப் பார்க்கலாம்.''

காசிக்கு மீனாக்ஷி போனால் விசாலாக்ஷிக்கு மதிப்பு குறையாதா?

''ஒரு மகான் இருக்கும்போது இன்னொரு மகான் வந்தால் மற்றொரு மகானுக்கு மதிப்பு போய்விடுமா என்ன? இது தமிழனின் கலையை வடக்கே பரிமாறுகிற முயற்சி. இறை பிரமாண்டத்தை நமது சிற்பக் கலை மூலமாக வடக்கே நகர்த்தி உலகத்தை வியக்க வைக்கும் பணி.''

இந்தச் சிற்பங்களுக்கான கல்லை எங்கிருந்து எடுப்பீர்கள்? காசிக்கு எப்படிப்

காசியில் மீனாட்சி!



போகும்?

''வாலாஜாபாத் அருகே உள்ள பட்டுமலை குப்பத்திலிருந்து கல்லெடுப்போம். கல்லை பாலீஷ் செய்தால் பட்டு போல் மின்னும் மலையைக் கொண்ட இடம் என்பதால்தான் இப்பெயர். பணி முடிந்த பின் சாலை வழியாக மட்டுமல்ல, வான்வழிப் போக்குவரத்திலும் சிலைகள் காசிக்குப் போகும். இன்னும் ஐந்து வருடத்தில் காசியில் மீனாக்ஷியும் இருப்பாள்.''

கோயில்கள் பெருகுகிற அளவு பக்தி பெருகுகிறதா?

''நெஞ்சிலிருக்கும் அலைவரிசையும் சிலையிலிருக்கும் அலைவரிசையும் நேர்க்கோட்டில் இணைந்தால் பக்தி வரும். கண் வழியாகத்தானே மனத்துக்கு அந்த அலைவரிசை போகும். இவந்தான் கோயிலுக்குப் போனா கண்ண மூடியில்ல சாமி கும்பிடறான். இது அபத்தம். கண்ணைத் திறந்து சிலையின் அழகை அலைவரிசையோடு மனத்தால் விழுங்க வேண்டும். எப்படி வணங்குவது? வணங்குவதிலுள்ள அர்த்தம், பயன் - இவை தெரியாத போது எவ்வளவு கோயில் வந்தாலும் பலன் ஒன்றுமில்லை. தமிழ்நாட்டில் உள்ளவை கோயில்கள் அல்ல - அது விண் ஞானக் கலைக்கூடங்கள். இதை அறியாதவரை மூடநம்பிக்கைதான் பெருகும். தெருவுக்குத் தெரு முளைக்கும் கோயில்கள் சோம்பேறித்தனத்தின் வெளிப்பாடு. மரபுமிக்க விஞ்ஞானத்தை உள்ளடக்கிய கோயிலை நாடிப் போகாதவர்களின் வேலை இது.''

இன்றைய அரசு மற்றும் நாளைய சிற்பி பற்றிய நிலையைக் கூற முடியுமா?

''வள்ளுவர் கோட்டம் வடிவமைக்கும் பணியின் போது ஆயிரம் பேர் இருந்தனர். இப்போது சிற்பிகள் நூறு பேர்தான். சிற்பம் பயில்பவருக்குப் போதிய வேலை வாய்ப்பும் மதிப்பும் இல்லை. இந்நிலை இன்னும் மோசமாகலாம். இதுதான் சிற்பியின் நிலை. வரலாற்றில் எந்த மன்னனும் செய்யாத, எந்த அரசும் செய்யத் துணியாத மாபெரும் முடிவு சிதம்பரம் கோயிலை அரசு எடுத்த செயல். முதல்வரை நாத்திகர் என்கிறார்கள். இல்லை; அவர் ஆத்திகர்களின் தலைவன். இது இன்றைய அரசு பற்றிய என் கருத்து.''

- அமிர்தா





- கணபதி ஸ்தபதி பேட்டி

ஆட்டம் காணும் அச்சுதானந்தன்!



கேரளா

கம்யூனிஸ்ட் அட்டாக்

கேரளாவில் இருக்கும் பனையார் நீர் மின்நிலையப் பராமரிப்பு சம்பந்தப்பட்ட 375 கோடி ரூபாய் ஊழல் வழக்கில், சி.பி.ஐ. விசாரணை சூடுபிடித்திருக்கிறது. அதே சமயம் சி.பி.எம். கட்சிக்குள்ளேயும் கோஷ்டிப் பூசல் சூடுபிடித்திருக்கிறது. ஊழலில் சிக்கி, சி.பி.ஐ.யால் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளவரான பினரயி விஜயன் தற்போது கேரள மாநில சி.பி.எம். கட்சியில் செயலாளராக இருக்கிறார். அவருக்கும், கேரள முதல்வர் அச்சுதானந்தனுக்கும் இடையிலான மோதல் உச்சத்தை அடைந்துள்ளது. கட்சியின் மத்திய தலைமையின் பலமான சப்போர்ட் விஜயனுக்கு என்பதால், அவர் ரொம்ப தெம்பாக இருக்கிறார். அச்சுதானந்தனோ இறங்கி வருவதாக இல்லை. அண்மையில் விஜயன் நடத்திய மாநிலம் தழுவிய யாத்திரையைச் சாடினார் அச்சுதானந்தன். முதலமைச்சர் கலந்து கொள்ளாததால் ஒன்றும் குடிமூழ்கிப் போய்விடாது என்று நெருப்பு அறிக்கை விட்டார் விஜயன்.

(கம்யூனிஸ்ட் ரெண்டுபட்டா காங்கிரஸுக்குக் கொண்டாட்டம்!)

விவசாய டூரிஸம்

உலகின் பல பாகங்களிலிருந்து டூரிஸ்ட்கள் ஆயுர்வேத மசாஜுக்காக கேரளா வருகிறார்கள் என்றால், அமெரிக்காவின் விர்ஜினியா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்தவர்கள் மாடு பூட்டி ஏர் உழவும், நாற்று நடவும், பூச்சி மருந்து தெளிக்கவும் அண்மையில் கேரளா வந்தார்கள். அமெரிக்க மாணவர்கள், தங்கள் கள அனுபவப் படிப்பின் ஒரு பகுதியாக மூன்று


நாட்கள் கேரள கிராமத்து மக்களின் வீடு களில் தங்கினார்கள். அயல்நாட்டுச் சுற்று லாப் பயணிகளைக் கவர இதுபோல 'விவசாய டூரிஸம்' திட்டத்தை அறி முகப்படுத்தும் யோசனையில் இருக்கிற தாம் கேரள டூரிஸம் போர்டு.

* பினராயி விஜயன்



* அச்சுதானந்தன்





அக்கம் பக்கம்

(வயலில் வேலை செய்துவிட்டு மசாஜுக்குப் போனால் சும்மா இதமாயிருக்குமில்ல?)

சி.பி.ஐ. ஆஃபீஸர்

மம்மூட்டி அதிரடி சி.பி.ஐ. அதிகாரி யாக நடித்த 'ஒரு சி.பி.ஐ. டைரிக் குறிப்பு' சூப்பர் ஹிட். அதன் பிறகு சி.பி.ஐ. இமேஜை அதிகமாக்கும் வகையில் ஜாக்ரதா, நேரரியான் சி.பி.ஐ., சேதுராம ஐயர் சி.பி.ஐ. என்று அடுத்தடுத்து படங்கள் வந்தன. சமீப காலமாக அதுபோன்ற படங் கள் வரவில்லை. என்ன காரணம்? கேரளாவில் சி.பி.ஐ. புலன் விசாரித்த கேஸ்களில் எல்லாம் கடைசியில் குற்ற வாளிகள் விடுதலையாகி விடுவதுதான் என்கிறார்கள் மல்லுவுட்காரர்கள்.

(இதுபத்தி ஒரு சி.பி.ஐ. விசாரணை உடனடியாகத் தேவை!)

குஜராத்தைப் பாருங்க!

''**மா**நில முன்னேற்றத்தில் குஜராத் முதல்வர் மோடியை கேரளா முன்னு தாரணமாகக் கொள்ள வேண்டும்'' என்று துபாயில் பேட்டி அளித்தார் கேரளாவைச் சேர்ந்த மார்க்சிஸ்ட் கட்சி எம்.பி.யான அப்துல்லா குட்டி. பா.ஜ.க.வுக்கும், கம் யூனிஸ்ட்களுக்கும்தான் ஏழாம்பொருத்த மாயிற்றே! இப்படிச் சொன்ன அந்த எம்.பி.யைச் சும்மாவிடுவார்களா? கட்சி யிலிருந்து சஸ்பெண்ட் செய்துவிட்டார்கள்.

(அப்படீன்னா அப்துல்லா குட்டிக்கு தாமரைக் கட்சியில் காவி கார்ப்பெட் வெல்கம்தான்!)

– கௌதம் ராம்

சமீபத்தில் அறிவிக்கப்பட்ட இந்திய அரசின் பத்ம விருதுகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்த பதினான்கு பேருக்கு விருதுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அவர்களில் பெயர் மட்டும் பரிச்சயமாகி 'முகம்' அவ்வளவுக்கு பரிச்சயமாகாத நிபுணர்களும் அவர்களின் செயல்பாடுகளும் இதோ...




சி.எஸ்.சேஷாத்ரி (பத்மபூஷன்):

வலைத்தளத்தில் போய் காஞ்சிபுரம் ஸ்ரீரங்காச்சாரி சேஷாத்திரி என்று தட்டி விட்டால் வரும் தகவல்கள் பிரமிக்க வைக்கும். கணிதமேதை ராமானுஜத்துக்கு அப்புறம் கொண்டாடப்பட வேண்டிய இவர், இப்போது சென்னை கணித நிறுவனத்தின் இயக்குனர். ராமானுஜம், நம்பர் தியரியில் அசத்திக் காட்டினார்; சேஷாத்திரி அல்ஜீப்ராவில் பட்டையைக் கிளப்புகிறார். இன்று அல்ஜீப்ரா கணித ஆராய்ச்சியில், பல தடங்கள் பதித்து உலகத்தரத்தில் இந்தியாவின் பெருமையைத் தலைநிமிர வைத்திருக்கும் தமிழன்.

ஏ.சக்திவேல் (பத்மஸ்ரீ):

பின்னலாடை ராஜ்யத்தின் மன்னர். திருப்பூர் ஏற்றுமதியாளர் சங்கத்தின் தலைவர். பொருளாதார உருக்கம், திருப்பூருக்கு ஏற்படுத்தப் போகும் தாக்கத்தை முன்னரே மோப்பம் பிடித்து, பின்னலாடை ஏற்றுமதியாளர்களை எச்சரித்தவர். இவரது முன் ஜாக்கிரதை காரணமாக, அதிகம் கையைக் கடித்துக் கொள்ளாமல் தப்பியிருக்கிறார்கள் ஏற்றுமதியாளர்கள்.





சரோஜினி வரதப்பன் (பத்மபூஷன்):

இப்போது இவரைப் பற்றிச் சொல்வதென்றால், மிகச் சுலபமாக 'ஜெயந்தி நடராஜனின் பெரியம்மா' என்று சொல்லிவிடுகிறார்கள். முன்னாள் முதல்வர் பக்தவச்சலத்தின் மகளான சரோஜினி, மணந்து கொண்டது குன்றத்தூர் ஜமீந்தாரான வரதப்பனை. ஆனால், தத்தெடுத்துக் கொண்டது சமூக சேவை. இந்தியப் பெண்கள் சங்கம்,


வி.டி.தனஞ்செயன் - சாந்தா தனஞ்செயன் (பத்மபூஷன்):

கலாக்ஷேத்ரா நந்தவனத்தில் வளர்ந்த நடன ஜோடி. "பரதமா... அது பெண்களுக்கு மட்டும்தானே; ஆண் ஆடுகிறாரா?" என்று முகம் சுளித்த கனவான்களையும் தன் கால் சலங்கையால் கட்டிப் போட்ட பெருமைக்குரியவர் தனஞ்செயன். பல நடனக் கலைஞர்களுக்கு சங்கீத ஞானம் இருக்காது. ஆனால், இந்த ஜோடிகளை வாய்ப்பாட்டுக்காரர்கள் டபாய்க்க முடியாது. நூற்றுக்கணக்கான சிஷ்ய பரம்பரைக்குச் சொந்தக்காரர்களான இவர்கள், அரங்கேற்றிய நாட்டிய நாடகங்கள் நிறைய. அதில் ராமநாதகம், கிருஷ்ண ஜனனம் குறிப்பிடத்தக்கவை.



பத்ம தாஸர்கள்!

செஞ்சிலுவைச் சங்கம், மைலாப்பூர் அகாடமி என்ற பல அமைப்புகளில் தனது பங்களிப்பைச் செலுத்தி இன்று பெண்கள் விழிப்புணர்வுக்கு வழிகாட்டியாக இருந்திருக்கிறார். கல்யாணத்தின்போது பட்டப் படிப்பு மட்டுமே படித்திருந்த சரோஜினி, தன் ஆர்வம் காரணமாக பட்டமேற்படிப்பு, ஆராய்ச்சிப் பட்டம் என்று முடித்தார். எழுபது வயதைத் தாண்டியபிறகும் இன்னமும் படிப்பைத் தொடர்ந்து கொண்டிருக்கிறார்.



ஐராவதம் மகாதேவன் (பத்மஸ்ரீ) :

கோயில்களுக்குச் சென்றால் சுவரில் செதுக்கப்பட்டிருக்கும் எழுத்துக்கள் நமக்கு புரிவதில்லை. அகழ்வாராய்ச்சியின்போது தோண்டி எடுக்கப்படும் கல் வெட்டுகளில் என்ன இருக்கிறது என்பதையும், அவற்றின் தொன்மையையும், தெரிந்துகொள்ள வேண்டுமானால் அவற்றைப் புரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வத்தில் ஐ.ஏ.எஸ். அதிகாரி என்ற பொறுப்பைத் தூக்கி எறிந்து, கல்வெட்டு ஆராய்ச்சியில் ஈடுபட்டவர் மகாதேவன். சில காலம் தினமணி பத்திரிகையின் ஆசிரியராகவும் இருந்திருக்கும் இவர், இப்போது கல் வெட்டு வகுப்புகள் எடுக்கும் ஆசிரியர்.

- கௌசி



பெயர்பெற்ற படம்!

ஷேக்ஸ்பியர் என்னும் நாடகாசிரியர் இருக்கிறாரே? - பெரிய எமன்! அவரைப் பெரிய எமன் என்று ஒத்துக் கொள்ளாதவர்கள் 'சின்ன யமன்' என்றாவது ஒத்துக் கொள்வார்கள். அல்லது 'அந்த யமனுக்கு அடுத்தபடி இந்த ஷேக்ஸ்பியர் தான்!' என்றாவது அவசியம் ஒத்துக் கொள்வார்கள்.

'ஹாம்லெத்' என்னும் நாடகத்தை ஷேக்ஸ்பியர் எழுதியிருக்கிறார். நாடகம் என்கிறீர்கள்? ஒரே கொலை! கொலை! நாடகப் பாத்திரங்கள் சகலமும் சப்ஜாடா கொலை! யமனிடம் அகப்பட்டுக் கொண்டு ஒரு வேளை தப்பித்தாலும் தப்பிக்கலாம்; ஷேக்ஸ்பியரின் சோக நாடகத்தில் அகப்பட்டுக் கொண்டு கதாபாத்திரம் யாரும் உயிர் தப்ப முடியாது!

கதை கோரமான கதையாயிருந்தாலும் நாடகத்தைப் படிக்கும்போது நமக்கு அருவருப்பு உண்டாவதில்லை. சோகம் உண்டாகிறது. மனித வாழ்வின் இயல்பைக் குறித்து தத்துவ ஞானம் உண்டாகிறது. ஆனால், அருவருப்பு ஏற்படுவதில்லை.

லாரன்ஸ் ஆலிவர், ஹாம்லெத் நாடகத்தைப் படம் பிடித்து வெளியிட்டிருக்கிறார்.

உலகமெங்கும் இப்படத்துக்குப் பிரமாதமான பெயரும் புகழும் ஏற்பட்டிருக்கின்றன. 1948ம் வருஷத்தில் வெளியான சிறந்த படம் என்பதற்காகப் பரிசு கிடைத்திருக்கிறது. 1948ல் சிறந்த நடிகர் என்பதற்காக லாரன்ஸ் ஆலிவருக்குப் பரிசு அளிக்கப்பட்டிருக்கிறது.

சென்ற வருஷத்தில் சென்னைக்கு 'ஹாம்லெத்' படம் விஜயம் செய்தது. அதை ஒரு தடவை நான் பார்த்தேன். சௌகரியப்பட்டால் இன்னும் பதினொரு தடவை பார்க்கலாம் என்று உத்தேசித்திருக்கிறேன். ஒரு தடவை பார்த்ததில், படத்துக்கு ஏற்பட்டிருக்கும் பெயரும் புகழும் தகும் என்று தோன்றியது.

'ஹாம்லெத்' படத்தில் கதாபாத்திரங்களின் வாய்மொழியாகவே மகாகவி ஷேக்ஸ்பியர் பேசுகிறார். மனித உள்ளத்தின் ஆழத்தில் புதைந்து கிடக்கும் உணர்ச்சிகளை எல்லாம் அற்புதமான சக்தியோடு வெளியிட்டுப் பேசுகிறார். கதாபாத்திரங்களின் வாய்மொழியாக





மட்டும் மகாகவி பேசவில்லை. அவர்களின் முகபாவங்களின் மூலம் பேசுகிறார். துடிக்கும் உதடுகளின் மூலம் பேசுகிறார். கண்ணீர்த் துளிகளின் மூலமாகவும் பேசுகிறார். வியர்வைத் துளிகளின் மூலமாகவும் பேசுகிறார். ஹாம்லெத்தின் நெற்றிச் சுருக்கங்கள் பேசுகின்றன. கதாநாயகி ஒபீலியாவின் கூந்தல் கற்றைகள் பேசுகின்றன; அவளுடைய கன்னக்குழிகள் பேசுகின்றன; அவள் கையில் எடுத்த காட்டு மலர்கள் உருக்கமாகப் பேசுகின்றன.

இன்னும், இந்தப் படத்தில் கோட்டை கொத்தளங்கள் பேசுகின்றன. நிழல் அடர்ந்த நீரோடை புலம்புகிறது. பனிப் படலங்கள் விஷயங்களை மூடி மறைப்பதற்குப் பதிலாக தெளிவுபடுத்துகின்றன. திரைச்சீலைகள் இரகசியங்களை உரைக்கின்றன. அரண்மனைச் சுவர்களும் மண்டபத் தூண்களும் சோகக் கதைகள் சொல்கின்றன. ஆகா! அந்தப் புதை பூமியில் குழி தோண்டுகிறவன் கையில் எடுத்த

அமரர் கல்கி



படத்தின் உயர்வுகளைப் பற்றியும் விவரங்கள் அடங்கிய பிரசுரங்கள் இந்தியப் பத்திரிகைகளுக்கெல்லாம் அனுப்பப்பட்டிருக்கின்றன.

நடிப்புக் கலையிலும் படக் கலையிலும் பிரிட்டிஷார் அடைந்திருக்கும் உன்னதத்தை

இந்த மாதிரி இந்தியாவின் கலைச் சிறப்பைத் தூக்கிக் காட்டும் உன்னதமான படங்கள் இந்தியாவில் எடுக்கப்படவேண்டும்.

கபாலம் - மண்டை ஓடு - மனித வாழ்க்கையின் அரிய தத்துவங்களை எடுத்துப் பிரசங்கமாரி பொழிகின்றது!

அற்புதமான படம்; ஒரு தடவை பார்த்தவர்கள் என்றும் மறக்க முடியாதபடி மனத்தில் ஆழ்ந்து பதிந்துவிடும் படம். மனித குலத்தின் மகோன்னதத்தையும், நீசத் தனத்தையும் ஒருங்கே வெளிப்படுத்தும் படம். மனித உள்ளத்தில் புதைந்து கிடக்கும் அற்புத ரத்தினங்களையும் ஆசாபாச பயங்கரங்களையும் எடுத்துக்காட்டும் படம்.

இவ்வளவு உயர்வாக எடுக்கப்பட்டிருக்கும் ஒரு படத்தை பிரசாரம் செய்வதில் பிரிட்டிஷ் அரசாங்கத்தாரே மிக்க சிரத்தை காட்டுகிறார்களென்றால், அதில் ஆச்சரியம் ஒன்றுமில்லைதானே!

இந்தியாவில் பிரிட்டிஷ் ஹைகமிஷனர் ஆபீஸையொட்டி பிரிட்டிஷ் செய்தி இலாகா வேலை செய்து வருகிறது. அந்த இலாகாவிலிருந்து லாரன்ஸ் ஆலிவர் 'ஹாம்லெத்' படம் எடுப்பதில் கையாண்ட புதுமுறைகளைப் பற்றியும், அந்தப் எடுத்துக்காட்டும் படமாயிருப்பதினால் தான் பிரிட்டிஷ்காரர்களின் செய்தி ஸ்தாபனங்கள் அதை விளம்பரப்படுத்துவதில் இவ்வளவு சிரத்தை காட்டுகின்றன.

இந்த மாதிரி இந்தியாவின் கலைச் சிறப்பைத் தூக்கிக் காட்டும் உன்னதமான படங்கள் இந்தியாவில் எடுக்கப்பட வேண்டும். அத்தகைய கலைச்சிறப்பு வாய்ந்த படங்களை வெளிநாடுகளில் பிரசாரம் செய்வதற்கு இந்திய சர்க்கார் முன் வரவேண்டும்.

- கல்கி, 13.3.1949

உள்ளங்கையில் உலகம்!



தீராக் காதல், ஜி.ஆர். சுரேந்தர்நாத், சிக்ஸ்த் சென்ஸ் பப்ளிகேஷன்ஸ், தி.நகர், சென்னை-17. விலை ரூ. 75.00

'பிரிந்த காதலின் தீராவலியின் பதிவுகள்' என்று நூல் முகப்பு சொல்கிறது. அரிதாக, சில பிரியாத காதலின் கதைகளும் பதிவுசெய்யப்பட்டுள்ளன. வாசிப்பவர்கள் தம் வாழ்வோடு ஒப்புநோக்கக்கூடிய ஏதேனும் ஒரு கணத்தை, பல கதைகள் ஒளித்து வைத்துள்ளன. கடந்து வந்த காதலைப் பின்னோக்குபவர்கள் தேடலாம் தீராக் காதலின் பதிவுகளை.



கல்கி முதல் கண்ணன் வரை, மு.பரமசிவம், புதுமைப்பித்தன் பதிப்பகம், அசோக் நகர், சென்னை-83. விலை ரூ. 75.00

தாம் நேசித்த, பழகிய எழுத்தாளர்களான கல்கி, தமிழ் ஒளி, என்.ஆர். தாசன், எம்.எஸ். கண்ணன், சு.சமுத்திரம், அறந்தை நாராயணன், ஆர்.கே. கண்ணன் ஆகியோரது வாழ்வனுபவங்களை இந்நூலில் பதிவுசெய்திருக்கிறார். சிறந்த இலக்கியவாதியான 'தமிழ் ஒளி'க்கு உரிய அங்கீகாரம் வழங்கப்படாதது குறித்து தம் ஆதங்கத்தையும் பதிவுசெய்துள்ளார். எழுத்தாளர்களின் வாழ்க்கைக் குறிப்புகளையும் சில கட்டுரைகளில் வாசிக்க முடிகிறது. இளையதலைமுறையிடம் அதிகம் அறியப்படாத எழுத்தாளர்களைப் பற்றிய செய்திகளைத் தந்திருப்பது புதிய முயற்சி.



ஹாய் மதன் - பாகம்-5, விகடன் பிரசுரம், அண்ணா சாலை, சென்னை-02. விலை ரூ.85.00

வாசகர்களின் கேள்விகளுக்கு, விகடனில் மதன் எழுதிய பதில்கள் இடம்பெற்ற தொகுப்பு. பொது அறிவுப் புத்தகங்களில் தொடர்ச்சியாகத் தகவல்களைப் படிப்பது சற்று சலிப்பேற்படுத்தும் அனுபவம். பல்வேறுபட்ட கேள்விகளை வாசகர்கள் எழுப்ப, அவற்றுக்கு மெல்லிய நகைச்சுவை இழையோட தெளிவான தகவல்களைக் கொண்டும் அமைந்த மதனின் பதில்கள் சுவாரஸ்யம். இந்தப் புத்தகத்தை வாசித்து முடிக்கையில் உள்ளங்கையில் உலகம் இருப்பது போன்ற உணர்வு ஏற்படுகிறது!

- நேயமுகில்

என்ன மாயம் செய்தாய் தோனி!

ச.ந.கண்ணன்

ஒரே வாரத்தில் உலகின் இரண்டாவது தலைசிறந்த அணி என்கிற பெயரெடுத்து, அந்தக் கொண்டாட்டத்தை அனுபவித்துத் தீர்வதற்குள் சொய்ங் என்று மூன்றாவது இடத்துக்குத் தள்ளப்பட்டுள்ளது இந்திய அணி. ஸ்ரீலங்காவுடனான ஐந்தாவது ஒருநாள் போட்டியில் தோற்றதால் உண்டான சறுக்கல்.

ஒருவெற்றி பெறுவதற்குக்கூட தம் கட்டிக் கொண்டிருக்கிறது ஆஸ்திரேலிய அணி. இந்தியாதான் பார்க்க பழைய ஆஸ்திரேலிய அணி போல ஜொலித்துக் கொண்டிருக்கிறது. எல்லாப் பகுதிகளிலும் மாயம் செய்ததுபோல இந்திய அணியை நேர்த்தியான அணியாக மாற்றிக் காட்டியிருக்கிறார் தோனி. எப்படிச் சாத்தியமானது என்றால் அவர் கோச்சைக் கை காட்டுகிறார். கோச் தோனியைக் கை காட்டுகிறார். அணி வீரர்கள் இவ்விருவரையும் கை காட்டுகிறார்கள். ரசிகர்கள் ஒட்டுமொத்த அணிக்கும் பாலாபிஷேகம் செய்கிறார்கள்.

அணியில் நிலவும் சுதந்திரம், கருத்து ஒற்றுமைகள் எல்லாம் ஆட்டக்களத்தில் எதிரொலிக்கின்றன. ''எனக்கு மெண்டிஸ் பந்தை ஆடத்தெரியவில்லை. சச்சினிடம் சந்தேகம் கேட்டேன். அவர் ஆட்ட உத்திகளைக் கற்றுத்தந்தார்'' என்கிறார் யுவராஜ் சிங். எல்லாமே திட்டமிட்டு நடப்பவை. அதற்கு மாறாக யார் நடந்தாலும் அவர்கள் அன்புடன் எச்சரிக்கப்படுவார்கள். 'சரியோ தவறோ கைவசம் ஒரு திட்டம் இல்லாமல் மைதானத்துக்குள் இறங்குவதில்லை' என்கிறார் தோனி. சென்னை டெஸ்ட் போட்டியின் போது யுவராஜுக்கு வாய்வார்த்தையாக நிறைய ஊக்க மருந்துகள் வழங்கப்பட்டன. ஒருநாள் போட்டிகளில் எப்படி ஆடுவாயோ அதுபோலவே ஆடு என்கிற அறிவுரையின்கீழ் ஆடியதன் பலனை யுவராஜுடன் சேர்ந்து அணியும் அடைந்தது.

சரக்கு உள்ள கேப்டன், பக்குவமான பயிற்சியாளர், உத்திகள் தெரிந்த துணைப் பயிற்சியாளர்கள் (வெங்கடேஷ் பிரசாத், ராபின்சிங்) என்று அணியைச் சுற்றி வலுவான கோட்டைகள். திரைமறைவில் இருந்தாலும் வெங்கடேஷ் பிரசாத்தின் பந்து வீச்சுப் பயிற்சிகள் ஜாகீர் கான், இஷாந்த் சர்மாவை சாமுராயாக மாற்றியிருக்கின்றன. இந்தியாவில் நடந்த சமீபத்திய டெஸ்ட் தொடர்களில் அவ்விருவரும் மேன் ஆஃப் தி சீரிஸ் பட்டம் வாங்கியது நம்பமுடியாத சாதனை.

இந்திய கிரிக்கெட் அணியில் நிலவும் சுதந்திரம், கருத்து ஒற்றுமைகள் எல்லாம் ஆட்டக்களத்தில் எதிரொலிக்கின்றன.



ராபின் சிங்கின் ஃபீல்டிங் பயிற்சி பிரமாதம் என்று சொல்ல முடியாவிட்டாலும், அணியில் இடம் பிடித்துள்ள இளைஞர்கள் குழந்தைபோல புல்தரைகளில் உருண்டு மருண்டு பந்தைத் தாவிப் பிடித்து இப்போது ஃபீல்டிங் தரத்தையும் உயர்த்தி விட்டார்கள். அணியில் ஆல் ரவுண்டர்கள் இல்லாத குறையை ஜடேஜா தீர்த்துவைப்பார் என்கிற புதுநம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

அத்தனை செல்வமும் கொண்ட அதிர்ஷ்டக்காரன் போல் காட்சி தருகிறது இந்திய அணி. தொடர்ந்து ஆஸ்திரேலியாவின் முன்னே சென்று முதல் இடத்தில் அமர்ந்திருக்கிற தென் ஆப்பிரிக்காவையும் பின்னுக்குத் தள்ளிவிட்டால் மகா பாக்கியசாலி ஆகிவிடும் இந்திய அணி. கொண்டாட்டத்துக்குத் தயாராக வேண்டிய தருணம் இது.



''வாழ்க்கையில் சில விஷயங்கள் நாம் எதிர்பாராமல் கிடைக்கும். அப்படிக் கிடைப்பது, எதிர்பார்த்ததை விடச் சிறப்பாக அமைந்துவிடும். எனது கணவர் தனுஷ் நடராஜ் நான் எதிர்பாராமல் கிடைத்த அன்புத் துணைவர். எங்கள் திருமணம் லவ்லி அரேன்ஜ்டு மேரேஜ்!'' என்று புதிய கல்யாண வகையைப் பற்றிச் சொல்கிறார் 'துளசி' சுஜிதா!

மாப்பிள்ளை தயாரிப்பாளர்!

– சுஜிதா போடும் விடுகதை

அதென்ன லவ்லி அரேன்ஜ்ட் மேரேஜ்?

''என் கல்யாணத்துக்கு முன் தனுஷ் நடராஜை, அவர் நடத்திவரும் ஆரஞ்ச் ட்ரீ (Orange tree) புரொடக்ஷன் ஹவுஸ் தயாரித்த விளம்பரத்தில் நடிக்கும்போது மதுரையில் சந்தித்தேன். ஆறு மாதம் கழித்து, என்னைப் பெண் பார்க்கும் மாப்பிள்ளையாக வந்து நிற்கிறார். நான் முன்பே சந்தித்த நபரே எதிர்பாராத விதமாக என்னைத் திருமணம் செய்து கொள்ள நேர்ந்தது ஸ்வீட் ஷாக்!

அரேன்ஜ்மென்ட்டும், காதலும் கலந்த திருமணம் என்பதால்தான் லவ்லி அரேன்ஜ்ட் மேரேஜ்! காதல் என்பதை திருமணத்துக்கு முன், பின் என்றெல்லாம் பிரித்துப் பார்க்கக்கூடாது. அதற்கு தனியாக இலக்கணம் எதுவும் இல்லை. இந்த உணர்வு வாழ்க்கை முழுவதும் இழையோடிக் கொண்டே இருந்தால் வாழ்வெல்லாம் ஆனந்தமே.

காதலர் தினக் கொண்டாட்டங்கள் தேவையற்றவை என்று பலர் குரல் எழுப்புகிறார்கள். அன்னையர் தினம், தந்தையர் தினம் என்று நம் உறவுகளுக்கெல்லாம் தினங்கள் இருப்பதைப் போல காதலின் சிறப்பைக் கூற ஒரு தினம் இருப்பதில் என்ன தவறு? எதையும் பாஸிடிவ்வாகப் பார்க்கும் பக்குவம் நமக்கு வரவேண்டும்'' என்றவரிடம், இன்றைய டி.வி. சீரியலைப் பற்றியும் கொஞ்சம் பேசுங்களேன் என்று பிரேக் போட்டோம்.

''பன்னிரண்டு வருடங்களுக்கு முன்பே சினிமாவில் ஹீரோயினாக நடிக்க சான்ஸ் கிடைத்தது. கிளாமர் ரோலாக இருந்ததால் மறுத்துவிட்டேன். இன்றைய சீரியல் ஹீரோயின்களில் நிறைய பேர் சினிமாவில் ஒரு ரவுண்டு முடித்துவிட்டு, வயது முப்பதை நெருங்கியவர்கள். என்னைப் போன்ற இளம் ஹீரோயின்களை சீரியலில் காண்பது அரிது. இருந்தாலும் ஒரு நடிகை தன்னுடைய முழுமையான திறமையை வெளிப்படுத்த சரியான களம் சினிமாதான்.

சீரியல்களில் யதார்த்தத்தை மீறிய விஷயங்கள் காட்டப்படுவதாகச் சொல்கிறார்கள். ஆண்-பெண் நட்பு, குடும்ப உறவுகள் என பல கட்டங்களில் யதார்த்தத்தை மீறிய விஷயங்கள் நடக்கின்றன. இன்றைய நியூஸ் பேப்பர்களும், நியூஸ் சேனல்களும் இதைத்தான் காட்டுகின்றன. சீரியல்களில் இதைக் காட்டும்போது, மிகைப்படுத்தப்பட்டது போல் தோற்றமளிக்கிறது.

பெண்களை அழுது வடியும் கேரக்டர்களாகச் சித்திரிப்பது உண்மைதான். டி.ஆர்.பி. ரேட்டிங்கைக் கருத்தில் கொண்டு சீரியல் தயாரிப்பதால்தான் இந்த நிலைமை. இருந்தாலும் ஆக்கபூர்வமான சீரியல்கள்


பல சேனல்களில் வர ஆரம் பித்துவிட்டன. நான் நடிக் கும் 'துளசி' கேரக்டர் நம்பிக் கையும், அன்பும் கலந்த பெண்'' என்கிறார்.



இன்றைய மீடியாவில் உள்ளவர்கள் பலர் விவா கரத்துக்காக கோர்ட் படி யேறுகிறார்களே?

''டாக்டர், இன்ஜினியர், டீச்சர் என பல துறைகளில் இருப்பவர்களும் கூட விவா கரத்துக்காக கோர்ட் படி யேறுகிறார்கள். மீடியாவில் இருப்பவர்கள் மட்டுமே வெளிச்சம் போட்டுக் காட்





டப்படுகிறார்கள். மீடி யாவில் பிரபலமாக இருப்பதால் கொடுக் கும் விலை இது.

மற்ற உறவுகளிடம் விட்டுக் கொடுக்கி றோம். ஆனால் வாழ்க் கைத் துணை என்று வந்து விட்டால் விட்டுக் கொடுக் காமல் பிடிவாதம் பிடிக் கிறோம். ஏனித்த பார பட்சம்?''

- ராகவ்குமார்



சகலகலா

''தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்யப் போறாங்களாம்'' என்று முதலாளியிடம் சொன்னால், ''ஒண்ணும் பிரச்னையில்லை; நம்ம குப்புசாமி சமாளித்துக் கொள்வார்'' என்று சொல்வார் அவர். ''ஸார்... அந்த வில்லங்கமான விவகாரம் கோர்ட்டுக்குப் போகிறதாம்'' என்று முதலாளியிடம் சொன்னால், ''அட விடுப்பா... குப்புசாமிக்குத் தெரியாத வழக்கறிஞர்களா?'' என்று டென்னிஸ் மட்டையை எடுத்துக்கொண்டு கிளப்புக்குக் கிளம்புவார்.

இப்படி எடுத்ததெற்கெல்லாம் 'குப்புசாமி'யை நம்பிச் செயல்படுவார் முதலாளி. குப்புசாமி, அந்த நிறுவனத்தில் ஆபீஸ் பாயாகச் சேர்ந்து தமது கடின உழைப்பால், கொஞ்சம், கொஞ்சமாக மேலே உயர்ந்து, முதலாளியின் நம்பிக்கையைப் பெற்ற ஊழியராக உயர்ந்தவராக இருப்பார். 1950, 60 வரை இதுபோன்ற 'குப்புசாமி'கள் பல நிறுவனங்களில் இருந்தார்கள். 1960களுக்குப் பிறகு, சுருக்கெழுத்து, தட்டெழுத்து கற்றுக்கொண்டு, ஸ்டெனோகிராபர், தனி உதவியாளர் என்று உயர்ந்து, முதலாளிகளின் நம்பிக்கையைப் பெற்று, பலர் குப்புசாமிகளைப் போல் செயல்பட்டார்கள். இந்த குப்புசாமிகளின் திருத்தப்பட்ட மற்றும் மேம்படுத்தப்பட்ட வடிவம்தான் 'கம்பெனி செக்ரடரி'. இன்றைய மாறி விட்ட நிர்வாகச் சூழலில் கம்பெனி செயலாளர் என்பவர் சகலகலாவல்லவராக இருக்க வேண்டும். நிர்வாக இயலா? தொழிலாளர் சட்டங்களா? நிதி சம்பந்தப்பட்ட விவகாரங்களா? கணக்கு வழக்கா? புள்ளி விவரங்களா? வர்த்தகச் சட்டங்களா? பங்கு மார்க்கெட் அக்கப்போரா? இயக்குனர்கள் கூட்டமா? அதற்கான அஜண்டாவா? வரி விதிப்பு; சென்ட்ரல் எக்ஸைஸ் பிரச்னைகள் என்று நிறுவனங்கள் தொடர்பான அத்தனை விஷயங்களையும் கரைத்துக் குடித்தவராக இருப்பவர்தான் கம்பெனி செயலாளர். ஒரு நிறுவனத்தைத் துவக்குவது முதல், சந்தர்ப்பச் சூழலினால் மூடும்படி நேர்ந்தால், அதற்கு முறைப்படி மூடுவிழா நடத்தி முடித்து வைப்பவரும் கம்பெனி செயலாளர்தான். அப்படிப்பட்ட சகலகலா



'மாஃபா' பாண்டியராஜன்

வல்லவர்கள், இன்றைக்கு நமது நிறுவனங்களில் அசத்திக் கொண்டிருக்கிறார்கள். அப்படி அசத்துபவர்களில் ஒருவர்தான் வி.என்.வி. என்கிற வி.என். வேங்கடநாதன்.

அண்ணாமலையில் பட்டப் படிப்பை முடித்தார் வி.என்.வி. ஆடிட்டராக வேண்டுமென்பது ஆசை. சார்ட்டர்ட் அக்கவுண்ட்டண்ட் கோர்ஸில் சேர்ந்தார். தென்னகத்திலேயே இரண்டாவதாகத் தேர்ச்சி பெற்றார். டி.வி.எஸ். குழுமத்தில் பிரேக்ஸ் இந்தியா

"இப்போதைய காலகட்டத்தில் ஒரு கம்பெனியின் செயலாளர் என்பவர், மனசாட்சியுடன், தர்மநெறிகளைக் கையாண்டு செயல்பட வேண்டும். அதுவும் 'சத்யம்' விவகாரத்துக்குப் பிறகு எங்களைப் போன்றோரின் பொறுப்பு பல மடங்கு உயர்ந்துவிட்டது'' என்கிறார் வேங்கடநாதன்.


இவரைப் போன்று வாழ்க்கையில் உயர விரும்பும் இளைஞர்கள், ப்ளஸ் டூ முடித்தவுடனேயே படிப்பு தொடர்பாக

செயலாளர்கள்!



இன்றைய மாறிவிட்ட நிர்வாகச் சூழலில், கம்பெனி செயலாளர் என்பவர் சகலகலாவல்லவராக இருக்க வேண்டும்!

நிறுவனத்தில் நிர்வாக, கணக்குப் பிரிவில் வேலை கிடைத்தது. தமது அர்ப்பணிப்பாலும், உண்மை உழைப்பாலும் முன்னணிக்கு வரத் துவங்கினார். இதற்கிடையில் கம்பெனி செயலாளர் கோர்ஸையும் பாஸ் செய்தார். குழுமத்தின் மற்றொரு நிறுவனமான சுந்தரம் கிளேடனில், கடந்த பத்தாண்டுகளாக கம்பெனி செயலாளர்.



ஒவ்வொரு வருடமும் பிஸினஸ் டுடே இதழ் கொடுக்கும் சாதனையாளர் விருதுக்கு ஆட்களைத் தேர்ந்தெடுத்துத் தருகிறது மாஃபா. அந்த இதழ் எங்களிடம் மட்டுமல்லாமல் மேலும் மூன்று நிறுவனங்களிடம் இந்தப் பணியை ஒப்படைத்திருக்கிறது. ஒவ்வொரு நிறுவனமும் 25 பேரைத் தேர்ந்தெடுத்துத் தர வேண்டும். ஆக மொத்தம் உள்ள 100 பேரில், சிறந்த 25 சாதனையாளர்களைத் தேர்ந்தெடுத்து விருதுகள் வழங்கப்படும். 2002ம் வருடத்திலிருந்து வழங்கப்படும் இந்த விருதுக்கு மாஃபா தேர்ந்தெடுக்கும் சாதனையாளர்கள் அதிக அளவில் இடம்பிடிக்கிறார்கள்.

தொழிற்துறை, மீடியா, வங்கித் துறை, தகவல் தொடர்பு, உற்பத்தித் துறை என்று பல துறைகளைச் சேர்ந்த சாதனையாளர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். இந்தத் தேர்வுக்காக எங்கள் நிபுணர்கள் மிகவும் ஆராய்ச்சி செய்ய வேண்டியதாக இருக்கும். சுமார் இரண்டு மாதம், இந்தத் துறைகளிலுள்ள டாப் எக்ஸிக்யூடிவ் மற்றும் தொழில் முனைவோர்களைப் பற்றிய பயோடேட்டாவைப் போட்டு அலச வேண்டும். தலைமுறைகளாக இருக்கும் ஒரு நிறுவனத்தின் வாரிசாக தலைமைப் பொறுப்பில் மட்டும் இருந்தால் போதாது. சவால்களைச் சந்திக்கும் தைரியமும், முடிவெடுக்கும் திறனும் பொருந்திவர வேண்டும். நாற்பது வயதுக்குள் உள்ளவராக இருக்க வேண்டும். இந்தத் தேடுதலின்போது நாங்கள் கண்டு கொள்வது என்னவென்றால், பெரும்பான்மையான மேல்நிலை நிர்வாகிகளும், சி.இ.ஓ.க்களும், ஏ.சி. அறையில் உட்கார்ந்து கொண்டு முடிவெடுக்கும் வேலையைத்தான் செய்து வருகிறார்கள் என்பது. இந்த இடத்தில் டி.வி.எஸ். குழும நிறுவனங்களைப் பற்றிச் சொல்லாமல் இருக்க முடியாது. அதன் உரிமையாளர்கள்கூட, தொழிலாளர்களுக்கான சீருடையையே அணிந்து கொண்டு களத்தில் இறங்கி விடுகிறார்கள். நிர்வாகியாகவும், தொழிலாளியாகவும் இயங்குவது என்பது, மற்ற சக தொழிலாளர்களிடம், நிறுவனம் பற்றிய நம்பிக்கையை மேலும் வலுப்படுத்தி, அதிக அளவில் உழைக்கத் தூண்டும். ஒரு சி.இ.ஓ. சீருடையுடன் தொழிலாளர்களுடன் இணைந்து, களத்தில் ஒரு பிரச்னையைத் தீர்த்து வைத்து, தெளிவு பிறந்தவுடன் தோளில் கை போட்டுக் கொண்டு கேன்டீனில் டீ சாப்பிட்டால், அது எப்படிப்பட்ட பாஸிட்டிவ்வான தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை நினைத்துப் பாருங்கள். இப்படிப்பட்ட சாதனையாளர்களைத்தான் நாங்கள் தேர்ந்தெடுக்கிறோம்.

பாண்டி 'S BLOG

இட்டமிட்டுக் கொள்ளவேண்டும். கம்பெனி செயலாளர் பயிற்சிக் கழகம் நடத்தும் கோர்ஸில் (ஏ.சி.எஸ்), ப்ளஸ் டூ முடித்தவுடன் சேரலாம். முதலில் அடிப்படை, அதற்குப் பின்பு இடைநிலை, கடைசியாக இறுதிநிலை என்று மூன்று கட்ட தேர்ச்சி நிலை உண்டு. பட்டதாரியாக இருந்தால் இடைநிலைத் தேர்வில் நேரடியாகக் கலந்து கொள்ளலாம். சட்டப் படிப்பு படித்திருந்தால் கூடுதல் பலம். இறுதி நிலை முடித்த பிறகு பிராக்டிகல் தேர்வுக்காக, நிறுவனங்களில் வேலை பார்க்க வேண்டும். இந்த கோர்ஸை தபால் மூலம் படித்தால், அவ்வப்போது நேரடி வகுப்புகளில் கலந்து கொள்வதோடு, ஆங்கிலம் எழுதப் படிக்கத் தக்க திறனை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

(வெளிச்சம் வீசும்)

எழுத்தாக்கம்: **ஸ்ரீநி**

கள்ளக்குறிச்சி கவுண்ட்டவுன்!



* செல்வகணபதி



* வீரபாண்டி ஆறுமுகம்

கள்ளக்குறிச்சி பாராளுமன்றத் தொகுதிக்கு, தி.மு.க.-காங்கிரஸ் கூட்டணியில் போட்டி பலமாக இருக்கிறது. முற்றிலும் கிராமப்புறங்களைக் கொண்ட இந்தத் தொகுதியில் போட்டியிட்டால் எப்படியும் வெற்றி பெற்றுவிடலாம் என்று பலர் காய் நகர்த்துகிறார்கள். சமீப காலங்களில் ஸ்டாலினுக்கு மிகவும் வேண்டியவராகி விட்ட செல்வகணபதி, இந்தத் தொகுதியைக் குறி வைக்கிறார். ஆனால், அமைச்சர் வீரபாண்டியார் செல்வகணபதியின் ஏற்றத்தை விரும்பினால் எந்தத் தடையுமில்லாமல் தொகுதியை செல்வகணபதி பெறலாம். அதே சமயத்தில் தொகுதியை காங்கிரஸுக்குப் பெறுவதில் ஆர்வம் காட்டுகிறார் தங்கபாலு. சேலத்தை விட்டு, கள்ளக்குறிச்சிக்கு வந்துவிட்டால் வெற்றி நிச்சயம் என்று அவர் நினைக்கிறார். இதற்கிடையில் மறைந்த வாழப்பாடியார் மகன் இராம.சுகந்தன், தன் பங்குக்குத் தொகுதியை மடக்க முடியுமா என்று முயன்று கொண்டிருக்கிறார். அந்த நோக்கத்தோடு தொகுதியில் வாழப்பாடியார் பேரவை என்ற அமைப்பின் சார்பில் பல சமூகப்பணிகள், நலத்திட்ட உதவிகள் செய்து வருகிறார் இராம.சுகந்தன்.


முஸ்லிம் அமைப்புகளுக்குள் பல மாறுதல்கள் நடந்து வருகின்றன. ஜெய்னுல்ஆபிதின் தலைமையில் இயங்கும் தவ்ஹித் ஜமாத் இயக்கத்தில் முக்கியப் பங்காற்றிக் கொண்டிருந்த பாக்கர் விலகிப் போய் தனி இயக்கம் கண்டு விட்டார். "இயக்கத்தில் இருந்தவர்களே இருவருக்கும் இடையில் பிளவை உண்டாக்கி விட்டார்கள்" என்கிறார்கள். தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகம் தேர்தலில் போட்டியிட வசதியாக, மனித நேய மக்கள் கட்சியாக உருமாற்றம் பெற்றிருக்கிறது. இந்தியன் முஸ்லிம் லீக் (காதர் மொய்தீன்) தி.மு.க.வோடு இருக்கும்போது மனித நேய மக்கள் கட்சிக்கு அந்தக் கூட்டணியில் இடம் கிடைப்பது சந்தேகமே. ஜெயலலிதா ஓர் இடம் கொடுக்கும் பட்சத்தில் அங்கே போகலாம் என்றால் அ.தி.மு.க.வில் காயிதே மில்லத் மகன் மியாகான் இருக்கிறார். மனித நேயத்துக்குத் தடுமாற்றம்தான். கட்சியாக மாற்றிய நோக்கம் நிறைவேறுமா?

- ஸ்ரீநிதி

‘‘மரபணு மாற்றுத் தொழில்நுட்ப விதைகளால் மலட்டுத்தன்மை மற்றும் பல நோய்கள் நமக்கு வரக்கூடும்’’ என எச்சரிக்கிறார் இயற்கை விஞ்ஞானி நம்மாழ்வார். அவரிடம் இதுகுறித்து விரிவாகப் பேசினோம்.



● ஜெஃப்ரி எம்.ஸ்மித்



‘‘மரபணு மாற்று விதை...

‘‘மரபணு மாற்றுத் தொழில்நுட்ப விதைகளை அமெரிக்கா, சுவிட்சர்லாந்து நாடுகளைச் சேர்ந்த இரு நிறுவனங்கள் நம் நாட்டில் திணிக்க முயற்சி செய்து வருகின்றன. மரபணு மாற்று விதைகள் உற்பத்தியில், அமெரிக்காவின் மான்சான்டோ கம்பெனி தொண்ணூற்றைந்து விழுக்காடு இடம்பிடித்துள்ளது.

இந்த விதையின் மூலமாக விளையும் உணவுப் பயிர்களால் மனிதகுலத்தின் பாதுகாப்புத் தன்மை குறித்து எந்த நாடும் இதுவரை (Food Safety Trial) ஆய்வு செய்யவே இல்லை. ஆனால் மனித மருத்துவம், உயிர் தொழில்நுட்பம், கால்நடை மருத்துவம்... என்றுதான் ஆய்வுகள் வந்திருக்கின்றன!

அமெரிக்க உயிர் தொழில்நுட்ப விஞ்ஞானி ஜெஃப்ரி எம்.ஸ்மித் எழுதிய Genetic Roulette (*மரபிணி சூதாட்டம்*), மரபணு மாற்றம் பற்றிய பித்தலாட்டத்தை அக்குவேறு ஆணிவேறாக அலசுகிறது. இந்தியாவின் முக்கியமான பத்து நகரங்களில் மட்டுமே இப்புத்தகம் வெளிவந்திருக்கிறது. இந்தியாவில், கடந்த ஒரு மாதமாக இந்தப் பித்தலாட்டத்தை மக்கள் முன்பாக

பி.டி. ரகசியம்

பி.டி. எனப்படும் நச்சுக்கிருமியின் மரபணுவை, ஒவ்வொரு வகை பயிர் விதைகளிலும் செலுத்தி மரபணு மாற்றுத் தொழில்நுட்ப விதைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இதன் அடிப்படையில் தற்போது பி.டி. பருத்தி, பி.டி. நெல், பி.டி. கத்தரி, பி.டி. வெண்டை, பி.டி. தக்காளி, பி.டி. முட்டைக்கோஸ், பி.டி. காலிபிளவர் மற்றும் பி.டி. பப்பாளி என வரிசை கட்டி வந்துவிட்டன.

தோலுரித்து வருகிறார் ஜெஃப்ரி எம்.ஸ்மித்.

மரபணு மாற்று விதைகளை நன்கு சோதித்த பின்னரே நம் நாட்டுக்குள் அனுமதிக்க வேண்டுமென 1966 சுற்றுச்சூழல் சட்டம் சொல்லுது. அதன் அடிப்படையில் மத்திய அமைச்சரவையால் 'மரபணு பொறியியல் அனுமதிக் குழு' 1989ல் அமைக்கப்பட்டது. அந்தக் குழு சரியாகச் செயல்படவில்லை. பொதுநல வழக்கு உச்சநீதி மன்றத்தில் தொடுக்கப்பட்டது. அந்த வழக்கு நிலுவையில இருக்கு. அந்த வழக்கு தீர்ப்பு வர்றதுக்குள்ளார, நாட்டுல பரவலா மரபணு விதைகளைப் பயன் படுத்தி, மனித சமூகம் மலட்டுத்தன்மை மற்றும் பல நோய்களுக்கு ஆளாகிடக் கூடாது.

சரியான சோதனைகள் செய்யாமலே மான்சான்டோ- மஹிக்கோ கம்பெனியின் பி.டி. பருத்தி விதைகள் இந்தியாவில் பரவலாக உள்ளே நுழைந்து விட்டன. ஆந்திராவில் பி.டி. பருத்திக் காட்டில் மேய்ந்த ஆயிரத்தைந்நூறு ஆடுகளும், பன்னிரண்டு எருதுகளும் இறந்து போனதாக புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

உத்தராஞ்சல் மாநிலத்தில் அனுமதியின்றி பயிர் செய்யப்பட்டிருந்த பி.டி. நெற்பயிரை 'பாரதிய கிசான் சங்க' உறுப்பினர்கள் தீயிட்டு எரித்துள்ளார்கள். கோவை அருகே ஆலந்துறையில் 2007ல் பி.டி. நெற்

மனிதகுலத்தின் வதை..!"



ஏன் வேண்டாம் மரபணு மாற்று விதை?

ஐந்து காரணங்களுக்காக விவசாயிகள் மரபணு மாற்று விதைகளை, அனுமதிக்கவே கூடாது.

- விஷக்கிருமியின் மரபணுவை (Gene), தக்காளி - கத்தரி விதைகளில் ஒட்டுகிறார்கள். இதன் விளைவு உயிர்களில் உள்ள இறுக்கம் குலைந்துவிடுகிறது. தேனெடுக்கச் செல்லும் வண்டுகள், ஈக்கள் மூலமாக, மாற்றியமைக்கப்பட்ட மரபணு மற்ற பயிர்களுக்கும் தொற்றுகிறது. இதனால் உயிரினப் பன்மையம் (Diversity) அழிகிறது.
- பி.டி. விதைகளுக்கு மான்சான்டோ கம்பெனி காப்புரிமை பெற்றுள்ளது. இதனால் உழவுத் தொழில்சார்ந்த விவசாயிகளின் சர்வசுதந்திரமும் பறிக்கப்படுகிறது.
- நுகர்வோர் உரிமை உணவு விஷயத்தில் மறுக்கப்படுகிறது. உதாரணமாக நம் நாட்டில் பல வகை கத்தரிக் காய்களை விருப்பம் மற்றும் ருசிகளின் அடிப்படையில் உணவுக்குப் பயன்படுத்தி வருகிறோம். பி.டி. கத்திரி நம் தேசத்தில் புகுத்தப்பட்டால், அனைவரும் ருசித்துச் சுவைத்த எல்லா வகைக் கத்தரி ரகங்களும் அழிந்து போய்விடும்.
- இந்திய விவசாயிகள் எதைப் பயிர் செய்ய வேண்டும்? இந்தியர்கள் எதை உண்ண வேண்டும் என்பதனை அமெரிக்காவின் மான்சான்டோ கம்பெனி தீர்மானிக்குமானால், இந்தியாவின் இறையாண்மையே கேள்விக்குள்ளாகிவிடும்.
- மரபணு மாற்று விதைகளின் மூலமாக விளைந்த உணவுப் பொருட்களை முதலில் எலிகளுக்கும், முயல் களுக்கும் உணவாகத் தந்து ஆய்வு செய்தபோது அவற்றின் உடல் வளர்ச்சி பாதிக்கப்பட்டது. பி.டி. மக்காச் சோளம், பி.டி. சோயா மொச்சை உண்ட எலிகள் ஈன்ற குட்டிகள் மூன்று வாரங்களுக்குள் இறந்து போயின. எலிகளின் உள் உறுப்புகளில் நோய்த் தொற்றுகள் ஏற்பட்டிருந்தன. சிறுநீரக விதைப் பைகள் சுருங்கிப் போய் விட்டன. விதைப்பைகள் விந்து சுரப்பதை நிறுத்தி விடுமென விஞ்ஞானிகள் ஆய்வு முடிவுகளை வெளியிட்டுள்ளனர்.



> "இந்திய விவசாயிகள் எதைப் பயிரிட வேண்டும் என்பதை அமெரிக்க கம்பெனிகள் முடிவு செய்தால் இந்திய இறையாண்மை என்ன ஆவது?"

பயிரை இருநூறு விவசாயிகள் வயலிலிருந்து பிடுங்கி வீசியுள்ளனர். உத்தராஞ்சல் மாநில முதல்வர், பி.டி. விதைகளை அனுமதிப்பதில்லையென உறுதியளித்துள்ளார். கேரள அரசாங்கம் பி.டி. விதைகளை மாநிலத்துக்குள் நுழைய விடுவதில்லையென கொள்கை அறிவிப்பே வெளியிட்டுள்ளது. இதர மாநிலங்கள் இன்னமும் இதுகுறித்து 'வாய்' திறக்கவே இல்லை என்பதுதான் பெரும் அதிர்ச்சி.''

– ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு

ஹாய் டார்லிங்!

6



வேண்டாம்... வேண்டாம்... கல்யாணம் வேண்டாம்...!

தன் மனத்தில் யாரையும் நினைத்து ஏங்கவில்லை என்று தெளிவுபடுத்திவிட்டாள் திவ்யா. முதலில் அவளது பெற்றோர் நிம்மதிப் பெருமூச்சு விட்டனர். 'அப்பாடி! பாதி பிரச்னை தீர்ந்தது' என்று நினைத்துக் கொண்டனர்.

''அப்படின்னா ஏன் கல்யாணத்துக்குத் தடை போடற?''

''எனக்குப் பிடிச்சா மாதிரி மாப்பிள்ளை இல்லை.''

''எங்களுக்கும் வயசாகிட்டே போகுதே! காலாகாலத்துல உனக்கு ஒரு கல்யாணத்தை முடிச்சிடணும்னு நாங்க நினைக்கறது தப்பா?''

''தப்பில்லை''

''ஓ.கே. சொல்ல என்ன தயக்கம்?''

வாதம் நீண்டுகொண்டே போனது. ஒரு கட்டத்தில் திவ்யா, ''எனக்குக் கல்யாணத்தை நடத்திட்டா, உங்க கடமை முடிஞ்சிடும்; ஆனால் என் லைஃப் எப்படியானாலும் பரவாயில்லை... அப்படித்தானே?'' படபடவென்று பேசி விட்டாள்.

இங்கே பிரச்னையெல்லாம், இந்தக் காலத்துப் பெற்றோர்கள், எந்த ஒரு விஷயமானாலும், தங்கள் கருத்துக்களை பிள்ளைகள் மீது திணிக்கத் தயங்குகிறார்கள். எனவே, அவர்கள் விருப்பத்தைக் கேட்கிறார்கள். ஆனால், அதே சமயம், தங்கள் விருப்பம் எதுவோ அதையே அவர்களும் சொல்ல வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள்! மாற்றுக் கருத்தைச் சொல்லிவிட்டால், 'உன் அப்பா, அம்மாவின் கருத்துக்கு நீ கொடுக்கும் மதிப்பு, மரியாதை இவ்வளவுதானா? உனக்காகச் செய்த

▪ டாக்டர் விஜய் நாகஸ்வாமி ▪

தியாகங்களை நீ புரிந்துகொள்ளவில்லையே!' என்று சென்டிமென்டலாக அதிரடித் தாக்குதல் நடத்துவார்கள்.

''நீ படித்தவள்! பெரிய கம்பெனியில் வேலை பார்க்கிறவள்! உலக ஞானம் உள்ளவள்; இப்போதெல்லாம் இன்டெர்நெட்டில் கூட நிறைய திருமண வெப்சைட்கள் இருக்கின்றன! அவற்றின் மூலமாக நீயே ஒரு மாப்பிள்ளையைத் தேர்ந்தெடு! நாங்கள் ஒரு வார்த்தைகூடப் பேசாமல் கல்யாணம் செய்து வைக்கிறோம்'' என்கிற அளவுக்கு அவளுடைய பெற்றோர்கள் வந்துவிட்டார்கள்.

அடுத்த சில நாட்களில், ''உங்கள் ஆஃபீஸிலேயே யாராவது நல்ல பையனா இருந்தால் சொல்லேன்; வேறு ஜாதியாக இருந்தாலும் பரவாயில்லை; உனக்கு ஓ.கே. என்றால் எங்களுக்கும் ஓ.கே.'' என்று சொன்னார்கள்.

''அப்படி யாராவது இருந்தால் சொல்லி இருக்க மாட்டேனா?'' என்று அலுத்துக்கொண்டாள் திவ்யா.

விக்ரமாதித்தன் போல பெற்றோர்கள் தங்களது முயற்சியில் தளராமல் தொடர்ந்து கொண்டிருக்க, திவ்யாவோ, வேதாளம் போல முருங்கை மரமேறிக் கொண்டிருந்தாள்.



இருபத்தொரு வயது திவ்யாவை, என்னிடம் அழைத்து வந்தார்கள். அவளுடன் பேசியதிலிருந்து, அவளுக்கு ஆண்கள் மீதோ, திருமணத்தின் மீதோ எந்தவிதமான வெறுப்பும் கிடையாது என்பது புரிந்தது. ''டாக்டர்! எனக்கு இப்போதுதான் 21 வயது ஆகிறது. படிப்பை முடித்துவிட்டு வேலைக்குச் சேர்ந்திருக்கிறேன். அதற்குள் எதற்காகக் கல்யாணம்? அந்த ஐடியாவே இல்லாதபோது, யார் மேலாவது காதலா? இன்டர்நெட்டில் மாப்பிள்ளை பார்; என்றெல்லாம் கேட்டு நோகடிக்கிறார்கள். டாக்டர்! ஐ யாம் சிம்ப்ளி நாட் ரெடி ஃபார் மேரேஜ்!

தட்ஸ் ஆல்'' என்று சொன்னாள்.

இன்றைக்கு திவ்யாவைப் போல மிடில் கிளாஸ் சமூகத்தில் ஆயிரக்கணக்கான ஆண்களும் பெண்களும் இருக்கிறார்கள். அவர்களின் பெற்றோர்கள், 'படிப்பு முடிந்துவிட்டதா? வேலை கிடைத்துவிட்டதா? கை நிறைய சம்பளமா? வயது இருபத்தொன்று ஆச்சா? அப்படியென்றால், அடுத்து திருமணம் செய்துகொண்டு வாழ்க்கையில் செட்டில் ஆகிவிட வேண்டும்' என்று நினைக்கிறார்கள்.

அந்தக் கண்ணோட்டத்துக்கும், இளைய தலைமுறையினர் கண்ணோட்டத்துக்கும் பெரும் இடைவெளி இருக்கிறது. படித்து முடித்து, வேலைக்குப் போய், அங்கே அனுபவம் பெற்று, சவாலான பொறுப்புகளை ஏற்றுச் சாதித்து, தலை நிமிர்ந்து நின்ற பிறகுதான் கல்யாணம். சமீபகாலமாக நகர்ப்புறங்களில்

திவ்யா மாதிரி, குடும்பத்தினரின் வற்புறுத்தலுக்கு ஆளாகி, மனப்பூர்வமான சம்மதம் இல்லாமல், 'மாப்பிள்ளை பார்க்கலாம்' என்று பச்சைக் கொடி காட்டிவிட்டு, அதன் பிறகு திண்டாடுகிறார்கள்.

வசிக்கும் பெண்கள் திருமணம் செய்து கொள்கிற வயது 25 முதல் 27 ஆக அதிகரித்துவிட்டது. ஆண்களுக்கு 29 முதல் 31.

அவர்களுக்கு தங்களுடைய பெற்றோர்களின் எண்ணம் புரிகிறது. இருந்தாலும், அவர்களின் பாரம்பரியமான சிந்தனையை ஏற்றுக் கொண்டு, சீக்கிரமாக கல்யாணம் செய்து கொள்வதற்கு அவர்கள் தயாராக இல்லை. இதைப் பெற்றோர்களுக்குப் புரிய வைக்கும் பொறுமையும் தெளிவும் வெகு சில இளைஞர்களுக்கே இருக்கிறது. மற்றவர்கள் திவ்யா மாதிரி குடும்பத்தினரின் வற்புறுத்தலுக்கு ஆளாகி, மனப்பூர்வமான சம்மதம் இல்லாமல், மாப்பிள்ளை பார்க்கலாம் என்று பச்சைக் கொடி காட்டிவிட்டு, அதன் பிறகு திண்டாடுகிறார்கள்.

இதுபோன்ற குடும்பங்களில், பையன்களுக்கோ, பெண்களுக்கோ கவுன்செலிங் அவசியமில்லை. அவர்களின் பெற்றோர்களுக்குத்தான் யதார்த்த நிலையை எடுத்துச் சொல்லிப் புரிய வைக்க வேண்டும்.

திவ்யாவின் பெற்றோர்களிடம், திவ்யாவின் மன ஓட்டத்தை எடுத்துச் சொன்னேன். சில வருடங்களுக்கு அவளது திருமணப் பேச்சை அவர்கள் எடுக்கவில்லை. அதன் பிறகு திவ்யாவின் திருமணம் எந்தவிதமான பிரச்னையும் இல்லாமல் சிறப்பாக நடந்து முடிந்தது.

சரி, திருமணமே வேண்டாமென நினைக்கும் பெண்களை என்ன செய்வது?

(அழைப்பு தொடரும்)

எழுத்தாக்கம்: **எஸ்.சந்திரமௌலி**

குறிப்பு : இத்தொடரில் இடம் பெற்றுள்ள படத்துக்கும் தொடருக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை!



"உடம்பு குறைய ஏதாவது வழி சொல்லுங்க டாக்டர்."
"தினமும் வெறும் வயித்துல ஓடுங்க."
"யாருடைய வயித்துல டாக்டர்?"

- எம்.விவேக், குட்டம்.



"வெறும் வயத்துல ஓடுங்க!"




"நான் சின்ன வயசுலயே டாக்டருக்குப் படிக்க ஆசைப்பட்டேன்..."
"அப்புறம், ஏன் ஆகலை?"
"அஞ்சு வயசுப் பையனுக்கெல்லாம் சீட் தர மாட்டேன்னு சொல்லிட்டாங்க."

- எம்.விவேக், குட்டம்.



"நான் எது சொன்னாலும் உடனே ஒரு எதிர்க்கேள்வி கேட்கிறியே, கமலா!"
"அப்படி நான் என்னத்தைக் கேட்டுட்டேன்?"

- ஜி. லட்சுமிபதி, சென்னை-88.



''உங்க தலைவர் பத்து தீவிரவாதிகளுக்குச் சமமா, எப்படி?''

''அவரைக் கடத்திக்கிட்டுப் போனவங்க, ஜெயில்ல இருக்கற 'பத்து தீவிரவாதிகளை' விடுதலை செய்தாத்தான், விடுவேன்னிட்டாங்களே!''

– வெ.சீதாராமன், திருச்சி





''கடன்காரங்களுக்கெல்லாம் ஜூன் மாதம் பணத்தைத் திருப்பித் தர்றேன்னு எந்தத் தைரியத்துல சொல்றீங்க...?''

''அதுக்குள்ள எம்.பி. எலெக்ஷன் வந்துடும்ங்கற தைரியத்துலதான்!''

– உ.குணசீலபாண்டியன்,
இராஜபாளையம்.



''ஸார்... உங்க மனைவிகிட்டேயிருந்து ஃபோன்...''

''பெரிசா நான் என்ன பேசிடப் போறேன்...? நீயே அட்டெண்ட் பண்ணி, 'ம்...ம்...ம்...ம்...'னு சொல்லிடு!''

– எம். அசோக்ராஜா,
அரவக்குறிச்சிப்பட்டி



"சாமி, கணக்கு வாத்தியாரை மாத்திடு!"





''பிள்ளையாரப்பா! எப்படியாவது என்னை கணக்குலயும் இங்கிலீஷ்லயும் மட்டும் பாஸ் பண்ண வெச்சுடு. அப்படியே கந்தசாமி வாத்தியாரை மட்டும் வேற ஸ்கூலுக்கு மாத்திடு!'' இப்படி அரச மரத்தடி பிள்ளையாரிடம் வேண்டிக் கொள்கிற கிராமத்துச் சிறுவர்களை நிச்சயம் பார்த்திருப்போம். அப்படி ஒரு சிறுவனை மையமாக வைத்து எடுக்கப்பட்டிருக்கும் குறும்படம்தான் 'முதல் தலைமுறை'.

இந்தப் படத்தை இயக்கியிருக்கும் விஜயன், சென்னை கடற்கரை ரயில் நிலையத்துக்கு அருகில் இருக்கும் பர்மா பஜாரில், இசைக் கருவிகளை விற்கும் ஒரு கடையை நடத்தி வரும் சாதாரண தெருக்கடை வியாபாரி. வடசென்னை தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் மாவட்டப் பொருளாளராக இருக்கிறார்.

''ஆறு மாசத்துக்கு முன்னாடி 'பதிமூணில் ஒண்ணு'ன்னு ஒரு சிறுகதையைப் படிச்சேன். எழுத்தாளர் ச.தமிழ்ச்செல்வன் அந்தச் சிறுகதையை எழுதியிருந்தார். அதைப் படிச்சவுடனேயே அதை எப்படியாவது படமா எடுத்துடணும்னு தோணிச்சு. தோழர்களோட உதவியோட குறும்படமா எடுத்துட்டேன்'' என்கிறார் இயக்குநர் விஜயன்.

சரி, 'முதல் தலைமுறை' குறும்படத்தின் கதை என்ன?

நடராஜன். ஒன்பதாவது முடித்துவிட்டு பத்தாம் வகுப்புக்குப் போகும் கிராமத்துச் சிறுவன். அவனுடைய அப்பாவுக்கு ஆடு மேய்ப்பதுதான் பரம்பரைத் தொழில். 'படித்தது போதும். ஆடு மேய்க்கப் போ!' என்கிறார் அப்பா. அவனுடைய மாமா பட்டாளத்தில் இருந்தவர். படிப்பின் அருமை தெரிந்தவர். அவர் படிப்பு முக்கியம் என்று அவன் அப்பாவிடம் வலியுறுத்துகிறார். படிக்கப் போகிறான் நடராஜன்.

குறும்படம்

தமிழ்நாட்டு கிராமத்து மாணவர்களுக்கே உரித்தான சாபம் கணிதமும் ஆங்கிலமும். அது நடராஜனையும் விட்டு வைக்கவில்லை. குறைந்த மார்க் வாங்கியதற்காக வறுத்தெடுக்கிறார் கணக்கு வாத்தியார். கணக்கில் பாஸாக வேண்டும் என்பதற்காகவே குலசாமியான சுடலை மாடசாமியில் இருந்து மாறி, மேட்டுத் தெருப் பையன்கள்



கும்பிடும் பிள்ளையாரைக் கும்பிடுகிறான் நடராஜன். பிறகு, அந்தக் கணக்கு வாத்தியாரிடமே ட்யூஷன் சேருகிறான். கணக்கில் பாஸாகிறான்.

அடுத்து ஆங்கிலத்தில் பாஸாக வேண்டும் என்பதற்காக அடுத்த ஊரில் இருக்கும் சர்ச்சுக்கு நடந்தே போய் வேண்டிக் கொள்கிறான். பிறகுதான் தெரிகிறது, இயேசுநாதருக்கே ஆங்கிலம் தெரியாது, அவருடைய தாய்மொழி ஹீப்ரு என்பது. அந்தச் சமயத்தில் அவனுடைய பள்ளிக்குப் புதிதாக வருகிறார் ஒரு ஹெட்மாஸ்டர். கருணை அடிப்படையில் இதுவரை பாஸாகி வந்த பதின்மூன்று மாணவர்களின் பெற்றோர்களை அழைக்கிறார். 'இனிமே நான் இந்த ஸ்கூலுக்கு நல்ல ரிசல்ட் காண்பிக்கணும். உங்க பசங்களை வேற ஏதாவது ஸ்கூல்ல சேர்த்து விட்டுடுங்க' என்கிறார். அந்தப் பதின்மூன்று மாணவர்களில் நடராஜனும் ஒருவன். இந்தப் பள்ளியை விட்டால் நடராஜன் வேறு எங்கே போவான்? எப்படியாவது அவனைத் திரும்பவும் பள்ளியில் சேர்த்துக் கொள்ள வேண்டி, நடராஜனும் அவனுடைய மாமாவும் மீண்டும் மீண்டும் ஹெட்மாஸ்டரைப் பார்க்கப் படையெடுக்கிறார்கள். அத்தோடு முடிகிறது படம்.

''இந்தப் படத்தை சென்னை புத்தகக் கண்காட்சியிலயும் சேலத்துலயும் திரையிட்டோம். சேலத்துல ஒரு தலைமையாசிரியர் 'இது ஆசிரியர்களுக்கு எதிரா இருக்கு'ன்னு சொன்னார். 'ஒரு படைப்புன்னா சில குறைகளைச் சுட்டிக்காட்டத்தான் செய்யும்'னு இதுக்கு தமிழ்ச்செல்வனே பதில் சொன்னார்'' என்கிறார் விஜயன்.



* இயக்குநர் விஜயன்

நடராஜனாக நடித்திருக்கும் நிஜந்தனும், மாமாவாக நடித்திருக்கும் இசையரசனும் பாத்திரம் உணர்ந்து நடித்திருக்கிறார்கள். முரளிதரனின் உறுத்தாத இசையில் நா.வே.அருளின் இரண்டு பாடல்களும் இனிமை.

நல்ல சேதியைச் சொல்லும் இந்தக் குறும்படத்தின் மொத்தச் செலவு முப்பதாயிரம் ரூபாய்.

– பாலு சத்யா

அத்லெடிக்ஸின்

"நீங்கள் ஒரு அத்லெடிக் வீரராக வேண்டுமா? முதலில் கோ-கோ விளையாட்டிலிருந்து துவங்குங்கள் உங்கள் பயிற்சியை. அதில் சிறந்து விளையாடினால் உங்கள் கனவை நனவாக்க முடியும்'' என்கின்றனர் கோ-கோ விளையாட்டில் மாநில அளவில் சாம்பியன் பட்டத்தைத் தட்டி வந்துள்ள லால்குடியை அடுத்த வாளாடி கிராமத்தின் அரசு மேனிலைப் பள்ளி டீம். அதிகமாகப் பிற்படுத்தப்பட்ட



கோ-கோ விளையாட்டோட பூர்விகத்தைத் தெரிஞ்சுக்கலாமே! இந்தியாவில் தோன்றிய இந்த கோ-கோ (kho-kho), தற்போது மகாராஷ்டிராவில் ரொம்ப பாப்புலர். 1914ல் புனே நகரில் இருந்த 'டைக்கான் ஜிம்கானா சங்கம்', கோ-கோ விளையாட்டுக்கான விதிமுறைகளை வகுத்தது. 1955ல் இந்திய கோ-கோ விளையாட்டுச் சங்கமும், 1974ல் தமிழ்நாடு கோ-கோ விளையாட்டுச் சங்கமும் துவங்கப்பட்டன.

இருபத்தொன்பது மீட்டர் அகலம், பதினாறு மீட்டர் நீளச் செவ்வக வடிவமான களமே கோ-கோ விளையாட்டு மைதானம். செவ்வக வடிவத்தின் நீள்வாக்கில் மையக் கோடு. அதில் கோ-கோ வீரர்கள் ஒரு கால் மடக்கி மறுகால் பின்புறம் நீட்டி குத்துக்கால் இட்டு உட்கார வேண்டும். ஒருவர் மற்றொருவர் என எதிரெதிர் திசை நோக்கி ரெடிடேக்கில் இருக்க வேண்டும்.

அமர்ந்திருப்பவர்களும், ஓட்டத்துடன் துரத்துபவரும் ஓர் அணி. துரத்தப்படுபவர்கள் எதிர் அணி! இந்த இரண்டு அணிகளுக்குமிடையேதான் விளையாட்டு. பாய்ண்டு

வகுப்பைச் சார்ந்த மாணவர்கள். இப்பள்ளி தொடர்ந்து பதினைந்து வருடங்களாக கோ-கோ விளையாட்டில் மாவட்ட அளவில் சாம்பியன். தற்போது மாநில



✱ ஷைலா ராணி



✱ ராஜலெட்சுமி

அடிப்படை!

அளவில் சாம்பியன்!

''இது ரொம்ப த்ரில்லான விளையாட்டு. நாலு வருஷமா நான் இந்த விளையாட்டுல இருக்கேன். கோ-கோ விளையாடுறவங்க மத்த எல்லா விளையாட்டுலயும் சிறப்பா ஆடலாம். தடை தாண்டி ஓடுதல், நீளம் தாண்டுதல், உயரம் தாண்டுதல், ஓட்டப்பந்தயம்... என அதலெடிக் விளையாட்டுகளின் அடிப்படை இது!'' என்கிறார் அணியின் கேப்டன் மார்ஷல்.

✱ மார்ஷல்



''ஜெயங்கொண்டம் வட்டம், தத்தவனூர் மீனாட்சி ராமசாமி கல்லூரியில் மாநில அளவிலான கோ-கோ போட்டிகள் நடைபெற்றன. எங்கள் பள்ளி அதில் முதலிடம் பிடித்து மாநில சேம்பியன் கழற்கோப்பை வென்று வந்துள்ளது. ஏழை எளிய மாணவர்கள் படித்து வரும் அரசு மேனிலைப் பள்ளியில் இதுபோன்றதொரு வெற்றியைப் பெற்றது எங்கள் பள்ளிக்குப் பெருமை!'' எனக் கூறுகின்றனர் வாளாடி அரசு மேனிலைப் பள்ளி உடற்கல்வி ஆசிரியர்கள் ஜான் ஷைலா ராணி, ராஜலெட்சுமி.

– ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு

தான் இதில் வெற்றிக் கணக்கு.

ஓடுதல் (Running), துரத்துதல் (Chasing), கோ-கொடுத்தல் (Given kho), தப்பி ஓடுதல் (Dodging) ஆகியன கோ-கோ விளையாட்டின் அடிப்படைத் திறன்கள்.

கோ-கொடுப்பவர் அமர்ந்திருப்பவரின் முதுகுப்புறம் தொடும்பொழுதோ, தொட்ட உடனோ அல்லது தொட்ட பின்னரோ சத்தமாக கோ என்று கூறவேண்டும். கோ - கூறுவதற்கு முன் அமர்ந்திருப்பவர் தன் நிலையிலிருந்து எழக் கூடாது. எட்டு பேர் எட்டு சதுரங்களில் 'எப்பொழுதும்' ஓட ரெடி. துரத்துபவர் ஒரு கம்பத்தின் அருகிலிருந்து எதிரியைத் துரத்த தயார் நிலையில் இருப்பார். ஓடுபவர் அணியிலிருந்து மூன்று பேர் ஓடத் தயாராக நிற்பர். ஆட்டத்தை ஆரம்பித்தவுடன் attacker துரத்த defenders தப்பியோட முயற்சிப்பார்கள்.



தொலைந்துபோன தம் மகளைத் தேடி பாகிஸ்தானில் இருந்து பலமுறை இந்தியா வந்து வீதிவீதியாகத் தேடி அலைந்திருக்கிறார் அந்தத் தந்தை. 'பதின் மூன்றாவது வயதில் சில இந்துக்கள் கடத்திக்கொண்டு சென்றிருக்கிறார்கள். என் மகள் எத்தனை அழகு தெரியுமா?' என்று நண்பர்கள் அனைவரிடமும் சொல்லிச் சொல்லிப் பிதற்றியிருக்கிறார். கடைசியாக ஒரு முறை வந்தபோது, இந்தியக் காவல் துறை அவரைக் கைது செய்திருக்கிறது, பாகிஸ்தான் உளவாளி என்னும் குற்றச் சாட்டுடன். தற்போது அவர் சிறையில் இருக்கிறார். தன் மகளை அவர் இனி பார்க் கவே போவதில்லை.

பிர் பகதூர் சிங் என்பவர் இப்படி நினைவுகூர்கிறார்: 'முஸ்லிம்களுடன் நாங் கள் நன்றாகவே பழகி வந்தோம். எங்கள் வீட்டில் ஒரு பண்டிகை என்றால் அவர்களை நிச்சயம் நாங்கள் அழைப் போம். எங் களுடன் சேர்ந்து அவர்களும் நன்றாகக் கொண்டாடுவார்கள். ஆனால், சாப்பிடும்போதுதான் ஒரு வித்தி யாசத்தை உணர முடியும். டேபிளில் எங் களுக்குத் தட்டு வைக்கப்பட்டிருக்கும். ஆனால் அவர்களுக்கு ஒரு ஓரத்தில் வைக் கப்பட்டிருக்கும். அதை அவர்களாகவே எடுத்து வைத்துக்கொள்ள வேண்டும். சாப்பிட்டு முடித்தபிறகு அவர்களே அதைச் சுத்தப்படுத்தி வைக்கவேண்டும். பாகிஸ் தான் தேசம் உருவானதற்கு இதுதான் காரணம் என்று நினைக்கிறேன்.'



ரத்தத்தால்

யார் காரணம்? எதனால் ஒரு தேசம் இரண்டாகப் பிளக்கப்பட்டது? யார் வில்லன்? காந்தி முதல் ஜின்னா வரை, மவுண்ட்பேட்டன் முதல் படேல் வரை, சர்ச்சில் முதல் சாவர்க்கர் வரை அனை வரையும் சரித்திர ஆசிரியர்கள் அலசி ஓய்ந்துவிட்டார்கள். ஆனால், இந்தியப் பிரிவினை ஏற்படுத்திய, ஏற்படுத்திக் கொண்டிருக்கும் விளைவுகளை ஒருவரும் மறுக்கவில்லை.

மிகவும் வெளிப்படையான விளைவு கள் அவை. சதத் ஹஸன் மாண்டோ அவற்றை எழுத ஆரம்பித்தார். பிரிட்டன் ஆட்சிக்கு உட்பட்டிருந்த இந்தியாவில் பிறந்து (பஞ்சாப்), பிரிவினைக்குப் பிறகு பாகிஸ்தானியராக மாறியவர். மாண்டோ, பிரிவினையை பைத்தியக்காரத்தனத்தின் உச்சக்கட்டமாகவே பார்த்தார். அந்தப் பைத்தியக்காரத்தனத்தை கதைகளாக எழுத ஆரம்பித்தார். இருபத்து இரண்டு சிறு கதைகள், ஒரு நாவல், ஐந்து நாடகத் தொகுப்புகள், மூன்று கட்டுரைத் தொகுப்பு கள், இன்னமும் சில. எல்லாவற்றிலும் அடிநாதம், இந்தியப் பிரிவினை.

ஒரு தேசத்தில் கால்வாய் தொடங்கும். தண்ணீரைப் பாதுகாக்கும் அணைகள் இன்னொரு தேசத்தில் முற்றுப் பெற்றிருக் கும். எப்படிப் பிரிப்பது இதை? கால் வாயை உடைத்தா? அணைகளைப் பெயர்த்தா? ஒரு கிராமத்துக்கு நடுவே கோடு இழுக்கப்பட்டிருந்தது. ஒரு பகுதி பாகிஸ்தான். ஒரு பகுதி இந்தியா. எப்படிப் பிரிப்பது அந்தக் கிராமத்தை?

பஞ்சாபில் இருந்த அனைத்துச் சிறைச் சாலைகளும் இனி பாகிஸ்தானுக்



ஒரு கோடு!

மருதன்

குத்தான். உச்சக்கட்டமாக அந்தக் கோடு ஒரு வீட்டை இரண்டாகப் பிரித்துச் சென்றது. முன்பக்க வாசல் வழியாக வந்தால் இந்தியா. பின் பக்கம் வந்தால், பாகிஸ்தான். வீடுகளைப் பிரிக்கலாம். பஞ்சாபில் இருந்த ஒரே ஒரு 'மனநோயாளிகள் புகலிட'த்தை என்ன செய்வது? மனநலம் சரியில்லாதவர்களை எப்படிப் பிரிப்பது?

மாண்டோவின் சிறுகதைகளில் மிகச் சிறந்ததாகக் கொண்டாடப்படுவது டோபா டேக் சிங். அந்தக் கதையின் கருவும் இதுவேதான். பைத்தியக்கார விடுதியை எப்படிப் பிரிப்பது என்று பலவாறாகச் சிந்தித்து ஆராய்ந்தபிறகு, மனநலம் பாதிக்கப்பட்டவர்களை இரு குழுக்களாகப் பிரிக்கவேண்டும். பாகிஸ்தானில் உள்ள இந்து மற்றும் சீக்கிய மனநோயாளிகளை இந்தியாவுக்கு அனுப்ப வேண்டும். இந்தியாவில் இருந்து முஸ்லிம் மனநோயாளிகளை பாகிஸ்தானுக்கு அனுப்ப வேண்டும்.

'சரி... வா கிளம்பலாம்' என்று சொன்னபோது, டோபா டேக் சிங் உள்ளிட்ட மனநோயாளிகள் எண்ணற்ற குழப்பங்களுக்கு ஆட்படுகிறார்கள். நான் இந்தியாவைச் சேர்ந்தவனா அல்லது பாகிஸ்தானைச் சேர்ந்தவனா? நேற்று வரை நான் இருந்த இந்தியாவின் ஒரு பகுதி திடீரென்று ஏன் பாகிஸ்தானாக மாறியது?

சுதந்திரம் வந்துவிட்டது என்று சொல்கிறார்கள். இரவெல்லாம் கண்விழித்துக் காத்துக் கொண்டிருந்தேன். எங்கே வந்தது? எப்போது? எப்படி இருக்கும் சுதந்திரம்? சுதந்திரமும் பிரிவினையும் சேர்ந்தே வந்ததா? இந்தியாவின் ஒரு பகுதி பாகிஸ்தானாக மாறிவிட்டது என்றால், ஒட்டுமொத்த இந்தியாவும்கூட நாளை பாகிஸ்தானாக மாறிவிடுமா? ஒட்டுமொத்த பாகிஸ்தானும் வேறொன்றாக மாறிவிடுமா? அப்படி மாறினால், பழைய இந்தியா என்னவாகும்? மனநோயாளிகள் எழுப்பிய கேள்விகளுக்கு உயர் அதிகாரிகளிடம் விடைகளில்லை.

'நான் வரமாட்டேன்' என விடாப்பிடியாக மறுத்த டோபா டேக் சிங் இறுதியில் இறந்து போகிறார். அவர் விழுந்து கிடந்த அந்த இடம், இரு தேசங்களும் சொந்தம் கொண்டாடாத ஒரு சிறிய பகுதி.

கலக்க வருதுப்பா

கல்கி

கெட் ரெடி!
கெட் ரெடி!
கெட் ரெடி!

உங்க மாவட்டத்துல
'சூப்பர்' எதுங்க? 'வேஸ்ட்' எதுங்க?

- நீங்க ஜாலியா ரவுண்டடிக்கிற டூரிஸ்ட் ஸ்பாட் எதுங்கோ?
- பார்த்ததும் பரவசமா கும்பிடு போடற கோயில் எங்கெல்லாம் இருக்குங்க?
- அசத்தலா போட்டுகிட்டு அதிரடி பண்ண சேலை.ஜீன்ஸ் சுத்துவட்டாரத்துல எங்கே பெஸ்ட்டா கிடைக்கும்ங்க?
- உங்க மாவட்டத்தோட தலை போற பிரச்னை எதுங்க? எப்படித் தீர்க்கலாம்ன்னு நினைக்கறீங்க?
- மிஸ்டர் மாவட்டம் யாருங்கண்ணா? என்ன காரணமுங்க?
- கலக்கலா கதை எழுதுவீங்களா? அசத்தலா கவிதை வருமா?
- லொள்ளு பண்ற 'ஜோக்ஸ்' கைவசம் இருக்கா?

-'ஆமா'ன்னா உடனே 'கல்கி'க்குத் தட்டி விடுங்க!

கோயம்புத்தூர்
கண்ணுங்களா... நாம 'லொள்ளு'
பண்றது மட்டுமில்ல...
எல்லாத்துலயும் 'சூப்பர்'னு
கல்கிக்கு நிரூபிங்க



கோயம்புத்தூருக்கு வர்றோம்முங்க!

நீங்க ச்சும்மா கோடு போடுங்க...
நாங்க உடனே ரோடு போடறோம்!

ஆமாம்! உங்கள் மாவட்டத்துக்கு 'கல்கி' குழு, நேரில் வந்து உங்கள் பிரச்னை / யோசனையை ஆராய்ந்து, உங்கள் வாய்ஸுக்கு 'கல்கி' இதழ் மூலம் மைக் கொடுக்கும்?

ஆனா சில கண்டிஷன்ஸ்...

- கீழே உள்ள கூப்பனைக் கத்தரித்து ஒட்டி அனுப்பப்படும் கடிதம், படைப்பு மட்டுமே, பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்...
- ஒரு கடிதத்தில் 5 செய்திகள் / படைப்புகள் மட்டுமே இருக்கலாம்.
- ஒருவரே எத்தனை கடிதம், படைப்புகள் வேண்டுமானாலும் அனுப்பலாம் (தனித்தனி கூப்பனுடன்).
- பிரசுரமாகும் கடிதங்கள், யோசனைகள், படைப்புகளுக்குச் சன்மானங்கள் உண்டு.
- வாசகர்கள் தேர்வு செய்யும் மிகச் சிறந்த கடிதம் அல்லது யோசனை அல்லது படைப்புகளுக்குச் சிறப்புப் பரிசும் உண்டு...
- மாவட்டத்தின்...

பிரச்னைகளுக்கு - ☑ பெட்டிஷன் பாக்ஸ்

ஆன்மிக, வியாபார சுற்றுலா
தலங்களின் சிறப்புக்கு - ☑ நியூஸ் ஏந்தி பவன்

சிறுகதைகள், கவிதைகளுக்கு - ☑ வேடந்தாங்கல்

நகைச்சுவைக்கு - ☑ ஜோக் ஃபால்ஸ்

என்றவாறு கூப்பனில் ☑ செய்து கவரின் மேல் ஒட்டி, உங்களின் முழு முகவரி, தொலைபேசி தொடர்பு எண் ஆகியவற்றைக் கட்டாயம் எழுதி அனுப்பவும்.

கடிதங்கள் வந்து சேரவேண்டிய கடைசி தேதி : 14.3.2009



கலக்க வருதுப்பா கல்கி
கோவை மாவட்டம்

☐ நியூஸ் ஏந்தி பவன் ☐ பெட்டிஷன் பாக்ஸ்
☐ வேடந்தாங்கல் ☐ ஜோக் ஃபால்ஸ்

47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

அதிகாலை நாலரைக்கு அழைப்பு மணி ஒலித்தது.

''இந்த நேரத்தில் யாருப்பா?'' கண்களைத் தேய்த்தபடி கதவைத் திறந்தேன். வெள்ளை வெளேர் உடை அணிந்த ஒருவர், ''முருகன்..?'' என்றார்.

''நான்தான், நீங்க?''


அவர் எனக்கு ஒரு பெரிய சல்யூட் வைத்து, ''கார் வந்திருக்கு சார்'' என்றார்.

அப்போதுதான் எனக்கு நினைவு வந்தது. இன்றைக்கு நாங்கள் பிக்னிக் போவதாகத் திட்டம். ஐந்து மணிக்குக் கிளம்பலாம் என்று பேசிக்கொண்டிருந்தோம். சரியாக நாலரைக்கு கார் வந்துவிட்டது.

அந்த அதிகாலையிலேயே பளிச்சென்று இருந்த அவரை, நான் வெட்கத்தோடு பார்த்தேன். ''நீங்க கொஞ்சம் வெயிட் பண்ணுங்க. நாங்க இதோ கிளம்பிடறோம்.''

''மெதுவா வாங்க சார், ஒண்ணும் அவசரம் இல்லை'' என்றபடி அவர் செய்தித்தாளைப் பிரித்துக்கொண்டார்.

மலையாள மனோரமா, கேரளாவின் 'நம்பர் ஒன்' செய்தித்தாள். இந்த டிரைவரும்



அதே மலையாள மனோரமாவில் வேலை பார்க்கிறவர்தான்.

நானும் என்னுடைய நண்பர்கள் இரு வரும் பெங்களூரிலிருந்து இங்கே கோட்டயத்துக்குப் பயணம் வந்திருந்தோம். 'மலையாள மனோரமா' நிறுவனத்தின் இணையதளத்தை வடிவமைப்பதற்காக.

நூற்றாண்டுப் பாரம்பரியம் கொண்ட ஒரு செய்தித்தாளை இணையத்துக்குக் கொண்டு செல்வது என்றால், சாதாரண விஷயமா? நாங்கள் அங்கேயே ஒன்றிரண்டு வாரங்கள் தங்கி, செய்தி ஆசிரியர்கள், புகைப்படக் கலைஞர்கள், ஓவியர்கள், வரி விளம்பரக்காரர்கள், சந்தா விற்பனை அதிகாரிகள்... எனப் பல்வேறு பிரிவினரு

ஒரு உபசாரம்

என். சொக்கன்



டன் பேசி, அவர்களுடைய தேவைகளைப் பதிவுசெய்ய வேண்டியிருந்தது.

ஒரு வாரத்தில் முடிந்துவிடும் என்று நினைத்த வேலை, பத்து நாள், பதினைந்து நாள் என்று இழுத்தடித்தது. நான்கைந்து மாற்றுத் துணிகளுடன் புறப்பட்டு வந்திருந்த நாங்கள் மிகவும் சங்கடப்பட்டோம். எப்போது மறுபடி வீட்டைப் பார்ப்போம் என்றாகிவிட்டது.

எங்களுடைய வேதனையை அங்கிருந்தவர்கள் புரிந்துகொண்டார்கள். 'இந்த சனி, ஞாயிறு சும்மா கெஸ்ட் ஹவுஸ்ல போரடிச்சுக்கிட்டு உட்கார்ந்திருக்க வேண்டாம், ஜாலியா ஒரு பிக்னிக் போய்ட்டு வாங்க' என்று, அவர்களே ஒரு காரை டிரைவருடன் அனுப்பி வைத்திருக்கிறார்கள்.

ஐந்து மணி பிக்னிக்குக்கு நாங்கள் சரியாக ஆறரைக்கு ரெடியாகிவிட்டோம். குளிரில் உடல் நடுங்க வெளியே வந்தபோது, கார் கதவு திறந்து தயாராக இருந்தது.

டிரைவருக்கு நடுத்தர வயது. அவரு

காந்தியடிகள் கோட்சேயின் குண்டுக்கு 1948-ம் வருடம் ஜனவரி மாதம் 30-ம் தேதி மாலை இரையானார். அதற்கு முந்தின தினம் - தமது வாழ்வின் இறுதிப் பிரார்த்தனைக் கூட்டத்தில் காந்திஜி கூறியதாவது:

''சென்னை மாநிலத்தில் கொடிய வறட்சியும், பஞ்சமும் பரவியுள்ளதாக அங்கிருந்து உதவி கோரி வந்துள்ள அரசாங்கப் பிரதி நிதியின் வாயிலாக அறிந்து மிகுந்த துயருற்றேன். சென்னை மக்கள் தன்னம் பிக்கையுடன் போராடினால் பஞ்சத்தை விரட்ட முடியும். சென்னை மாநிலத்தவர் களை நான் நன்கு அறிவேன். தென்னாப் பிரிக்காவில் அவர்களுடன் நெருங்கிப் பழகியுள்ளேன். அவர்களது சகிப்புத் தன்மையையும், விடாமுயற்சியையும் கண்டு நான் வியந்துள்ளேன். அப்படியிருக்க, அவர்கள் ஏன் இன்று பஞ்சம், வறட்சி என்று கலக்கமடைந்துள்ளார்கள்? நாம் அனைவரும் தொழிலாளிகள் என்ற உணர்வுடன் நேர்மையையும், நாணயத் தையும் மேற்கொண்டு ஒழுகினால் நிச்சயம் வெற்றி பெறுவோம்'' என்றார்.



- என். ஜரினாபானு,
திருப்பட்டினம்.

டைய வெள்ளை வெளேர் யூனிஃபார்ம் போலவே வண்டியும். முதுகுக் கண்ணாடியில் கொட்டை எழுத்தில் 'மலையாள மனோரமா' என்று எழுதியிருந்தது.

கேரளாவில் எங்கு பார்த்தாலும் பச்சைப் பசுமை, கூடவே லேசான மழையும். சும்மா வண்டி ஓட்டிக்கொண்டு சாலையில் போவதே அற்புதமான பிக்னிக் மாதிரிதான் இருந்தது.

அன்றைக்கு நிறைய ரப்பர் மரங்கள் பார்த்தோம். இடையிடையே மிளகுச் செடிகள், ஏலக்காய், இன்னபிற வாசனைப் பொருட்கள், போனால் போகிறதென்று ஒரு கோயில், கடைசியாக தேக்கடி ஏரியில் படகுச் சவாரி.

திரும்பும் நேரத்தில், என்னுடன் வந்திருந்த நண்பர்கள் இருவரும் ஒரு மாதிரியாக நெளிந்தார்கள், பேச்சு மறந்து போனவர்கள் போல் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டு தலைகுனிந்தார்கள்.

''என்னப்பா விஷயம்?'' விசாரித்த போது, பூனைக்குட்டி வெளியே வந்தது.

கேரளாவில் கள் விசேஷம் என்று அவர்களுக்கு யாரோ சொல்லியிருக்கிறார்கள். அது எங்கே கிடைக்கும் என்று டிரைவரிடம் அசடுவழிய விசாரித்தார்கள்.

அந்த டிரைவர் பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை. ''நானே கூட்டிட்டுப் போறேன் சார்'' என்று காரை நிறுத்திக் கதவைத் திறந்துவிட்டார், ''இறங்குங்க.''

''ஏன்? கார் அங்கே போகாதா?''

''போகும் ஸார், ஆனா, மலையாள மனோரமா வண்டி கள்ளுக்கடை முன்னாடி நிக்கக்கூடாது'' என்றார் அவர்.

அந்த வார்த்தைகளில், அவர் எங்களைச் செருப்பால் அடித்தாற்போல் இருந்தது. ●

அருள்வாக்கு

பூர்த்த தர்மம்!



அன்னதானம் பரோபகாரத்தில் ஓர் அம்சமே. பரோபகாரம், சமூக சேவை, சோஷியல் ஸர்வீஸ் என்று இந்த நாட்களில் ஆர்ப்பாட்டமாகப் பிரகடனம் பண்ணுவதை, முற்காலத்தில் எந்தப் பகட்டுமில்லாமல் சுபாவமாகவே மக்கள் செய்து வந்தனர். இதற்கு 'பூர்த்த தர்மம்' என்று ஒரு பெயர். ஜனங்களுக்காகக் கிணறு, குளம் வெட்டுவது, அன்னதானம், அவர்களின் ஆத்ம க்ஷேமத்துக்காகக் கோயில் கட்டுவது, அதன் அங்கமாக நந்தவனம் அமைப்பது எல்லாம் 'பூர்த்த தர்ம'த்தில் சேர்ந்தவை. இதில் கிணறு, குளம் வெட்டுவது முதலில் சொல்லப்பட்டிருக்கிறது. அதனால்தான் பேச்சுவழக்கில்கூட, 'அவன் என்ன செய்து கொண்டிருக்கிறான்? வெட்டிக் கொண்டு இருக்கிறானா?' என்கிறோம். 'வெட்டுவது' அவ்வளவு பெரிய தர்மம். தாகமெடுத்த பசுக்களும் மற்ற பிராணிகளும் நீர் அருந்துவதற்காகக் கிராமத்துக்கு வெளியே மேய்ச்சல் பூமியில் ஒரு குளம் வெட்டினால் எவ்வளவோ புண்ணியம். ஒரு கிராமத்தில் அல்லது பேட்டையில் இருக்கிற சகலரும், பணக்காரர் ஏழை என்ற வித்தியாசமில்லாமல், உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்கிற வித்தியாசமில்லாமல், ஒன்று சேர்ந்து மண்வெட்டியைக் கையில் எடுத்துக்கொண்டு இப்படிப்பட்ட சரீரப் பிரயாசையுள்ள பரோபகார சேவைகளில் ஈடுபட வேண்டும். இதனால் சமூக ஒற்றுமையும் அதிகமாகும். புத்தி சுத்தமாக கல்வி, மனசு சுத்தமாக தியானம், வாக்குச் சுத்தமாக ச்லோகம் - இப்படியெல்லாம் இருக்கின்றன அல்லவோ? சரீரம் சுத்தமாவதற்கு அதனால் சேவை செய்ய வேண்டும். உழைக்க உழைக்க சித்தசுத்தியும் வரும். உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்று இல்லாமல் எல்லோருடனும் சேர்ந்து மண்ணை வெட்டும்போது அகங்காரத்தையும் வெட்டி எடுத்ததாகும். குளத்தில் தண்ணீர் ஊறுவதைவிட நம் இருதயத்தில் ஊறுகிற அன்பே முக்கியம்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய சுவாமிகள்

6

தஞ்சாவூர்க்கவிராயர்

கண்ணில் தொங்கும்

பழுத்தபிறகு நீ
என்னவாகிறாய் என்பதுதான்
கேள்வி.

பழமாகவும் ஆகலாம்
சருகாகவும் உதிரலாம்
எல்லாம் உன்
பக்குவத்தைப் பொறுத்தது.

பழுப்பது என்பது
முழுமை நோக்கிப் பயணம்
முடிவை நோக்கிய பயணம் அன்று

நரைப்பதும் பழுப்பதும்
ஒன்றையே சுட்டுகின்றன
உண்ணப்படுவதற்கான
உன்னத நிலையை நீ
அடைந்துவிட்டாய் என்பதே அது.

பழுத்தபிறகு உன்னை நோக்கி
வீசப்படும் வினாக்களை
விலக்கிவிடு.
பழம் குறித்த
கருத்துக்கள் பல உண்டு.

சருகும் பழம்தான்
பழமும் சருகுதான்.

பார்ப்பவர் கண்ணிலே
பழம் தொங்குகிறது.
உன்னில் கனிந்ததை
உலகுக்குக் கொடு
பழு.
விழு.


பழம்!

நடக்குமென்பார்; நடக்கும்!

மேஷம்: உத்தியோகத்தில் வெற்றி வாய்ப்பு தேடி வரும். புதிய வேலைக்குச் செல்ல நேரிடும். வீடு / மனை வாங்க நல்ல தருணம். பூர்வீகச் சொத்து பாகப் பிரிவினை ஆகும். கல்வி வளம் மேலோங் கும். மன உளைச்சல் தீரும். வழக்கு வெற்றி பெறும். ராகு / கேது / குரு வழிபாடு செய்து வந்தால் சங்கடங்கள் தீரும்.

ரிஷபம்: மேல்நாட்டிலிருந்து நல்ல தகவல் வந்து சேரும். சுபகாரியப் பேச்சு வார்த்தை பலிதமாகும். உத்தியோகத்தில் நற்பெயர் ஏற்படும். வராத நிலுவைகள் வந்து சேரும். உடல் நலம் பாதிக்காது. மகப்பேறு பாக்கியம் ஏற்படும். வியாபாரத் தில் நல்ல வருவாய் ஏற்படும். சனி வழி பாடு நற்பலனை அளிக்கும்.

மிதுனம்: உடல் நிலையில், கொடுக்கல் வாங்கலில் கவனம் தேவை. குடும்ப வாழ்க்கையில் விட்டுக்கொடுத்துப் போவது நல்லது. யாரிடமும் வாக்குவாதம் வேண்டாம். கூட்டாளிகளிடம் பேசும் போது கவனமாக இருக்கவும். வேலைப் பளு அதிகரிக்கும். வழக்கு தாமதம் ஆகும். ராகு / கேது / குரு வழிபாடு செய்துவர நற்பலன் உண்டாகும்.

கடகம்: மனத்தில் நினைக்கும் காரியம் நிறைவேறப் போகிறது. வேலையில் இருந்து வந்த பயம் விலகும். கொடுக்கல் வாங்கலில் இருந்து வந்த சிக்கல் தீரும். செலவுகள் சுபமானதாக இருக்கும். கடன் சுமை குறையும். வழக்கு வெற்றி அளிக் கும். கல்வியில் முன்னேற்றம் ஏற்படும். ராகு / கேது / சனி வழிபாடு நற்பலனை அளிக்கும்.

சிம்மம்: எதிலும் தோல்வி பயம் தழுவும். மன பிரமை அதிகரிக்கும். தேவை இல்லாத செலவுகள் அதிகரிக்கும். இல்லற வாழ்வில் விரிசல் வர ஆரம்பிக்கும். யாரி டமும் வாக்குவாதம் தவிர்க்கவும். திருமண முயற்சி சற்று தாமதம் ஆகும். வியாபாரம் சற்று மந்தமாக இருக்கும். சனி / குரு வழிபாடு செய்துவர நற்பலன் உண்டாகும்.

கன்னி : திருமணக் காரியம் நிறை வேறும். குழந்தைகள் மூல சந்தோஷம் கிட்டும். நீண்டகாலப் பிரச்னை முடிவுக்கு வரும். பூர்வீகச் சொத்து வந்து சேரும். கணவன் - மனைவி உறவு நன்றாக இருக் கும். கடன்தொல்லை தீரும். வேலையில் உயர்வு உண்டாகும். உடல் ஆரோக்கியம் சீராகும். சனி / ராகு / கேது வழிபாடு செய்து வர நற்பலன் உண்டாகும்.

துலாம்: நீண்ட காலப் பிரச்னைகள் முடிவுக்கு வரும். வீடு / மனை மூலம் ஆதாயம் கிட்டும். உத்தியோகத்தில் இட மாற்றம் உண்டாகும். புதிய வேலை வாய்ப்பு தேடி வரும். குடும்ப வாழ்வு நன்றாக இருக்கும். குழந்தைகள் மூலம் கவலை ஏற்படும். ராகு / கேது / குரு வழிபாடு செய்து வர சங்கடங்கள் தீரும்.

விருச்சிகம்: புதிய பதவி தேடி வரும். புண்ணிய ஸ்தலம் செல்வீர்கள். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். உத்தி யோகத்தில் உயர்வு ஏற்படும். குடும்ப வாழ்வு நன்றாக இருக்கும். கல்வி வளம் மேலோங்கும். குரு / சனி வழிபாடு செய்துவர நற்பலன் கிட்டும்.

தஞ்சை பரத்வாஜ்

தனுசு: விட்டுக்கொடுத்துப் போவது நல்லது. மன உளைச்சல் விலகும். பண வசதி பெருகும். செலவுகள் சுபமானதாக இருக்கும். வராத நிலுவைகள் வந்து சேரும். கல்வி வளம் மேலோங்கும். வழக்கு வெற்றி பெறும். வியாபாரத்தில் நல்ல வருவாய் கிட்டும். ராகு / கேது வழிபாடு செய்துவர நற்பலன் கிட்டும்.

மகரம் : படிப்பில் முன்னேற்றம் ஏற்படும். கணவன் - மனைவி உறவு நன்றாக இருக்கும். வழக்கு வெற்றி பெறும். கொடுக்கல் வாங்கலில் சிக்கல் விலகி, வராத நிலுவைகள் வந்து சேரும். பூர்வீகச் சொத்து விற்று பணம் வந்து சேரும். திருமணத் தடை விலகும். சனி / ராகு / கேது/ குரு வழிபாடு செய்துவர நற்பலன் கிட்டும்.

கும்பம்: மன அமைதி ஏற்படும். பொன் பொருள் சேரும். வாக்கு வன்மை மேலோங்கும். கடன்தொல்லை தீரும். கணவன் / மனைவி உறவு நன்றாக இருக்கும். எதிர்பார்த்த காரியம் கைகூடும். குழந்தைகள் பற்றின கவலை தீரும். கல்வி வளம் மேலோங்கும். செலவுகள் பயனுள்ளதாக இருக்கும். சனி / குரு வழிபாடு நன்மை தரும்.

மீனம்: திருமணம் கைகூடும். பூமி வாங்கும் யோகம் கிட்டும். நண்பர் / உறவினர் மூலம் அனுகூலம் ஏற்படும். வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். புதிய வேலை வாய்ப்பு வந்து சேரும். கணவன் - மனைவி உறவு நன்றாக இருக்கும். ராகு / கேது வழிபாடு நற்பலனை அளிக்கும்.



15.02.09 முதல்
21.02.09 வரை

Pete's Media PC - Microsoft Internet Explorer

File Edit View Favorites

www.gyanpedia.in

ஜனவரி பிறந்துவிட்டாலே போதும். மாணவர்களுக்கும் பெற்றவர்களுக்கும் இதயத்துடிப்பின் வேகம் அதிகரிக்க ஆரம்பித்துவிடுகிறது.

பிப்ரவரி மாதம் என்றால், பயமும் படபடப்பும் தாறுமாறாக எகிற ஆரம்பித்துவிடுகிறது.

தேர்வுகளை எதிர்கொள்வதைப் பற்றி எழுகின்ற இந்த அச்சத்தைத் தவிர்ப்பது எப்படி?

படிப்பதோடு பரீட்சை எழுதுவதற்கும் வழிகாட்டுகிறது **www.gyanpedia.in** இணையதளம்.

திருப்புத் தேர்வுகள், செய்முறை பயிற்சித் தேர்வு, நேர்காணல் தேர்வு... என்று தேர்வு முறைகள் ஒவ்வொன்றைப் பற்றியும் விரிவான, தெளிவான ஆலோசனைகள் இத்தளத்தின் சிறப்பம்சம்.



இன்டர்நெட்டில் பொன்னியின் செல்வன்!

www.keetru.com



தினசரிகளும் வார இதழ்களும், நாம், விழித்தெழும் முன்பே வீடுதேடி வந்துவிடுகின்றன.

ஆனால், இலக்கியம், அரசியல், சமூகம் குறித்து அக்கறையோடும் ஆய்வுத் தன்மையோடும் வெளிவரும் சிற்றிதழ்களைத் தேடி நாம்தான் அலைய வேண்டியிருக்கிறது.

இந்தத் தேடல் முயற்சி இப்போது அவசியமே இல்லை. **www.keetru.com** என்ற தமிழ் இணையதளத்துக்குள் ஒருமுறை நுழைந்து வெளிவந்தாலே போதும்.

புதுவிசை, கனவு, கவிதாசரண், சமூக விழிப்புணர்வு, சஞ்சாரம், செம்மலர், தக்கை... என்று இருபதுக்கும் மேற்பட்ட இதழ்கள் இத்தளத்தில் வாசிக்கக் கிடைக்கின்றன.

'அமரர் கல்கி'யின் ரசிகர்களுக்கு மகிழ்ச்சியான மற்றொரு செய்தி. பொன்னியின் செல்வன், சிவகாமியின் சபதம்கூட இந்தத் தளத்தில் காணக் கிடைக்கின்றன!



‘வலை’யோடு விளையாடு

www.makkal-sattam.org

சட்டம், நீதி, வழக்கு என்றாலே நம்மில் பலருக்கு அலர்ஜி. சட்டங்கள் பெரும்பாலும் ஆங்கிலத்திலேயே இருப்பதால் வக்கீல்களின் உதவி தவிர்க்க முடியாததாகிவிடுகிறது.

எனினும், ஒவ்வொரு குடிமகனும் நாட்டிலுள்ள சட்டங்களை அவசியம் தெரிந்துகொண்டே ஆகவேண்டும். ஏனெனில் சட்ட அறியாமை மன்னிக்கப்பட மாட்டாது. அதை எதிர்வாதமாக எந்த நீதிமன்றத்திலும் முன் வைக்கமுடியாது.

இந்தச் சூழலில் சட்டம் குறித்த எளிமையான அறிமுகத்தை வழங்குகிறது **www.makkal-sattam.org.** காப்புரிமை, விவாகரத்து, க்ரெடிட் கார்டு பிரச்னைகள், சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் மனித உரிமைகள் என்று தற்போதுள்ள மிக முக்கியமான பிரச்னைகள் குறித்து எழுதப்பட்ட கட்டுரைகள் இத்தளத்தில் நிறைந்திருக்கின்றன.

உரிமைகள் கேட்டு வாள் சுழற்றும் போது, சட்ட அறிவே கேடயம்.

- **ஸாந்த்**

களந்தை பீர்முகம்மது

கேள்விக்குறியின் கழுத்தில் தங்கச் சங்கிலி!

அறையின் கதவைத் தட்டும் விதத்திலேயே, தட்டுபவர் இன்னார்தான் என்று என்னால் கண்டுபிடிக்க முடியும். தட்டும் ஓசை இப்போது வேறுவிதமாக இருந்தது; திறந்தேன். ஹக்கீம் நின்று கொண்டிருந்தார். எனது மச்சியின் மகனாக அவர் இருந்தாலும், எனக்கும் அவருக்கும் எவ்விதத் தொடர்புமில்லை. இந்த ஊருக்கு ஹக்கீம் வர வாய்ப்பேயில்லை. அவர் சிரித்தார். என்னால் பதிலுக்குச் சிரிக்க முடியவில்லை. நான் வாசலை மறைத்து நின்றேன். அவர் என் கைகளை விலக்கிவிட்டு அறையினுள் நுழைந்தார்.

''குலசேகரப்பட்டினம் வரைக்கும் வந்தேம்பா. நேரம் இருட்டிடுச்சு. அதோட ஊர் போக கையில கொஞ்சம் காசு குறையுது. அதான் உன்கிட்டே வாங்கிட்டுப் போவலாம்னு வந்தேன்.''

என்னால் நம்ப முடியவில்லை. திருச்செந்தூரிலுள்ள என் முகவரி அவருக்குத் தெரியவே தெரியாது. என் முகவரியை ஊரில் எப்படியோ வாங்கி, திட்டமிட்டே என்னைப் பார்க்க வந்திருக்கிறார். ஹக்கீமுக்குச் சொன்ன சொல்லைக் காப்பாற்றவும் தெரியாது.

''என்கிட்டே காசு கிடையாது. காலேஜுக்கு ஃபீஸ் கட்டணும். வீட்டுல பணம் வாங்கி வரத்தான் ஜலீல் ஊருக்குப் போயிருக்கான்.''

''பக்கத்து ரூம்காரங்ககிட்டயாவது வாங்கிக் கொடு. நீ ஊருக்கு வந்தவுடன் தந்துருவேன். காலைல முதல் பஸ்ஸு நம்ம ஊருக்கு எத்தனை மணிக்கு? அதுவரைக்கும் படுத்துக்கறேன்.''

''முத பஸ்ஸு அஞ்சரை மணிக்கு. ஒன்பது மணிக்குள்ள ஊரு போயிச் சேர்ந்துரலாம்.''

அவர் உரிமையுடன் பாயை எடுத்து விரித்தார். கூடவே சிகரெட்டைப் பற்ற வைத்தார். உடனே நான் பதறினேன். ''இங்க சிகரெட்டெல்லாம் பிடிக்காதீங்க.''

''என்ன, நீ இவ்வளவு மோசமான ஆளா இருக்கே? உன் பேச்சே சரியில்ல. உன் முகத்துல ஒரு சிரிப்பு கூட வரல.''

''உங்க ரூம் மாதிரி நினைச்சு வந்தவுடனேயே சிகரெட்டைப் பற்றவைச்சுட்டீங்க. இதெல்லாம் எனக்குப் பிடிக்காது. ஜலீல் கூட இந்த ரூம்ல வைச்சு இன்னும் சிகரெட் பிடிச்சது கிடையாது.''


ஹக்கீம் என்னை வெறுப்பாகப் பார்த்தார். உடனே எழுந்து போய் வெளியே நின்று சிகரெட் புகைத்தார். புகை என் அறைப் பக்கம் வராது. ஆனாலும் அறை முழுக்கவும் புகை நிறைந்துவிட்டது போல இருந்தது. க்க்க்கும்... க்க்கும் என்று மூக்கால் 'புகையை' வெளியே தள்ளினேன். ஹக்கீம் நீண்ட நேரம் ஏதோ யோசனையாக வராந்தாவிலேயே நின்றிருந்தார். அவர் உள்ளே

வந்தார்; நெடியும் கூடவே வந்தது.

''நீ இப்போ பஸ் செலவுக்கு ரூபா தந்துட்டா, காலைல உன்னைத் தொந்தரவு பண்ணாமலேயே எழுந்து போயிருவேன்.''

''என் கையில ஒரு தம்பிடியும் கிடையாது. பக்கத்து ரூம்காரங்ககிட்ட கேட்டு வாங்கவும் முடியாது.''

ஹக்கீம் முகம் ஒரு மாதிரியாக ஆயிற்று. கையிலே ஊர் போகும் அளவுக்குப் பணம் இல்லையென்றுதான் தோன்றியது. ஆனால் அதற்கு நான் என்ன செய்ய? சம்பந்தமே இல்லாத எனக்கு, இவர் ஏன் இவ்வளவு நெருக்கடியைத் தரவேண்டும்? நான் படித்துக் கொண்டிருந்தேன். வெளிச்சத்தைப் பாராமல் படுத்துவிட்டார்.





ரீடர்ஸ் கார்னர்

ரூஸ்வெல்ட், அமெரிக்க ஜனாதிபதியாக இருந்தபோது, அவரின் கடிதப் போக்குவரத்தினைக் கவனித்துக் கொள்ள, சுருக்கெழுத்து பயின்ற ஓர் அந்தரங்கக் காரியதரிசி இருந்தார். ரூஸ்வெல்ட் சொல்லும் விஷயங்களைக் குறிப்பெடுத்தபின், அதனை 'டைப்' செய்து கையொப்பத்துக்குக் கொண்டு வருவது வழக்கம்.

ரூஸ்வெல்ட் கையொப்பமிடுவதற்கு முன் அதில் ஏதாவது ஒரு திருத்தம் செய்து பின்னரே கையொப்பமிடுவார். தன் கடிதம் ஒன்றேனும் திருத்தமின்றி, அஞ்சலில் சேர்க்கப்படுவதில்லையே என்ற ஆதங்கம் காரியதரிசிக்கு. வழக்கம் போல் ரூஸ்வெல்ட் திருத்தி கையொப்பமிட்ட ஒரு கடிதத்தை மறுபடியும் 'டைப்' செய்து வைத்தார் காரியதரிசி.

அப்போது ரூஸ்வெல்ட் காரியதரிசியிடம், ''இனி இப்படிச் செய்யாதீர்கள். என் கடிதங்களில் ஏதேனும் அடித்தல், திருத்தல் இருந்தால்தான் நான் அவற்றை மிகவும் கவனித்திருப்பதாக ஜனங்கள் எண்ணுவார்கள்'' என்றாராம்.

- என். ஜரினா பானு, திருப்பட்டினம்

காலையில் நான் எழுந்த பின்னும் அவர் எழுந்திருக்கவில்லை. பணம் கேட்டு நச்சரித்தால் என்ன பண்ணுவது என்ற பயம் வந்துவிட்டது எனக்கு. எனது மச்சி மகனாய் இருந்தாலும் என்னைவிட வயதில் மூத்தவர் என்பதால், ''காக்கா, எழுந்திரிங்க'' என்று தட்டியெழுப்பினேன். சாவகாசமாக முழித்துப் பார்த்துவிட்டு மெதுவாக எழுந்து உட்கார்ந்தார். நான் பாத்ரூமுக்குள் நுழைந்தேன். நான் குளித்து முடித்துவிட்டு வருவதற்குள் அவர் ஊர் புறப்படத் தயாராக இருப்பார் என்று நினைத்தேன். ஆனால் அப்படியில்லை. படுக்கையிலேயே அந்த ஆள் உட்கார்ந்திருந்தார். தன் கையிலிருந்த பையை அப்படியும் இப்படியுமாகப் புரட்டிக் கொண்டிருந்தார். ஏதோ ஒரு பதற்றம் இருந்தது.

''சுபைர்!'' என்று என்னை அழைத்தவர், ''இந்தப் பைக்குள்ள ஒரு செயின் வெச்சிருந்தேன். அதை இப்பக் காணலியே?'' என்றார்.

''வந்ததிலேர்ந்து உங்களோட தொந்தரவாப் போச்சே! என்ன செயினு அது?''

''தங்கச் சங்கிலிப்பா!''

''தங்கச் சங்கிலியா?'' என்னுள்ளேயே படபடப்பு தாவிவிட்டது.

''யாரோட செயின் அது? எங்கேயிருந்து கொண்டு வந்தீங்க?''

''ஊர்ல இருந்து கொண்டு வந்தேன்.''

''குலசேகரப்பட்டணம் போனேன்னு சொன்னீங்க. அங்கேயே யார்கிட்டேயும் கொடுத்துட்டு வந்துட்டீங்களா?''

ஹக்கீம் ஒருவகையான ஆசாமிதான். பொய்யின் சிநேகிதன். அதனால் என் படபடப்பை நான் விட்டுவிட முயற்சி செய்தேன். ஏனோ முடியவில்லை. என்னைக் கேவலப்படுத்தவே அவர் முயற்சி செய்கிறாரோ என்று எனக்குள் சந்தேகம் வந்துவிட்டது.

''குலசேகரப்பட்டணத்துல ஜமால் பாய்ட்ட வித்துடலாம்னு சொல்லித்தான்

என் பொண்டாட்டிகிட்டே வாங்கி வந்தேன். ஆனா அவரு திருச்சிக்குப் போயிட்டாரு. வித்திருந்தா கையில காசு கிடைச்சிருக்கும். நான் ஊரைப் பார்த்துப் போயிருப்பேன். உன்னைப் பார்க்கவே வந்திருக்க மாட்டேன்.''

''ராத்திரி வந்தவுடனே அதை என்கிட்டேயே தந்திருக்கலாம். நான் பத்திரமா வைச்சிருக்க மாட்டேனா?''

''நீ நம்ம சொந்தக்காரன். இதைக்கூட நம்பலேன்னா எப்படி?''

''இப்போ காணாமப் போச்சதே. இந்த டென்ஷன் எனக்குத் தேவையா?''

கொஞ்ச நேரம் ஹக்கீம் யோசிக்கிற மாதிரி இருந்தது. திடீரென்று என்னிடம் கேட்டார், ''ஒருவேளை நான் ராத்திரி தூங்குன பிறகு உன்னையறியாமலே ஏதாவது தப்புப் பண்ணியிருக்கலாம். அப்படி எடுத்திருந்தா என்கிட்டே தந்திடு. நான் யார்கிட்டேயும் சொல்ல மாட்டேன்.''

''படவா ராஸ்கல். ஒரே மிதிதான். உன் கழுத்தை நெறிச்சு அப்படியே கீழே தள்ளி விட்டுருவேன்.'' - ஹக்கீம் என்னை வெறித்துப் பார்க்கிறார்.

''முதல்ல நீ எழுந்திரிடா. உடனே என் ரூமை விட்டு ஓடிப்போயிரு!''

''ரூமை விட்டு ஓடிப் போவணுமா? அப்ப என் தங்கச் சங்கிலி?''



''உன்னை ராத்திரியே என் ரூமுக்குள்ள விடாம விரட்டியடிச்சிருக்கணும். பாவம் பார்த்து உனக்குப் படுக்க இடம் கொடுத்ததுக்கு எனக்கு வேணும்.''

''படுக்க இடம் கொடுத்ததுக்கு ஒரு பவுன் செயினா ரேட்டு?''

நான் ஆவேசமாகச் சப்தமெழுப்பினேன். அவரை அடிக்கப் போனேன். அடுத்தடுத்த அறைகளிலிருந்து பத்மநாபனும் ராபர்ட் சாரும் ஓடிவந்தார்கள். ஹக்கீமும் என்னோடு மல்லுக்கட்ட எழுந்த நேரம். இரண்டு பேரும் அவரைப் பிடித்துக் கொண்டார்கள். ராபர்ட் என்ன விஷயம் என்று என்னைக் கேட்டார். என்னுடைய பதற்றத்தில் என்னால் எதுவும் பேச முடியவில்லை. அவர்களிடம் ஹக்கீம் விஷயத்தைச் சொன்னான். பேசி முடித்ததும் ராபர்ட்டும் பத்மநாபனும் அவனை வெளியே பிடித்துத் தள்ளினார்கள். ''இப்படியே வந்த வழியைப் பார்க்காமல் ஓடுடா!'' என்று ஹக்கீமின் முதுகில் ஓங்கி ஒரு குத்து குத்தினார் ராபர்ட். அவர் வைத்திருந்த ஹேண்ட்பேக்கை மாடிப்படியில் தூக்கி வீசினார் பத்மநாபன். இருவருமாகச் சேர்ந்து மாடிப்படியின் வழியே அவரைத்

ரீடர்ஸ் கார்னர்

கலைவாணர் என்.எஸ்.கே.வும், டி.ஏ. மதுரமும் நிகழ்ச்சி ஒன்றுக்காகச் சென்னையிலிருந்து ரயிலில் பயணம் செய்தார்கள். மனைவியிடம், ''மதுரம், ட்ரெய்ன் சவுண்ட் கவனிச்சியா?''என்கிறார் என்.எஸ்.கே.

''கவனிச்சேனே...''

''மறந்து வைச்சுட்டு வந்துட்டோமே, அதை ஞாபகப்படுத்துது இல்லையா..?''


''ஆமாங்க...''

''செக்கு...புக்கு... செக்கு... புக்கு...'' கூறியவுடன் இருவரும் விழுந்து விழுந்து சிரித்தனராம்.



தன் செல்ல நாய்க்கு, 'பெர்னார்ட்ஷா' என்று பெயரிட விரும்பிய பெண் ஒருத்தி, மரியாதை நிமித்தம் பெர்னார்ட்ஷாவுக்குக் கடிதம் எழுதி அனுமதி கோரினார். பெர்னார்ட்ஷா அளித்த பதிலில், ''தங்கள் நாய்க்கு என் பெயரை வைப்பதில் எனக்கு மகிழ்ச்சிதான். ஆனால், இதற்கு ஏதேனும் மறுப்பு இருக்கிறதா என்று தங்கள் நாயிடம் கேட்டுச் செய்யுங்கள்'' என்று கூறினாராம்!

- என்.ஜரினாபானு, திருப்பட்டினம்



தள்ளிக்கொண்டு போனார்கள். மாடிப்படிக்கான நுழைவாசல் எதிரே டீக்கடை இருந்தது. டீக்கடை சுப்பிரமணி, ''என்ன?'' என்று பதறியபடி ஓடிவந்தார். ''எல்லாம் நல்ல காரியம்தான். மூணு டீ போடு'' என்றார் ராபர்ட்.


நானும் அவர்கள் பின்னாலேயே வந்தேன். ஏதோ புரிந்தவராக சுப்பிரமணியும் அடிக்கப் பாய்ந்தார். பத்மநாபன் அவரையும் தடுத்து, ''இந்தப் பக்கமே திரும்பிப் பார்க்காம ஓடுடா!'' என்று பிடித்துத் தள்ளினார். ஹக்கீமைப் பலரும் சூழ்ந்து நின்றார்கள். அவர் தலைகுனிந்தபடியே சட்டையை மாட்டிக்கொண்டு, பத்மநாபன் சொன்னபடி திரும்பிப் பார்க்காமலேயே நடந்தார்.

அன்று இரவு ஊரிலிருந்து ஜலீல் வந்து சேர்ந்தான். எனக்கும் சேர்த்து வீட்டிலிருந்து பணம் வாங்கி வந்திருந்தான். அவற்றை எண்ணிப் பார்த்து என் கையில் தரும்போது ஜலீல் சொன்னான், ''கபீர், நான் பஸ் ஸ்டாண்ட்ல வரும்போது ஒரு அத்துவானக் காட்டுப் பக்கமா நம்ம ஊரு ஹக்கீம் போறதைப் பார்த்தேன். நடந்து போவதற்கு என்ன அவசியம்னு புரியல்லே. பஸ்ஸுக்குல போறதுக்குக் கையில காசே இல்லாமலா இருக்கப் போறாரு மனுஷன்?''

''நம்ம ஊர் ஹக்கீமா? நல்லா பார்த்தியா?''

''நல்லா பார்த்தேன். அவரே தான். பஸ் ஸ்டாண்ட் பக்கத்துல வரவும் நான் கையைக் காட்டினேன். என்னைத் திரும்பிப் பார்த்தாரு. ஆனால் சிரிக்கவேயில்லை மனுஷன்.''

இது எனக்கு அதிர்ச்சியைத் தந்தது. ஊர் செல்ல தன்னிடம் பணம் இல்லை என்று சொன்னது உண்மைதான். அப்படி ஓர் உண்மையை ஹக்கீம் பேசியது அவருடைய வாழ்க்கையிலேயே ஒரு திருப்பு முனையாகத்தான் இருக்கவேண்டும். அப்படியானால் அந்தத் தங்கச் சங்கிலி? ●


தலைவருக்கு ஏன் வாழைப்பூ மாலையைப் போடுறாங்க?
அவருக்குதான் கிட்னில கல் இருக்குன்னு, எதிர்க்கட்சிக்காரங்க அறிக்கை விட்டிருக்காங்களே!

-அம்பை தேவா

மகளான மகேசுவரி

அடுத்து வரக்கூடிய ஆறு திருநாமங்கள் ரொம்ப அழகானவை. அவை ஒரு தொகுப்பாக அமைந்துள்ளன.

சிரஸ்திதா, சந்திரநிபா- சந்திரனாக இருக்கக்கூடியவள். எங்கே? சிரஸில் ஸ்திதம் பெற்றவள். நாம் ஏற்கெனவே பார்த்த விஷயம் தொடர்பானதுதான் இந்தத் திருநாமம்.

ஸஹஸ்ரார பத்மத்துக்கு மேலே அம்பாள் பூர்ணிமை நிலவாக இருந்து கொண்டு அமுத தாரையைப் பொழிகிறாள் என்பதைப் பார்த்தோம்.

ஸஹஸ்ரார பத்மம் எங்கே இருக்கிறது? சிரஸிலே - தலையிலே அது இருக்கிறது என்று பெயர். நாம் உச்சந்தலை என்று சொல்வோமே, அதிலிருந்து கொஞ்சம் கீழே இருக்கக்கூடியது சஹஸ்ரார பத்மம். அந்த உச்சிக்கும் சஹஸ்ரார பத்மத்துக்கும் நடுவிலே அம்பாள் முழு நிலவாகப் பிரகாசிக்கிறாள். **சிரஸ்திதா, சந்திரநிபா** என்கிற திருநாமங்கள் இதைத்தான் குறிக்கின்றன.

அதற்கு அடுத்த திருநாமங்கள் என்னவென்றால் **பாலஸ்தா, இந்த்ரதனுஷ் பிரபா** இதைக் கொஞ்சம் பிரித்துப் பார்க்க வேண்டும். பாலஸ்தா + இந்திர + தனுஷ் பிரபா என்று பிரிக்க வேண்டும். இந்திர தனுஸ் மாதிரி (வில்) இருக்கக்கூடியவள்; பிரகாசத்தோடு கூடியவள் அம்பிகை. வானவில்லைத்தான் சாதாரணமாக இந்திர தனுஸ் என்று சொல்வதுண்டு. பாலம் (*பாலம்) என்றால் நெற்றி. *பாலம் என்கிற நெற்றிப் பிரதேசத்தில் இருக்கிறபோது, இந்திர தனுஸைப் போல் இருக்கிறாள்.

'ப்ரூ மத்யே' என்று வர்ணிக்கப்படுகிற, புருவங்களுக்கு மத்தியிலே இருக்கிற ஆக்ஞா சக்கர ஸ்தானத்திலே இருந்து பார்க்கிறபோது, அம்பாள் சஹஸ்ராரத்தில் நிலவாகப் பொழிந்துகொண்டிருக்கிறாள். அது இங்கே, ஆக்ஞாவில் எப்படித் தெரியும் என்றால், வளைவு மாதிரி தெரியும். இந்திர தனுஸைப் போல வளைந்த அமைப்பாகத் தெரியும். எனவே **பாலஸ்தா, இந்த்ரதனுஷ் பிரபா.**

சூரியனும் சந்திரனும்

அடுத்து வருவது **ஹ்ருதயஸ்தா, ரவிப் பிரக்யா** என்கிற திருநாமங்கள். ஹ்ருதய ஸ்தானத்தில் இருக்கிறபோது, அம்பாள் சூரியனாகப் பிரகாசிக்கிறாள்.

இப்போது மூன்றும் வந்துவிட்டன - சூரியனாக இருக்கிறாள்; சந்திரனாக இருக்கிறாள், இந்திர தனுவாகவும் இருக்கிறாள்.

இதை ஒருவிதமாகப் பார்த்தோமானால், அம்பாள்தான் சூரியன், அம்பாள்தான் சந்திரன், அம்பாள்தான் இந்திர தனுஸு, அம்பாள்தான் மழை! அண்ட பகிரண்டங்களிலே உள்ள எல்லாமே அம்பாள்தான் என்று சொல்லலாம்.

இதையே இன்னொரு விதமாகப் பார்க்கும்போது, ஹ்ருதய ஸ்தானத்தில் இருக்கிற இருட்டைப் போக்குகிற சூரியன் அம்பாள்; அந்த ஹ்ருதய ஸ்தானத்திலிருந்து சஹஸ்ரார பத்மம் வரைக்கும் போயாயிற்று என்றால் அங்கே முழுக்க முழுக்க குளிர்ச்சியைத் தரக்கூடியவள். இரண்டுக்கும் இடைப்பட்ட ஸ்தானமான ஆக்ஞா ஸ்தானத்தில்

குறிப்பு: *வடமொழியில் இரண்டாவது 'பா'


சுதா சேஷய்யன்
22

இடைப்பட்ட தோற்றத்தில் இருக்கிறாள்! - இப்படி நினைத்துப் பார்ப்போமே - மத்தியானம் நல்ல கொளுத்துகிற வெயில். அந்த நேரத்தில் வேண்டாத இருட்டைப் போக்குவதற்கு நெருப்பாக தகிக்கக்கூடியவள்.

இந்திர தனுஸு

இந்த நெருப்பு தீமையையெல்லாம் போக்கிவிட்டபிறகு 'நெகடிவ்' ஸ்டேஜ் கடந்துவிடுகிறது. இதற்குப் பிறகு ஆக்க பூர்வமான பாஸிடிவ் ஸ்டேஜ் தோன்றுவதற்கு முன், நியூட்ரல் ஸ்டேஜ் ஒன்று வருகிறது. இருட்டில் இருக்கிறபோதே 'பாஸிடிவ்' ஸ்டேஜ் வருவதில் பயனிராது. கப்பலில் கீழே ஓட்டை இருந்தால் என்ன பிரயோஜனம்? பாத்திரத்தில் ஓட்டை இருக்கிறபோது அதிலே பாலைப் பொழிவதால் பயன் உண்டா? முதலில் ஓட்டையை அடைக்க வேண்டும். அந்த மாதிரி, நம்மிடம் இருக்கிற ஓட்டைகள், தீமைகள், அஞ்ஞானம் என்கிற ஓட்டைகளையெல்லாம் போக்குவதற்கு அம்பிகை முதலில் சூரியனாகப் பிரகாசிக்கிறாள். எல்லா தீமையும் போன பிறகு அங்கு ஒன்றும் இருப்பதில்லை. பூஜ்யம்! எதுவுமற்று இருக்கிறோமேயொழிய ஆக்கம் இன்னும் நம்முள் நிறையவில்லை; base levelஇல் இருக்கிறோம்; இன்னும் பிளஸ் லெவலுக்கு வரவில்லை. இந்த ஸ்தானத்தில் வெயிலும் இல்லை; குளிர்ச்சியான நிலவும் இல்லை. ஆனால், இலேசாக வானத்தில் மேகம் அங்கங்கே கவிந்து, இரண்டொரு துளி மழையும் விழுகிற கட்டம். ஒரு பக்கம் சூரியனும் இருக்கிறது; இன்னொரு பக்கம் மழை மேகமும் இருக்கிறது. இவை இரண்டும் சேர்கிறபோதுதான் வானவில் தோன்றும். அந்த ஸ்திதியிலேதான், ஆக்ஞா சக்கர ஸ்தானத்தில் இந்திர தனுஸாக - வானவில்லின் ஒளி வளைவாக - அம்பாள் தோற்றம் தருகிறாள். அஞ்ஞானம் தீர்ந்தாலும் இன்னும் ஞானத்தை எட்டாத இடைப்பட்ட நிலை.

ஆக, சிரஸ்தானத்தில் சந்திரன்
நெற்றியிலே இந்திர தனுஸு
ஹ்ருதய ஸ்தானத்தில் சூரியன்
என்று இருக்கக்கூடியவள். உள்ளே இருக்கக்கூடிய அஞ்ஞானத்தைப் போக்கக்கூடியவள் ஸ்ரீ லலிதாம்பிகை.

நல்ல மனத்துக்கு இரங்குபவள்

இவள்தான் **தாக்ஷாயணீ**. தக்ஷபிரஜாபதியின் மகளாகத் தோன்றியவள்.

அடுத்த நாமம் **தைத்யஹந்த்ரி!** ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமத்துடைய அழகே இதுதான்! ஒரு திருநாமத்தைச் சொல்லி, அதற்கு நேர்மாறாக இருக்கக்கூடிய இன்னொரு திருநாமத்தை, அடுத்தாற்போலவே சேர்த்துச் சொல்வது! அம்பாள்தான் இரு துருவ குணங்களாகவும் இருக்கிறாள் என்று புரிய வைப்பதற்காகத்தான் இவ்வாறு அமைந்திருக்கிறது:

தாக்ஷாயணீ - தக்ஷனின் மகள்.


தைத்யஹந்த்ரி- தைத்யர்களாகிய அரக்கர்களையெல்லாம் அழிக்கக்கூடியவள்.

இதற்கடுத்த திருநாமம் **தக்ஷயக்ஞ விநாசினி!** தக்ஷயக்ஞத்தை நாசம் செய்தவளும் அவள்தான்!

தக்ஷன் கர்வத்தோடு இருந்தபோது, அந்த கர்வத்தினால் ஏற்பட்ட யக்ஞத்தை நாசம் செய்தாள். அதே சமயத்தில் தக்ஷன் மகளாகவும் தோன்றினாள்!

இந்த மூன்று திருநாமங்களையும் சேர்த்துச் சொல்கிறபோது, என்ன பொருள் உரைக்கப்படுகிறது?

நல்ல மனத்தோடு ஒன்றைக் கேட்கும்போது, அதைப் பூர்த்தி செய்வதற்காக எந்த வடிவத்தையும் எடுக்கக்கூடியவள் அம்பாள்.



தக்ஷ பிரஜாபதி, அம்பிகை தனக்கு மகளாகப் பிறக்க வேண்டும் என்று கேட்ட போது, அந்த மனம் நல்ல மனமாக இருந்தது. நல்ல மனத்துடன் கேட்டபோது, தாக்ஷாயணியாக வந்தாள். அண்ட பகிரண்டங்களுக்கெல்லாம் நாயகியானவள், நிகிலேசுவரியாக இருக்கக்கூடியவள், அனுத்தமாவாக இருக்கக்கூடிவள், எல்லாவற்றைக் காட்டிலும் உயர்ந்ததாக இருக்கக்கூடியவள், தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு, ஒரு சிறிய வடிவத்துக்குள் அடக்கிக்கொண்டு, தக்ஷனுக்கு மகளாக வருகிறாள்.

அப்படி வருகிறவள், அரக்கர்கள் தப்பு பண்ணுகிறபோது தைத்ய ஹந்த்ரியாக இருக்கிறாள் என்றால், மனத்தின் போக்கு அரக்கத்தனமாக இருக்கிறபோது, அதை அழிக்கக்கூடியவளாகிறாள்.

அரக்க மனம் ரொம்ப எல்லை மீறிப் போய், எல்லோரையும் கூட்டுச் சேர்த்து வைத்துக் கொண்டு தப்பு பண்ணினால், அந்த 'யக்ஞத்தை'யே கலைக்கக்கூடியவளாகிறாள்.

அழகாய் அசையும் கண்கள்

அம்பிகையின் தீர்க்கமான பார்வையைச் சொல்கிறது அடுத்த திருநாமம். என்ன மாதிரி தீர்க்கமான பார்வை? **தர ஆந்தோளத தீர்காக்ஷி.** சற்றே சலனப்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய, அசைந்து கொண்டிருக்கக் கூடிய பார்வை. **சலன்மீனாபலோசனா** என்ற திருநாமத்தையே கொஞ்சம் விவரிக்கிற மாதிரியான திருநாமம் இது.

'அம்பாளுடைய பார்வை எங்கேயெல்லாம் போகும்?' என்று கேட்டால், அதே கேள்வியை நாம் வேறு விதமாகத் திருப்பிக் கேட்க வேண்டியதுதான் - 'அம்பாளுடைய பார்வை எங்குதான் போகாது?' என்பதாக!

(வளரும்)

கிரேஸியைக் கேளுங்கள்

● **ஆர்.கோபாலன், மேற்கு மாம்பலம்.**

'ஆச்சியை', 'லேடி சிவாஜி' என்று சொல்வார்கள். 'லேடி கமல்' என்று நீங்கள் யாரைச் சொல்வீர்கள்?

'சேச்சி' ஊர்வசி, மலையாள மனோரமா!

● **ஜே. துரைராஜ், ஆலப்பாக்கம்.**

நாகேஷ் மறைவு குறித்து...?

ஐம்பது வருடங்களாக தமிழனின் 'நகைச்சுவை உணர்வுக்கு' தாயினும் சாலப் பரிந்தூட்டிய 'நகைச்சுவை உணவு' தாய்-நாகேஷ். நெஞ்சிருக்கும் வரை நாகேஷ் நினைவிருக்கும்!

● **சூர்யா, சென்னை**

தங்களின் குலதெய்வம், இஷ்ட தெய்வம் யார் யார்?

குலதெய்வம் - அமரர் கல்கி; இஷ்ட தெய்வம் - அமரர் தேவன்!



● **கருப்பம்புலம் சித்திரவேலு, நெய்விளக்கு.**

நீங்க எதுல LKG?

'கறுகறுப்புல' Lazy என்றும் எடுத்துக்கலாம். LKG பசங்க மாதிரி சுறுசுறுப்புல Crazy என்றும் கொள்ளலாம்.

● **சீனுவாசன், சென்னை**

கடச்கட காதலியின் முத்தம், கடச்கட காஃபி எது ரொம்ப டேஸ்ட்?

பேஷ் பேஷ் கேள்வி ரொம்ப நன்னாருக்கு. முத்தத்துக்கு முன் காஃபி வேஸ்ட். முத்தத்துக்குப் பின் காஃபி டேஸ்ட்! மொத்தத்துல ரெண்டும் பித்தம்!

● **சுதர்ஷனி, மாயவரம்.**

இந்தக் காலத்து ஜனங்களைவிட அந்தக் காலத்து ஜனங்க ஆரோக்கியமா இருந்த ரகசியம் என்ன?

ஆரோக்கியத்துலேயே யோக்யமும் இருக்கு. கேள்விக்கான பதிலும் இருக்கு. அதைத் தவிர 'ஜன்னல் கதவையெல்லாம் நல்லா திறந்து வையுங்கப்பா. நல்ல காத்தும், சூரிய வெளிச்சமும் வரட்டும்' இது அந்தக் காலம். 'கதவை எல்லாம்



இழுத்து மூடுங்கப்பா. ஏ.ஸி. காத்து வெளில போகுது பாரு' இது இந்தக் காலம்.

● **வி.ஜி. சத்தியநாராயணன், நங்கநல்லூர்**

மோனாலிஸாதான் உலகிலேயே அழகான பெண்ணா?

மோனாலிஸாவா... 'எவ அவ...?' வரைந்து கொண்டிருக்கிறேன் 'மோஹனோலிஸா'!

● **என்.காளிதாஸ், சிதம்பரம்.**

வயதானால் தாங்கள் எப்படி இருப்பீர்கள்?

'நரை குடம்' தளும்பாமல் இருக்க தற்சமயம் தலைக்கு 'டை' அடித்து 'Crazy' மோகனாக இருக்கிறேன். 'டை' அடிக்கா விட்டால், 'Grey'ஸி மோகனாக இருப்பேன்!

● **கே.எஸ்.கோவர்த்தனன், வேளச்சேரி**

மேக்கப் ரூமை ஏன் 'Green Room' என்று அழைக்கிறோம்?

பச்சையா சொல்லப் போனா, மேக்கப் போட்டுக் கொண்டிருக்கும் வரை நமக்கு Ever Green அந்தஸ்தை அளிப்பது அந்த அறைதான்!

முத்தத்துக்கு முன் பின் காப்பி?

● **ஆர்.கே.லிங்கேசன், மேலகிருஷ்ணபுதூர்**

சிறந்த உல்டா மன்னன் யார்?

Satyam உல்டா பண்ணா Maytas. Rajuக்கு உல்டா Ujar அதாவது உஷார் ஜாக்கிரதை!

● **தீபிகா, மைசூர்**

சுற்றுப்புறச்சூழல் கெட்டுப் போனதற்கு யார் பொறுப்பு?

நிஜத்தை வெட்டி
நிழலைக் கொன்று
வெய்யிலில் குளிர் காய்கிறான்
மரமண்டை மனிதன்

● **மஞ்சுதேவன், அயிரோலி**

ஆசைக்கு மட்டும் ஏன் முற்றுப்புள்ளி இருப்பதில்லை?

முற்றும் துறந்தாத்தான் ஆசைக்கு முற்றுப்புள்ளி போட்டு Calm ஆக இருக்க முடியும். அதுவரையில் Comma போடும் காமா (ஆசை) நம்மை வெறும் புள்ளியாகத்தான் வச்சிருக்கும்.

● **எடக்காடு பீ.சேகர், ஊட்டி**

செல் ஃபோனால் நமக்குத் தொண்டா? இல்லை தொல்லையா?

தொண்டைக்குத் தொல்லை!

● **மாலினி, ஈரோடு**

கிரேஸி நீங்க Keep leftடா இல்ல Keep rightடா?


ரெண்டும் இல்ல. Keep Quiet.

● **கீதா ராகவன், போபால்**

தொடர்ந்து ஜெயிக்கும் தோனி?

தனக்குத்தானே விளையாடினாலும் கூட, இரண்டு 'தோனியும்' ஜெயிப்பார்கள். அப்படி ஒரு கிளவுஸ் ரேகை தோனிக்கு. நாம் தோற்ற எல்லா டீமுக்கும், பதிலுக்குத் தோல்வியைக் கொடுக்கும் தோனி 'தானிக்கு தோனி சரி போயிந்தி' டைப் கேப்டன்! ❑

சின்னச் சின்ன சந்தேகங்கள்:



இதயத்தை

''புதுசா வாங்கிய ஸ்கூட்டர், மோட்டார் பைக் என்றாலும்கூட அது பழுதாகாமல் இருக்க நான்கு மாதங்களுக்கு ஒரு முறையேனும் சர்வீஸுக்கு விடுகிறோம். பெட்ரோலில் ஓடக்கூடிய கார்களுக்கு டீசல் போட மாட்டோம். டீசலில் ஓடக்கூடிய கார்களுக்கு பெட்ரோல் போட மாட்டோம். ஆனால், உடல் உறுப்புக்கள் என்று வரும்போது அவற்றைச் சரியாக சர்வீஸ் செய்து பராமரிக்க வேண்டும் என்பதையோ, ஒத்துக்கொள்ளாத சமாசாரங்களை உட்கொள்ளக்கூடாது என்பதையோ மறந்து விடுகிறோம். அதனால்தான் ஏகப்பட்ட கோளாறுகள் நமக்கு ஏற்படுகின்றன'' என்கிறார் ஆக்ஸிமேட் ஹாஸ்பிடல்(பி)லிட் டாக்டர் பி.அயாஸ் அக்பர்.

இதயத்தில் கோளாறு எந்த வயதில் வரும்?

''முன்பெல்லாம் சராசரியாக நாற்பத்தைந்து, ஐம்பது வயதுக்கு மேல் மாரடைப்பு ஏற்படும். ஆனால், இன்றைய காலகட்டத்தில் அதிர்ச்சியான உண்மை என்னவென்றால் 25, 30 வயதினர்களுக்குக் கூட அதிக அளவில் இதயத்தில் பாதிப்பு ஏற்பட்டு, மாரடைப்பு வந்து விடுகிறது.''

மாரடைப்பு ஏற்படுவதற்கான காரணங்கள்?

''அதிக அளவு மன அழுத்தம், கொழுப்புச் சத்து நிறைந்த உணவு வகைகளை உட்கொள்ளுதல், புகைப் பிடித்தல், மது அருந்துதல் மற்றும் சர்க்கரை நோயால் பாதிக்கப்பட்டிருத்தல், மரபு ரீதியாக இதயக் கோளாறு ஏற்படுதல் ஆகியவற்றைச் சொல்ல முடியும்.''

இதயத்தை ஆரோக்கியமாக வைத்துக் கொள்வது எப்படி?

"Stress management என ஆங்கிலத்தில் ஒரு வார்த்தை சொல்லுவோம். அதாவது மென்மையான நம் மனத்துக்குள் ஏகப்பட்ட கவலைகளையும், டென்ஷன்களையும் ஏற்றிக்கொள்ளாமல் இருப்பது. இது information era... சதா சர்வ காலமும் செல்ஃபோனும் கையுமாகவே இருக்க வேண்டிய ஒரு கட்டாயத்துக்குப் பலர் தள்ளப்பட்டுள்ளனர். நிற்கவோ, நிம்மதி

யாக படுத்து உறங்கவோகூட நேரம் இல் லாமல் இருக்கும் இளைஞர்கள், கட்டாயம் தியானம், மூச்சுப் பயிற்சி, நடைப் பயிற்சி, உடற்பயிற்சி, சரியான நேரத்தில் அளவான சாப்பாடு, போதுமான உறக்கம் ஆகிய வற்றை மேற்கொள்ள வேண்டும். 'இதுக் கெல்லாம் ஏது டாக்டர் நேரம்? எனக்கு ஸ்ட்ரெஸ் அதிகமாகிடுச்சுன்னா உடனே ட்ரிங்க்ஸ் பக்கம் போயிடுவேன்' எனக் கூறுபவர்களுக்கு ஓர் எச்சரிக்கை. குடி உங்கள் பிரச்னையை அதிகமாக்குமே தவிர குறைக்காது.''

மாரடைப்பால் அதிகம் பாதிக்கப்படுவோர் யார்?

''சர்க்கரை நோய் உள்ளவர்களுக்கு அதிகளவு மாரடைப்பு வருவதற்கு வாய்ப்புகள் உள்ளன. அதைப் போலவே பெண்களுக்கும் மாத விலக்கு முடிந்த பிறகு estrogen என்கிற ஹார்மோன் வேலை

இழக்காதே!

செய்வதை நிறுத்திய பிறகு மாரடைப்பு வருவதற்கு வாய்ப்புகள் உள்ளன. BPயால் மாரடைப்பா? அல்லது இதயக் கோளாறால் BPயா? என்றால் இதனால் அது; அதனால் இது!''

மாரடைப்புக்கான அறி குறிகள் என்னென்ன?

''மாரடைப்பு என்றால் இதயம் வலிக்கும் என பலர் தப்பாக நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். கீழ்த் தாடையில் வலி, தோள்களில் வலி, முதுகுப்புறம் இடைவிடாத வலி, கால் வலி, நெஞ்சின் வலது புறம் வலி... இவை தவிர சிலருக்குச் சிறிதும் வலியே இல்லாத பட்சத்தில் கூட மாரடைப்பு ஏற்படும். அசாதாரணமாகத் தொடர்ந்து வலி வந்தால் உடனே மருத்துவரிடம் சென்று பார்ப்பதை விட்டுவிட்டு, தானாகவே ஆஸ்பிரின் போன்ற மாத்திரைகளை உட்கொள்வதை நிறுத்த வேண்டும். நான் எண்ணெய் பதார்த்தங்களே சாப்பிடுவதில்லையே, பிறகு எனக்கு எப்படி கோளாறு வரும் எனக் கேட்பவர்கள் பலர் உண்டு. கணக்கில் மட்டும் நூறு சதவிகிதம் எடுத்துவிட்டு மற்ற பாடங்களில் 20 மதிப்பெண்கள் எடுத்தால் எப்படி பாஸ் ஆக முடியாதோ, அப்படித்தான் வெறும் எண்ணெய்ப் பதார்த்தத்தை மட்டும் விட்டுவிட்டேன்; எனக்கு மாரடைப்பே இல்லை எனக் கூற முடியாது.''


எனக்கு ஸ்ட்ரெஸ் அதிகமாகிடுச்சுன்னா உடனே ட்ரிங்க்ஸ் பக்கம் போயிடுவேன், எனக் கூறுபவர்களுக்கு ஓர் எச்சரிக்கை. குடி உங்கள் பிரச்னையை அதிகமாக்குமே தவிரக் குறைக்காது.



❖ டாக்டர் பி.அயாஸ் அக்பர்

- நளினி சம்பத்குமார்





ஓவியம் வண்ணங்களால் வழி நடத்தப்படும் தியானம். மனத்தை ஒருமைப்படுத்தும் அந்தக் கலையைப் பயில வயது ஒரு தடையில்லை என்பதைச் சமீபத்தில் நிரூபித்துக்காட்டியது ஸ்ரீ அன்னை காமாட்சி கலைக்கூடம்.

புதிதாக ஓவியம் பயில ஆரம்பித்திருக்கும் 8 வயதிலிருந்து 80 வயது வரையிலானவர்களின் கண்காட்சி எழும்பூர் லலித் கலா அகாடமியில் நடந்தேறியது. 450 மாணவர்களின் ஓவியங்கள் இதில் இடம்பெற்றன. அனைவரும் ஸ்ரீ அன்னை காமாட்சி கலைக்கூடத்தில் பயின்றவர்கள். ''ஓவிய ஆர்வம் பெருகவும், ஓவியக் கலையைப் பரவலாக்கவும், ஓவியத்தைத் தொழிலாகவும், தியானக் கலையின் துவக்கமாகவும் மாற்ற முயல்கிற முயற்சி'' என்கிறார் கலைக்கூட நிறுவனர் சே.வெங்கடாசலபதி. கண்காட்சி



வண்ணங்களால் ஒரு தியானம்!






முழுவதும் புதியவர்கள் தூரிகையில் செதுக்கிய யதார்த்த ஓவியங்கள் அவர்களைப் போலவே இயல்பாக இனிமையாக கண்களுக்குப் பெருமைசேர்த்தன.

- வானவன்

படங்கள் : மணிமேகலை நாகலிங்கம்



5

காற்று வரும்

நேற்று பெய்த மழை ஊரையே புரட்டிப்போட்டுவிட்டது! தெருவில் குளம் குளமாய் மழைத் தண்ணீர் தேங்கி நின்றது. அடித்த காற்றில் பலர் வீட்டுக் கூரைகளுக்குக் குறுக் கொடிந்திற்று!

''யப்பே... சன்னப் பய மழையா... சும்மா சொல்லப் படாதுப்பே! கொட்டிப் பொளந்து போட்டுப் பிடுச்சு...'' ஒரு குரல் வாய் பிளந்திற்று! ''நம்ம வெளிக் குப் போற ஓடை இருக்கே, அது என்னா பெத்திரும்! அதுலெ வெள்ளம் கெணைக்கா வருது'' என்று வியந்தான் ஒருவன்!

''தொவைக்கிற பயலுக கழுதைக முன்னங்காலைக் கட்டி ஓடையில மேய விட்டிருப்பானுங்க. போட்டுப் பாத்துப் பிட்டது!'' என்று ஒரு குரல்.


''ஏலெ இது என்னடா பெருசு! நானும் ஒங்க சித்தப்பும் விடியங்காட்டி வெள்ளன மாவே ஆத்துச் செவ போனோம். பெரிய பாலத்த முங்கிட்டுப் போவுதுடா; ஏழு எட்டுப் பொணம்! ஈரக்கொலை நடுங் கிடுச்சு'' என்று நெஞ்சில் கைவைத்தது ஒரு நடு வயசு!

''மாக்காங்கோட்டை ஆத்துலெ வாத்துக் காரனும் குருவிக்காரங்களும் ஒரே குமுராக்க மாவுலெ திரியுறாங்களாம்.''

இது மாதிரி வெள்ளப் பெருக்கெடுக் கும் சமயங்களில் இது அவர்களுக்கு 'சைடு பிசினஸ்'.

இடுப்பில் பலமான கொச்சக் கயிற்றைக் கட்டிக் கொள்வார்கள். மறுமுனையை மரத்திலோ, தாழம்புதர் அடித் தூரிலோ கட்டிக் கொள்வார்கள். ஆற்றில் குதித்து, ஓடுகிற பிணத்தை இழுத்து கரையில் ஒதுக்குவார்கள். ஒரு பொட்டுத் தங்கமாவது

பருவம்!



அகப்படும். சில சமயம் மூளியாகக் கிடக்கும். மீண்டும் ஆத்துத் தண்ணீரிலே தள்ளிவிட்டுவிடுவார்கள்.

இரண்டு மூன்று நாட்கள் கழித்து, ஆற்று ஓரமாகவே வெளியூர் ஆட்கள் தேடிக்கொண்டு நெஞ்சு துடிக்க ஓடிவருவார்கள். ஆடு மேய்க்கிற சிறிசுகள், களையெடுக்கப் போகிறவர்கள் என்று விசாரித்துக் கொண்டே நகர்வார்கள்.

மரத்துப்போன மனசுக்காரர்கள் தலையில் தண்ணி அள்ளித் தெளித்துவிட்டு, வாய்க்கால் மதகு திறக்கும் தலையாரிக்கும் தண்ணி மணியத்துக்கும் அஞ்சோ பத்தோ கொடுத்து அடையாளம் சொல்லிவிட்டுப் போவார்கள்.

''ஒண்ணு ஒத்தப்பல்லன் வயலண்ட ஒதுங்குச்சு. உங்க சித்தப்பு குச்சிய வெச்சு கிளறினாப்புலெ.''

''ஆம்புளையா, பொம்புளையா.''

''கொமரி மாதிரித்தான் தெரிஞ்சது. சேப்பு சேல.''

''அட பாதகத்தி. யாரு பெத்தவளோ?'' என்று பெண்கள் வாயைப் பொத்திக் கொண்டனர்.

பார்த்ததை, கேட்டதை தெருவில் நின்று கூட்டம் கூட்டமாய்ப் பேசிற்று!

சொல்லுகிற ஒவ்வொரு கதையும் திகிலாகவும் திகைப்பாகவும் இருந்தது.

ஐயா பேசவில்லை. கை,கால்,முகம், உடம்பெல்லாம் சேறு. போனிச் செம்பில் தண்ணியை மோந்து மோந்து ஊற்றிக் கழுவினார்.

பஞ்சு கூட நிறைய கதைகள் சொல்வாள்; பாவம் அந்தக் குடிசை; இந்த மழைக்கு அது என்ன பாடு பட்டிருக்குமோ!

''கோவிந்து, உங்கையாவ காணலெயேப்பா!''

''வருவார்ம்மா.''

''ஒரு நடை போய் பாத்துட்டு வாய்யா.''

''வந்திடுவார்மா.''

''கதை கதையாச் சொல்றாகளே!''

''சரி. தோ போறேன்.''

பாரதிபாலன்

இரும்பு மனிதர் சர்தார் படேலிடம் நகைச்சுவை உணர்வு ஒருபோதும் குறைந்ததில்லை. 1937-ல் ஒரு பத்திரிகை நிருபர் படேலிடம், "குஜராத்தில் காங்கிரஸ் மிகவும் பலவீனமாகி வருவதால், காங்கிரஸ் கோட்டை சீக்கிரமே சரிந்து விழுந்துவிடும். ஆகவே, நீங்கள் சற்று எச்சரிக்கையாக இருப்பது நல்லது" என்று கேட்டுக்கொண்டார். "எனக்கு ஒன்றும் கவலை இல்லை.

''சேவாலு எங்க போனான்?''

ஜெயபால் என்று கூப்பிட அம்மாவின் நாக்கு வளையாது; பிரியத்தோடு கூப்பிடு கின்றபோது எல்லாமே அழகாக மிளிர் கிறது!

''பாத்திட்டு வர்றீயாப்பா?''

''ம்.''

''ரோட்டுச் செம பாரு. இல்லாட்டினா வயக்காட்டுப் பக்கம் ஒரு நடை போயிட்டு வந்திடு.''

அம்மாவின் கால்கள் வாசலுக்கு நகர்ந்திற்று! செங்குளம் ஓடைப்பெருக்குக் கொண்டதாம். சின்னமனூருக்கு பஸ் போக்குவரத்து அம்புட்டுத்தானாம். ரோதைக்குக் குறுக்கே உள்ள தவசியா பிள்ளை வீடு. அப்படியே உட்கார்ந்து விட்டதாம். தவசியா பிள்ளை வீடு தாங்கவில்லை என்றால் பஞ்சு குடிசை? அவன் முகமே மாறிவிட்டது.

நெஞ்சின் அரிப்பு கூடிற்று! அவளைப் பார்க்க வேண்டும் என்று ஆவல் அதி கரித்தது. நேருக்கு நேராய்ப் போய்ப் பார்க்கவா முடிகிறது! பம்பு செட்டில் குளிக்கப் போவது மாதிரி போக வேண்டும்.

மனசை நிமிர்த்தி நேராக நடக்க வேண்டும் என்றால் இருள் விழ வேண்டும். அப்போதும் படபடப்புதான். ஆனாலும் தைரியம் கூடிவிடும்; எந்தக் கண்ணிலும் விழமாட்டோம் என்ற தைரி யம்; அந்தத் தைரியத்தைப் பிடித்துக் கொண்டே நடந்து அவளைத் தொட்டு விடுவான். வாசலில் நிழலாடிற்று!

''எங்க போனீகளாம்?''

ஐயா பேசவில்லை. கை, கால், முகம், உடம்பெல்லாம் சேறு. போனிச் செம்பில் தண்ணியை மோந்து மோந்து ஊற்றிக் கழுவினார்.

''பெரியவனை எங்க?''

''தெரியலெ. உங்க கூடத்தேன் வந்திருப் பான்னு நெனச்சுது.''

''கோவிந்து...''

''ஐயா!''

''கடை வீதிப்பக்கம் பாத்திட்டு வர்றீயா...?''

''அதான் கிளம்புனான்.''

''வாரேன்.''

''அங்கிட்டு நம்ம மண்டையன் இருந் தான்னா சத்தம் காட்டிட்டு வா...''

''ஏன் ஒரு வடியா இருக்கிக?'' என்றது அம்மா.

''ஆத்தோரம் இருந்த காணி அரைக் காணி ஆத்தோட போயிடுச்சு!''

''என்னா சொல்றீங்க?'' அம்மா இரு கையாலும் நெஞ்சைப் பிடித்துக் கொண் டது.

''வெத போட்டு வெளஞ்சி நின்னதே.''

''எல்லாம் போச்சு.''

''அடக் கொடுமையே...'' அம்மா முந்தானையை உருவி வாயில் வைத்துக் கொண்டாள்.

''இனி என்னா செய்யுறது?''

''தண்ணி வடியணும். வானம் வெறிக்கவும்தேன் பார்க்கணும். மண்ணக் கொண்டாந்து மெத்தணும்.''

''அதுக்கு ரெண்டு மூணு ஆயிரம்

எச்சரிக்கையாக இருக்கவேண்டியது நீங்கள் தான். அந்தக் கோட்டைப் பக்கம் போய் விடாதீர்கள். இடிபாடுகளில் சிக்கி, ஏதாவது காயம் உண்டாகிவிடப் போகிறது'' என்றார் சர்தார்.

- என்.ஜரினா பானு, திருப்பட்டினம்

ரீடர்ஸ் கார்னர்



ஆகும்.''

''அப்புறம் என்ன வெள்ளாம செஞ்சு என்னத்தத் திங்கிறது?''

''அம்புட்டுத்தேன்.''

''சேவாலு எங்க போனான்?'' என்று அப்பா தரையில் உட்கார்ந்தார்.

''என்னா செய்யுறது! குளிச்சுட்டுச் சாப்பிடுங்க.''

''ம்.''

''பழகதேன். விறகு எரிவனாங்குது. எல்லாம் ஈரம் பிடிச்சுப் போச்சு. நானும் ஊதி ஊதி உசுரை விட்டுட்டுத்தேன், எழுந்திருச்சேன்.''

வாசலில் 'ஆச்சி....ஆச்சி...' என்று குரல் கேட்டது. கோவிந்து வாசலுக்கு ஓடினான். மண்டையன் நின்றிருந்தான்.

''ஐயா, கடப்பாரையும், மம்பட்டியும் கொண்டாரச் சொன்னார்.''

''யாரு மண்டையனா?'' அப்பா வெளியே வந்தார்!

''ஐயா பாத்தீங்களா! போன அறுப்புக்கே சொன்னேன். எல்லாம் பொசு பொசுன்னு இருக்கு. ஒடப்பு அடைங்கன்னு.''

''குறும்பக் கவுண்டர் போன வாரம்தான் ஒடப்பு அடைச்சார். இப்ப என்ன ஆச்சு?''

''வேலை சுத்தமா இருக்க வேண்டாமய்யா?''

''இப்ப எதுக்கு மம்பட்டியும் கடப்பாரையும்?''

''ஐயா கொண்டாரச் சொன்னார்''

''சேவாலு அங்கதேன் இருந்தானா?''

''வெள்ளனமே வந்திட்டாரு. நீங்க பாத்திட்டுப் போனீக போல. பின்னாடியே வந்திட்டோம்.''

''இப்ப ஒண்ணும் பாக்க வேண்டாம். இன்னைக்கு இருட்டுக் கட்டிக்கிட்டுக் கெடக்கு. மழையெல்லாம் விடட்டும்.''

''ஐயா கேட்டாத்தானே! வாழை முண்டு, வைக்கோலு எல்லாம் கொண்டாந்து எறக்கிப் போட்டுட்டார். கையோட பாத்தாத்தேன் உண்டு. இல்லாட்டி அம்புட்டும் ஆத்துலெ எறங்கிடும்ங்கிறார்.

அம்மா இரண்டு மண் வெட்டியையும், கடப்பாரையையும் கொண்டு வந்து வைத்தாள்.

''இரு நானும் வாரேன்'' என்று எழுந்தார் ஐயா.

''நான் வேணா கிளம்புறேன்'' என்று படியிறங்கினான் கோவிந்து.

''இருப்பா, சாப்பிட்டுக் கிளம்புவீங்க.''

''..........''

''மண்ட.... கொல்லப் பக்கமா வா... சாப்பிடுவே...'' என்றது அம்மா.

''எலெ கிள்ளிட்டு வரட்டுமா ஆச்சி.''

''இருக்கு... வா.''

வயலில் இருந்து வீடு திரும்ப மதியம் மூணு ஆகிவிட்டது. ஜெயபால் சாப்பிட்டு, கைலியை மடித்துக் கட்டிக்கொண்டு படியிறங்கி விட்டான். பரமத்தேவர் வீட்டுக்குத்தான் நடை. தாயக்கட்டமோ ஆடு புலி ஆட்டமோ ஆரம்பமாகிவிடும். கோவிந்து லைப்ரரி பக்கம் நகர்ந்து

விட்டான். வேலாயுதம் பிள்ளை நடை வாசலில் வந்து உட்கார்ந்து கொண்டார். அம்மா ஒரு தட்டில் இள வெற்றிலையாகக் கொண்டுவந்து வைத்தாள். கூடவே கொஞ்சம் சுருள் பாக்கு. அவர் முன் அதை நகட்டிவிட்டு, எதிர் நிலைப்படியில் சாய்ந்து உட்கார்ந்து கொண்டாள்.

''நம்ம சேவாலுக்கு ஒரு நல்லத பொல்லதப் பண்ண வேண்டாமா?''

அவர் வெற்றிலையை அதக்கிக் கொண்டிருந்தார்.

''காலா காலத்துலெ ஒண்ண பண்ணிப் போடணும்.

''பண்ணலாம்.''

''இந்தப் பம்மல் முடியவும் ஒண்ணப் பாத்து மூச்சிடணும்.''

''ம்.''

''நம்ம பாப்பாவும் ஒண்ணு சொல்லிக் கிட்டிருக்கா. அதப் போய் ஒரு நடை பாக்கத் தோது இல்லாம இருக்கு.''

''பாக்கலாம்.''

''அறுப்பு முடியட்டும்னுதேன் பாக்குறேன். தெக்கே வடக்கே அலைஞ்சாத்தான் தெகையும்.''

அவர் எழுந்து போய், வெற்றிலைச் சாற்றை சாக்கடையில் உமிழ்ந்துவிட்டு வந்தார். சிறிது நேரம் வாய்க்குள் நாக்கைச் சுழட்டித் துழாவினார். அகப்பட்ட வெற்றிலைத் துணுக்குகளை மென்றார்.

''கோவிந்தும் ஒரு வேலை வெட்டினு அமைஞ்சாத்தேன்.''

''அவன்தான் வேண்டாங்கிறானே.''

''இந்த ஊரே வேண்டாம். நம்ம பொன்னம்மாக்கா கதை கதையாச் சொல்றா. வடக்குத் தெரு ஆளுங்க எப்படா பாயலாம்னு காத்துக்கிட்டு இருக்காங்களாமே.''

''நாம இருக்குற வசமா இருந்தா ஒண்ணுமில்லே.''

''எதுக்கு! ஒருத்தன் போதும் வெவசாயத்துக்கு. இவன் அம்புட்டுப் படிச்சுட்டு எதுக்கு?''

''கேட்டாத்தானே.''

''எங்கனா உத்தியோகம்னு போகட்டும்.''

''இதெல்லாம் அது அதுகளுக்குத் தெரியணும். நீ தொரட்டி போட்டுக்கிட்டா ஒக்காந்திருப்ப...''

''நாமதேன் சொல்லணும்.''

''சொன்னா மொகத்தைப் பாக்குறான்.''

அவர்கள் பேசிக் கொண்டிருக்கும் போது, வாசலில் நிழலாடிற்று! இருவரும் சட்டென்று வாசல் பக்கம் திரும்பினர்.

(காற்று வீசும்)



நீங்கள் கேட்டவை

● இரா.சாந்தகுமார்,
சென்னை - 49

? 'பப்'களில் பெண்கள் மது அருந்து வதை சட்டப்படி தடுக்க முடியாது என்று சென்னை போலீஸ் கமிஷனர் கூறியுள்ளாரே?

! அது உண்மைதான். ஆண்களுக்கு ஒரு சட்டம் பெண்களுக்கு ஒரு சட்டம் இருக்க முடியாது. ஆனால், ஆண்களோடு சரிநிகர் சமானமாக நல்ல விஷயங்களில் பெண்கள் போட்டியிட வேண்டுமே தவிர, மோசமான காரியங்களில் அல்ல. ராமர் சேனையின் செயல்பாடு பிற்போக்குக் காட்டுமிராண்டித்தனம் எனில், ''பெண்கள் குடித்தால் என்ன?'' என்று கேட்பது முற்போக்கு விதண்டாவாதம். விடியல்: பூரண மதுவிலக்கு

● மல்லிகை மன்னன், மதுரை

? ''விடுதலைப் புலிகளை முற்றிலுமாக அழிக்கும் இலங்கை அரசின் சதித்திட்டத்தில் இந்திய அரசுக்கும் சமபங்கு உண்டு'' என்று அபாண்டமாகப் பழி சுமத்துகிறாரே வைகோ?

! இதில் சதி என்ன இருக்கிறது? விடுதலைப் புலிகளை பயங்கரவாத அமைப்பு என்று அறிவித்த பிறகு, பூப்பறித்துக் கொண்டிருப்பார்களா? அவர்கள் மனம் திருந்தி தேசிய நீரோட்டத்துக்கு வந்தால்தான் உண்டு. தப்பித் தவறி புலிகள் அந்த முடிவை எடுத்தாலும் வைகோ விட மாட்டார் போலிருக்கே!

● ஜி.ஜெயராமன், கூத்தலூர்

? இலவசம், சலுகை இவற்றுக்கு ஓர் எல்லை இல்லையா?

! அடுத்தடுத்து தேர்தல்கள் வருவதால் எல்லையற்ற வானமே எல்லை! அதனால்தான் தமிழக அரசுக்கு வருவாய் குறைந்துள்ள இந்த நிதியாண்டிலும் இலவசங்களுக்கான ஒதுக்கீடு அதிகரிக்கப்பட்டிருக்கிறது.



குத்துப் பாட்டுக்கு குழந்தைகள் ஆடலாமா?

● எம்.அசோக்ராஜா,
அரவக்குறிச்சிப்பட்டி

? ''ஒரு சன்னியாசியாகத்தான் வாழ்ந்து வருகிறேன்'' என்கிறாரே ஜெ?

■ தராசு ■

! காஸ்ட்லி சன்னியாசிகள் பலருள் அவர் ஒரு சூப்பர் காஸ்ட்லி சன்னியாசி!

● **எம்.சம்பத், வேலாயுதம்பாளையம்**

? மும்பை தாக்குதலுக்கு வங்க தேசத்தின் ஹுஜி இயக்கம் ஏற்பாடு செய்த தீவிரவாதிகளே காரணம் என்று பாகிஸ்தான் கூறுகிறதாமே?

! மும்பை தாக்குதலுக்கு பாகிஸ்தான் மீது பழி சுமத்தப்படாமலிருக்க ரொம்பத்தான் சிரமப்படுகிறார்கள். ஆப்பிரிக்க கண்டத்திலுள்ள டிம்பக்டுவிலிருந்து வந்து தாக்கியதாகச் சொன்னாலும் சொல்வார்கள்!

● **ஆர்.ராஜதுரை, சீர்காழி**

? இந்தியா விரைவில் நூறு சதவிகித எழுத்தறிவு பெற்ற நாடாகத் திகழும் என்று ஜி.கே. வாசன் சொல்கிறாரே?

! விரைவில் என்ற சொல் அரசியலில் ரப்பர் மாதிரி. சௌகரியத்துக்கு இழுத்தடிக்கலாம். நிற்க; எழுத்தறிவுக்கே இத்தனை காலம் தேவை எனில், முழுமையான மனிதனை உருவாக்கும் கல்வி அறிவு எந்தக் காலத்திலோ!



* சீசன்ஸ் கிரீட்டிங்!

● **என்.காளிதாஸ், சிதம்பரம்**

? தமிழ் மக்களைப் பாதுகாப்புப் பகுதிக்குச் செல்ல விடாமல் புலிகள் தடுக்கின்றனர் என்று இலங்கை அரசு குற்றம் சாட்டியுள்ளதே?

! அதோடு ஏன் விட்டீர்கள்? போர் முனையில் இருந்து வெளியேறிய அப்பாவித் தமிழர்கள், தற்கொலைத் தாக்குதலில் உடல் சிதறி இறந்துள்ளனர். நம் தமிழ்நாட்டுத் தானைத் தலைவர்கள் எவருமே அதைப் பற்றி மூச்சுக் காட்டவில்லை என்பதையும் கவனியுங்கள்.

❑ ரூ.100 பரிசு பெறுபவர் :

ஏ.மோகனசுவாமி, கொளத்தூர்

★ ரூ. 50 பரிசு பெறுபவர் :

கே.எஸ்.சுந்தரம், பெங்களூரு

● **பி.என்.ஜெய்குமார், திருவாரூர்**

? தீவிரவாதிகளின் தவறான கொள்கைகள் மீது ஃபத்வா விதிக்க வேண்டும் என்று முஸ்லிம் மத அமைப்புகள் மற்றும் தலைவர்களுக்கு இந்து தர்ம ஆச்சார்ய சபை கோரிக்கை விடுத்துள்ளதே?

! ரொம்ப சரி. அந்த 'ஃபத்வா'வை இந்து அடிப்படைவாதிகளுக்கும் தர்ம ஆச்சார்ய சபை விதிக்க வேண்டும்.



* மலிவான மன்னிப்பு!

● **அ.சுஹைல் ரஹ்மான், திருச்சி-21**

? தங்கத்தைப் போல அரிசி விலையும் நாளுக்கு நாள் உயர்ந்துகொண்டே வருவது கவலை தருகிறதே?

! தங்கத்தையாவது சும்மா கடையில் தொட்டுப் பார்த்துவிட்டுத் திரும்பிவிடலாம். அரிசியை அப்படிப் பார்த்துவிட்டு வந்தால் வயிறு சும்மா இருக்காதே! தேர்தல் சமயத்தில் பிரியாணி; மற்ற நாட்களில் சாத்துணி!

● **இரா.சக்கரபாணி, மதுரை**


? பூரண மதுவிலக்கு கோரி ஆளும்

கட்சியை வறுத்தெடுக்கும் பா.ம.க., தனது கட்சியில் யாரும் மது அருந்தக் கூடாது என்று கட்டளையிட்டுள்ள நிலையில், அக்கட்சி மாநாட்டின் போது பொதுக்குழு கூட்டத்தைக் கூட்டியவரே மது பாட்டில்களை வழங்கியுள்ளது எதைக் காட்டுகிறது?

! மது எவ்வளவு கொடுமையானது தீமையானது என்பதை அடிக்கோடிட்டு வலியுறுத்தி நிதர்சனமாக உணர்த்துகிறது.

● வி.ஜி.சத்தியநாராயணன்,
சென்னை - 61

? ''நான் பாரத ரத்னா விருதை எதிர்பார்க்கவில்லை; கலைஞர் பட்டமே எனக்குப் போதும்'' என்கிறாரே கருணாநிதி?



★ நூறு சதவிகித சௌகரியம்! ★ கேளாத ரத்னா!

! அவர் எதைத்தான் எதிர்பார்த்தார்? டாக்டர் பட்டம் வேண்டாம் என்றார்; முத்தமிழ் அறிஞர் வேண்டாம் என்றார்; பாராட்டு விழா வேண்டாம் என்றார்; பதவியே வேண்டாம் என்றார்; யார் கேட்டார்கள்...? இப்போது பாரத ரத்னா வேண்டாம் என்று சொல்கிறார். என்ன நடக்கப் போகிறதோ?

● மஞ்சு தேவன், நவி மும்பை

? முன்னாள் உ.பி. முதல்வர் கல்யாண் சிங் கோரிய மன்னிப்பு?

! ஓநாய் அழுத கதைதான்!

● ஏ.மோகனசுவாமி, கொளத்தூர்

? இலங்கைத் தமிழர்கள் என்பதை விட, இலங்கை இந்தியர்கள் என்ற சொல் கூடுதல் பலம் பெறுகிறது அல்லவா?

! அஸ்கு புஸ்கு! அப்புறம் கழகக் கண்மணிகளோட அரசியல் எதிர்காலம் பலவீனமாயிடுமே!

● கே.எஸ்.சுந்தரம், பெங்களூரு ★

? தற்போது தமிழ் டீ.வி. சானல்களில், நாட்டியம் என்ற பெயரில், பன்னிரண்டு வயதுக்கும் குறைவான சிறுவர் சிறுமியரை, குத்துப் பாட்டுக்கு டான்ஸ் ஆட வைப்பது அருவருப்பாக உள்ளதே? இந்தகைய நிகழ்ச்சிகளை அரசு தடை செய்ய வேண்டாமா?



★ காஸ்ட்லி சன்னியாசி!



★ புலிக்கு மேல் புலி!

! ஊகூம். அடிப்படை சுதந்திரங்களில் அரசு கை வைக்க முடியாது. பெற்றோரும் டீ.வி. நிலையங்களும் சுயகட்டுப்பாடு காண்பித்தால்தான் உண்டு. இன்று இந்தியப் பண்பாட்டின் மீது ஓங்கி குத்துவிடலாம். நாளை நமக்கே வலிக்கும்.

● கே.வி.ராமன், சென்னை - 73

? சமயம் வரும்போது அயோத்தியில் ராமர் கோயில் கட்டப்படும் என பா.ஜ.க. தலைவர்கள் கூறுகிறார்களே?

! சென்ஸ் கிரீட்டிங்ஸ் மாதிரி எலெக்ஷன் டயலாக். அயோத்தியில் எந்த இடத்தில் என்று கூறாமல் விடுவது, ஆபத்தை உள்ளடக்கிய சஸ்பென்ஸ் டயலாக்.

பதிப்பாளர்கள் எழுத்தாளர்களை எப்படி ஏமாற்றுகின்றனர் என்பதனை கல்கி டீம் சிறப்பாக ஆய்ந்து வெளியிட்டுள்ளது. (கல்கி 1.2.2009 இதழில்.)

1960களின் தொடக்கத்தில் ஒரு பவுன் நூறு ரூபாய்க்கு விற்றபோது, புகழ்பெற்ற ஒரு பதிப்பாளரிடம் என் ஐந்து மாத ஊதியம் ரூ.500ஐயும், கொடுத்து வசன கவிதைகளையும் கொடுத்தேன். நூலாக வெளிவந்த 'பேதை நெஞ்சம்' என்ற கவிதைத் தொகுப்பின் விமர்சனம் கல்கியில் கூட இடம்பெற்றது. அந்தப் பதிப்பாளரிடமிருந்து எனக்கு நூறு ரூபாய் கூடத் திரும்பக் கிடைக்கவில்லை. சூலூரில் உள்ள நூலகத்தின் stock registerஐ, அண்மையில் பார்த்த போது அது

Follow Up



அப்போதே நூலகங்களுக்குத் தேர்வானது தெரியவந்தது.

அவர்தான் அப்படி என்றால், 1985இல் பல்கலைக்கழகப் பேராசிரியர் ஒருவரின் நச்சரிப்புத்தாங்க முடியாமல், இதழ்களில் வெளியான சிறுகதைகளைத் தொகுத்துக் கொடுத்தேன். முதலிலேயே ராயல்டி என்றால் ஏழு சதவிகிதம் என்றும் விற்றுத் தீர்ந்தபின் பத்து சதவிகிதம் என்றும் எழுதினார். இருபத்தைந்து ஆண்டு அனுபவத்தில் கற்றதனை வைத்து, முதலிலேயே

எழுத்தாளர்களுக்குச்

எழுத்தாளர்கள் ஏமாறாமல் இருக்க, எழுத்தாளர்களுக்கும் பதிப்பாளர்களுக்கும் கீழ்க்கண்ட வழிமுறைகளைப் பரிந்துரை செய்கிறார் எழுத்தாளர் மெர்வின்.

* புத்தகம் எழுதும் ஆசிரியருக்கே அதன் முழு உரிமையும் இருக்க வேண்டும். அவுட்ரைட் அடியோடு ஒழிக்கப்பட வேண்டும். ராயல்டி (பத்து சதவிகிதம்) முறையில் பணம் தர வேண்டும்.

* உரிமை ஆசிரியருக்கு என்று போட்டிருக்கும் நூல்களை மட்டுமே நூலகங்கள் வாங்க வேண்டும். ஆசிரியர் புகைப்படம் பின் அட்டையில் இருக்க வேண்டும்.

* நூல்களை அச்சடிக்கும் அச்சகத்தில் நூல்களின் எண்ணிக்கையைக் குறித்து விவரம் அடங்கிய விண்ணப்ப பாரத்தில் அச்சக உரிமையாளர் கையெழுத்து போட்டுத் தருவது போல, நூலின் ஆசிரியர், புத்தகங்களின் எண்ணிக்கையைச் சரிபார்த்து கையெழுத்து போட்டுத் தரும் விண்ணப் பப்படிவம் இருக்கவேண்டும்.

இதனால், 1,000 பிரதிகள் என்று கூறி, 3,000 பிரதிகள் அடிக்கும் பதிப்பாளரின் திருட்டுத்தனத்தை ஒழிக்க முடியும்.

* ஒவ்வொரு நூலிலும் ஆசிரியரின்



கொடுத்துவிடுங்கள் என்றேன். ரூ.700க்கு காசோலை அனுப்பினார். மூன்று ஆண்டுகளுக்குள் திருவல்லிக் கேணியில் நடைபாதைக் கடையில் எனது நூல் இருக்கக் கண்டு எடுத்துப் பார்த்தேன். இரண்டாம் பதிப்பு என வெளியிட்டிருந்தார். பேராசிரியருக்குக் கடிதம் எழுதினேன். அவசரமாகத் தேவைப்பட்டதால் முன் அனுமதி பெறவில்லை. விரைவில் ராயல்டி அனுப்பி வைக்கிறேன் என்ற அவர் காலமாகி விட்டார். பதிப்பைக் கவனிக்கும் டாக்டரான அவர் மகனுக்குப் பல கடிதங்கள் எழுதியும் அதுபற்றிக் கவலைப்படவில்லை.

பதிப்பாளர்களில் பாதிப் பேர் எழுத்தாளர்களை ஏமாற்றும் கலையில் கைதேர்ந்தவர்கள். பிழையின்றித் தமிழ் எழுதத் தெரியாத அவர்கள் பிழைப்பு, இந்த ஏமாற்றத்தாலேயே நடக்கிறது.

உண்மையுள்ள,
க.ரத்னம், சூலூர்

சில பரிந்துரைகள்!

முகவரி இடம்பெற வேண்டும்.

* அறிவியல், மருத்துவ சம்பந்தப்பட்ட நூல்களை எழுதும்போது அந்தந்தத் துறை யில் சம்பந்தப்பட்டவர்களே எழுதித் தர வேண்டும். இதனால், ஒரே எழுத்தாளர் பெயரை மாற்றிக்கொண்டு வெவ்வேறு துறையில் எழுதுவதைத் தவிர்க்க முடியும்.

* பதிப்பாளர் எழுத்தாளருக்கு ராயல்டி கொடுத்த விவரம் விண்ணப்ப பாரத்தில் இருக்க வேண்டும்.


* சொந்தமாக நூல் எழுதி வெளியிடும் எழுத்தாளருக்கு, கூட்டுறவு வங்கியில் கடன் கிடைக்க வசதி செய்யப்பட வேண்டும்.

* எழுத்தாளன் வாழும்போது வளமுடன் வாழ வைக்காமல், இறந்தபின்பு, எழுத்தாளருக்கு மண்டபம் கட்டுவதும் அவருடைய குடும்பத்துக்குப் பணமுடிப்பு தருவதும் சரியல்ல!

* எழுத்தையே நம்பி வாழ்ந்து கொண்டி ருக்கும் எழுத்தாளருக்கு அரசு பஸ் பாஸ் வழங்க வேண்டும்.

இது எழுத்தாளரின் ஆயுள் முழுவதும் தரப்பட வேண்டும்.

* ஒரு தொழிலில் இருந்துகொண்டு, எழுத்தைப் பொழுதுபோக்காக வைத்தி ருப்பவர்களுக்கு இது தேவை இல்லை.





• கஸாப் ரோலில் ராஜன்வர்மா

வறுமையின் நிறம் 'டோட்டல்

"வறுமையும் கல்வியின்மையுமே ஒரு தீவிரவாதி உருவாகக் காரணம். படிப்பறிவு இல்லாததால் சிலர் எப்படி திசை மாறுகிறார்கள், பணம் கிடைக்கும் என்ற பேராசையினால் என்னவெல்லாம் செய்யத் துணிகிறார்கள், வறுமை எவ்வளவு கொடியது என்பவற்றை இந்த சினிமா மூலம் சொல்லப் போகிறோம். மும்பை வெடிகுண்டுத் தாக்குதலில் நூற்றுக்கணக்கான மக்கள் உயிரிழந்தனர். நான் எடுக்கும் இந்த 'டோட்டல் டென்' படத்தை அவர்களுக்கு அர்ப்பணிக்கிறேன். இன்னொரு கஸாப் உருவாகக் கூடாது..." சமூக அக்கறையுடன் பேசுகிறார் தயாரிப்பாளர் ஆனந்த் பண்டாரே!

26.11.2008 மும்பை வெடி குண்டுத் தாக்குதலால் நாடே அதிர்ச்சியில் உறைந்து போயிருக் கிறது. அந்த அட்டாக்கில் ஈடு

பட்டுப் பிடிபட்ட ஒரே தீவிரவாதி அஜ்மல் கஸாப் இன்று மும்பை சிறையில். வயதோ வெறும் இருபது!

இந்தியா - பாகிஸ்தான் இரு நாடுகளுக்குமே பெரும் தலைவலியைக் கொடுத்துக் கொண்டிருக்கும் கஸாபை மையமாக வைத்து வெளிவர இருக்கும் இந்தி சினிமா 'டோட்டல் டென்'! மும்பை ஃபிலிம் சிட்டியில் ஜரூராக ஷூட்டிங் நடந்துகொண்டிருக்க, கஸாப் ரோலில் நடித்துக் கொண்டிருந்த ராஜன் வர்மாவிடம் பேசினோம்.

''இதில் கஸாபை ஒரு ஹீரோவாகக் காண்பிக்கவில்லை. ஒரு வெகுளியான ஏழைப் பையன் எப்படி ஜிஹாதியாக மாறுகிறான் என்பதே கதை!

மும்பை அட்டாக் பிளானிலிருந்து, தீவிரவாத ட்ரெயினிங் எப்படி எங்கேயெல்லாம் நடக்கிறது; யாரைப் பகடைக் காயாக நகர்த்துகிறார்கள் என்பதை கஸாபே சொல்லும் கதை! தீவிர



டென்'!

வாதத்தை ஒடுக்கும் சக்தியாக பயங்கரவாதத்துக்கு உலை வைக்கும் சினிமாவாக டோட்டல் டென் இருக்கும். பயங்கரவாதியான கஸாப், இன்று தன்னந்தனியே சிறையில் தன் அம்மாவை நினைத்து குழந்தை போல கதறிக் கதறி அழுகிறான். தான் செய்த பாவத்தை நினைத்து குன்றிப் போகிறான். என்ன சாதித்தான்? கஸாபின் இன்றைய நிலை என்ன...?'' ஆக்ரோஷமாகக் கேட்கிறார் ராஜன் வர்மா.

மும்பை வெடிகுண்டுத் தாக்குதலை வைத்து பல சினிமாக்கள் வெளிவரக் கூடும். அதில் முதன்முதலாக வர இருப்பது டோட்டல் டென். ஹரிஓம் ஷர்மா மற்றும் ஆனந்த் பண்டரே இதன் தயாரிப்பாளர்கள். சுரேந்திர சூரி இயக்குநர். இந்த சினிமாவில் பாடல்கள் கிடையாது. ஹீரோயினும் கிடையாது. கிரிக்கெட் வீரர் யுவராஜ் சிங்கின் தந்தை யோகராஜ் சிங் பாகிஸ்தான் தீவிரவாதியாக பவர்ஃபுல் ரோலில் நடித்துக் கொண்டிருக்கிறார் என்பது சிக்ஸர் செய்தி!



கஸாப், எங்கள் நாட்டைச் சேர்ந்தவனே அல்ல என பாகிஸ்தான் ஒரேடியாக மறுத்துவிட பல சாட்சியங்களைக் காண்பித்தவுடன் ஒப்புக்கொண்டிருக்கிறது.

யாரிந்த கஸாப்?

முகமது அஜ்மல் முகமது அமீர் கஸாப், பாகிஸ்தானில் ஃபரீத் கோட்டில் இருக்கும் சிப்பல்புரா என்ற மிகவும் பின்தங்கிய கிராமத்தைச் சேர்ந்தவன். வறுமை யென்றால் அப்படியொரு வறுமை. ஏழ்மையினால் ஸ்கூல் போகவில்லை. லாகூரில் இருக்கும் அண்ணனிடம் 13 வயதில் போன கஸாப், சில வருடங்கள் பெற்றோர் வீடு, அண்ணன் வீடு என மாறி மாறி இருந்திருக்கிறான். வறுமையின் முன்னே ரத்த பாசம், பெத்த பாசம் எல்லாம் வெறும் வார்த்தைகளாகிப் போன சோகம். கோபித்துக்கொண்டு வீட்டை விட்டுப் போன கஸாப் முதலில் 200 ரூபாய் மாத வருமானத்தில் வேலை பார்த்து, பிறகு கெட்ட சகவாசத்தினால் சின்னச் சின்ன கிரிமினல் வேலைகளில் இறங்கியிருக்கிறான். ஒருமுறை ராவல்பிண்டிக்கு ஆயுதம் வாங்கப் போன கஸாப் கண்களில் பட்டன லஷ்கர் - ஏ - தொய்பாவின் போஸ்டர்களும் நோட்டீஸ்களும். லஷ்கரின் தலைவன் ஹஃபீஸ் முகமது சயீதின் தீப்பிழம்பு சொற்பொழிவைக் கேட்டு மனம் குழம்பி, ஜிஹாதியானால் பணம் கிடைக்கும் சமூகத்தில் மரியாதை கிட்டும்... எனத் தவறாகச் சிந்தித்து ஆயுதத்தைக் கையில் ஏந்தி தீவிரவாத ட்ரெயினிங் எடுத்துக் கொண்டான். கடல் வழியே வந்து மும்பை நகரத்தையே துவம்சம் செய்து, உயிருடன் பிடிபட்டு இன்று சிறையில்!

தினம் ஒரு கதை சொல்கிறான் கஸாப். அதில் எது உண்மை? 'கஸாப், எங்கள் நாட்டைச் சேர்ந்தவனே அல்ல என பாகிஸ்தான் ஒரேயடியாக மறுத்துவிட்டு, இன்று நாம் பல சாட்சியங்களைக் காண்பித்தவுடன் சடனேயென்று ஒப்புக் கொண்டிருக்கிறது.'

இனி கேஸ் நடக்கும்... கஸாப் என்னவெல்லாம் சொல்வானோ என்ற நடுக்கத்தில் பாகிஸ்தான் மற்றும் லஷ்கர் இயக்கம். ஆனால் நேற்றும் இன்றும் கஸாப் தன்னந்தனியே...

டோட்டல் டென் என்ற பெயர் ஏன் எனத் தயாரிப்பாளரிடம் கேட்டபோது, ''கடல் வழியே வந்த தீவிரவாதிகள் பத்து பேர். அதில் உயிருடன் பிடிபட்ட ஒரே தீவிரவாதி கஸாப், அதனால்தான் டோட்டல் டென் என்று கச்சிதமாக வைத்து விட்டோம்'' என்றார்.

- லதா சேகர்

இப்படிக்கு திருடன்

திருவாரூர் பாபு



திருட்டுத் தொழில் கதிரேசனுக்குப் புதிதல்ல. ஆனாலும் இன்று ஏனோ அவனுக்குப் படபடப்பு இருந்தது. ஜன்னல் கம்பியை ரம்பம் கொண்டு அறுத்தபோது வியர்த்துக் கொட்டியது. கைகள் நடுங்கின.

பரபரப்பான நுங்கம்பாக்கத்தில் திருமூர்த்தி தெரு பங்களா. இரண்டு நாட்கள் நோட்டம் விட்டதில் இரவு நேரத்தில் ஒரு வயதான அம்மா மட்டுமே தனியாக இருப்பது தெரிந்தது.

பத்து மணிக்கு பங்களா பக்கம் வந்து... டிராபிக் மற்றும் மனித நடமாட்டம் குறைந்ததும் காம்பவுண்ட் சுவர் ஏறிக்குதித்து வீட்டுக்குப் பின்பக்கம் வந்தான். பழைய மோஸ்தர் வீடு. மெலிதான ஜன்னல் கம்பிகள். ஒரு கம்பியை அறுத்து எடுத்துவிட்டான். இன்னொரு கம்பியை அறுத்தால்... உள்ளே நுழைந்து விடலாம்.

கைகளில் வேகம் கூட்டினான். கம்பி பட்டென விட்டுப் போக... பலம் கொண்ட மட்டும் வளைத்து திருப்பி... உடலைக் குறுக்கி உள்ளே நுழைந்தான்.

தனது யூகத்தை மீறி வீட்டுக்குள் யாரும் இல்லை என்பதை கதிரேசன் தீர்மானித்துக் கொண்டான். மெல்ல நடந்தான். ஹால் தாண்டி... வலதுபுறம் இருந்த அறைக்குள் நுழைந்தான். ஏ.ஸி. இல்லை. அதன் காரணமாக அறைக்கதவு திறந்திருந்தது.

மெல்ல கதவு வழியே எட்டிப் பார்த்தான். ஒரு அம்மா படுத்திருப்பது தெரிந்தது.

மெல்ல நடந்து கட்டில் அருகே சென்று அந்த அம்மாவை உற்றுப் பார்த்தவன்... திடுக்கிட்டான்.

அவள் உடம்பு குலுங்கிக் கொண்டிருக்க... கைகள் வெட்டி வெட்டி இழுத்துக் கொண்டிருந்தன. வலிப்பு!

அந்த நிமிடம் கதிரேசனுக்குக்

ஆஸ்பத்திரி வாசலில் நிற்கும் போலீஸ்காரர்களைப் பார்த்தான் கதிரேசன். தெரிந்தவர் யாரும் இல்லை. நிம்மதியாக இருந்தது.



குழப்பமாக இருந்தது. திருட வந்த வீட்டில் ஒருத்தி வலிப்பு நோயோடு துடித்துக்கொண்டிருக்கிறாள். காதில் மூக்கில் நகைகள் கிடந்தாலும் அவற்றை எடுத்துக்கொண்டு தொழில் முத்திரை பதிப்பதா... அல்லது இவளது உயிரைக் காப்பாற்றி தர்மத்தை நிலைநாட்டுவதா?

கதிரேசன் குழப்பத்தில் செய்வதறியாது நின்றிருந்தான். அவனது மனதுக்குள் எண்ணங்கள் அணிவகுத்தன.

இங்கிருந்தபடியே அவசர போலீஸுக்கு அல்லது ஆம்புலன்ஸ் சர்வீஸுக்கு ஃபோன் செய்து தகவல் சொல்லி விட்டுப் போய் விடலாமா?

ம்ஹூம். அவர்கள் விலாசம் தேடி வந்து... இது உயிர்ப் பிரச்னை. தனது முடிவை மாற்றிக்கொண்ட கதிரேசன் அதிரடியாகச் செயல்படத் தொடங்கினான். வெளியே வந்து ஒரு ஆட்டோவைக் கைதட்டி அழைத்தான்.

ஆட்டோ சீறிக் கொண்டு திரும்ப...

அரசாங்க ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்வோம். அம்மா என்று சொல்லலாம். அவர்கள் அட்மிட் செய்த உடனேயே அங்கிருந்து எஸ்கேப் ஆகிவிடலாம் என்பது அவன் எண்ணம்!

காலையில் வீட்டுக்காரர் வந்தால் தேடுவாரே... அவருக்கு எப்படித் தகவல் சொல்வது?

யோசித்த கதிரேசன்... மேஜை மேலிருந்து ஒரு பேப்பர் எடுத்தான். பேனா எடுத்தான். விறுவிறுவென எழுதத் தொடங்கினான்.

'அம்மாவுக்கு வலிப்பு வந்துவிட்டது. ராயப்பேட்டை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்கிறேன் - இப்படிக்கு திருடன்.'

ஆட்டோ ராயப்பேட்டை நோக்கி நகர்ந்தது.

''வேகமா போப்பா... பேஷண்ட் சீரியஸ்ஸா இருக்காங்க.''

ஆஸ்பத்திரி வாசலில் நிற்கும் போலீஸ்காரர்களைப் பார்த்தான் கதிரேசன். தெரிந்தவர் யாரும் இல்லை. நிம்மதியாக இருந்தது.

ட்யூட்டியில் இருந்த நர்ஸ் என்ன என்பது போலப் பார்த்தாள்.

''வலிப்பு'' என்றான்.

ஸ்ட்ரெச்சரில் படுக்க வைத்தான்.

நர்ஸ் இமைகளைப் பிரித்துப் பார்த்தாள். பல்ஸ் பார்த்தாள்.

தூங்கி வழிந்து கொண்டிருந்த இரண்டு உதவியாளர்கள் எழுந்து வந்தார்கள்.

''உனக்கு இவங்க என்ன உறவு?'' நர்ஸ் கேட்டாள்.

''அம்மா'' என்றான்.

நர்ஸ் டாக்டர் ராஜாராமனின் ஓய்வு அறை நோக்கி நடந்தாள்.

''டாக்டர்... அந்த ஹார்ட் பேஷண்ட் நிலைமை மோசமா இருக்கு'' - சக நர்ஸ் ப்ரியாவின் குரல்.

''இம்மீடியட்டா அந்த பேஷண்டுக்கு சர்ஜரி பண்ணணும். ஏ.கே. நர்சிங்ஹோமுக்குக் கொண்டு போகச் சொல்லுங்க. ஒன்பது மணிக்கு நான் அங்க போயிடுவேன்'' என்றார்.

''பேஷண்டைப் பார்த்தா ரொம்ப முடியாதவங்க போலத் தெரியுது... அவ்வளவு செலவு...'' ப்ரியா இழுத்தாள்.

''பார்க்க அப்படித்தான் தெரியும். கெடு வச்சிட்டா எத்தனை லட்சம்னாலும் வந்து சேர்ந்துடும்'' என்ற ராஜாராமன், உள்ளே நுழைந்த நர்சைப் பார்த்தார்.

''உங்களுக்கு என்ன சிஸ்டர்?''

''கேஸ் வந்திருக்கு... ஃபிட்ஸ்''

''தூங்கவிட மாட்டாங்களே'' என்றபடி டாக்டர் நடந்தார். காரிடார் கடந்து எமர்ஜென்சி ஓ.பி.க்கு வந்த டாக்டர் ராஜாராமன் ஸ்ட்ரெச்சரை நோக்கிப் போனார். அருகே சென்றதும் அதிர்ந்தார்.

''அம்மா...'' என்றார் பதற்றமாக. அவசர அவசரமாக சிகிச்சையைத் தொடங்கினார்.

''அம்மாவை... யாரு கொண்டு வந்தா?'' சப்தமான அவரது கேள்விக்கு அங்கே பதில் இல்லை.

நர்ஸ் ப்ரியா அறைக்குள் நுழைந்தபோது அந்த ஹார்ட் பேஷண்ட் இறந்து போயிருந்தாள். அவளோடு வந்திருந்த பெண் குலுங்கிக் கொண்டிருந்தாள்.

பெட்ஷீட்டால் முகத்தை மூடினாள் ப்ரியா. டாக்டர் ராஜாராமன் மீது கோபம் வந்தது. துளிக்கூட மனிதாபிமானம் இல்லாமல்... இவ்வளவு வசதி இருந்தும் இன்னும் பணம்... பணம்... ச்சீ... த்தூ...

ஸ்ட்ரெச்சரில் வைத்து பிணத்தை வெளியே தள்ளிக் கொண்டு போனார்கள்.

ஓ.பி.யில் சீட்டு வாங்கிக்கொண்டு காரிடாரில் நடந்து கொண்டிருந்த கதிரேசன், தூரத்தில் அவளை - அந்த நடுத்தர வயதுப் பெண்மணியைப் பார்த்துக் குழம்பி... உற்றுக் கவனித்து... அருகே வந்து...

''தங்கச்சி'' என்றான்.

அவள் கதிரேசனைப் பார்த்துத் திகைத்து, பின் பாய்ந்து வந்து கட்டிப்பிடித்துக் கொண்டாள்.

''அம்மாவுக்கு நெஞ்சு வலின்னா... எட்டு மணிக்கே கொண்டு வந்து சேர்த்துட்டேன்... ஆனாலும் காப்பாத்த முடியலண்ணா...'' என்றாள்.

''அம்மா... அம்மா...'' கதிரேசன் அரற்றத் தொடங்கினான். ●

அப்பாவுக்கு உருகும் ஐஸ்



ஐஸ்வர்யா (ராய்) பச்சனுக்கு அவரது குடும்பத்தின் மீது அலாதியான பாசம் உண்டு என்பது அனைவருக்கும் தெரிந்த சமாசாரம்தான். அந்தப் பாசத்தின் காரணமாக, பிரெஞ்சு அரசாங்கம் சமீபத்தில் ஐஸ்வர்யாவுக்கு வழங்கிய, Officer Dan Ordre Des Arts Et Des Lettres (இவ்வளவு பெரிய பட்டப் பெயரா?) பட்டத்தை வாங்கிக் கொள்ள, பிரான்ஸ் நாட்டுக்குச் செல்ல மறுத்து விட்டார் ஐஸ். காரணம் அவரது அப்பா, கிருஷ்ணராஜ் ராய்க்கு உடம்பு சரியில்லையாம். தாம் அந்த மாபெரும் பட்டத்தை, பரிசை பெறப்போகும் வேளையில் தம் ஒட்டுமொத்தக் குடும்பமும் அதை நேரிடையாகக் கண்டு ரசிக்க வேண்டும் என விரும்புகிறாராம். அதனால் தம் அப்பாவுக்கு உடல்நலம் சரியான பிறகு இந்த விழாவுக்கு ஏற்பாடு செய்யுமாறு பிரான்ஸ் அரசாங்கத்திடம் கேட்டுக் கொண்டுள்ளாராம் திருமதி அபிஷேக் பச்சன்...

அப்பா பாசம்ன்னா இதுதானா?

- என்.எஸ்.

'அன்னச் சத்திரங்கள் ஆயிரம் அமைப்பதைவிட ஓர் ஏழைக்கு எழுத்தறிவை அளிப்பது புண்ணியம்' என்பர். இங்கே ஒருவர், தனக்குச் சொந்தமான நூறு ஏக்கர் நிலத்தை, கல்லூரி கட்டுவதற்காக இலவசமாகக் கொடுத்ததுடன், ஒவ்வொரு வருடமும் இருநூறு மாணவிகளுக்குத் தேவைப்படும் படிப்புச் செலவையும் ஏற்றுக் கொண்டு 'இன்னும் அதிகமாகச் செய்யணும்' என்று அமைதியாகச் சொல்கிறார்.


● அருள்முடி

சென்னை, உயர்நீதிமன்றத்தில் வழக்கறிஞராகத் தொழில் செய்யும் அருள்முடி என்பவர்தான் அந்த அதிசய மனிதர். ''சேலத்திலுள்ள நடுப்பட்டி என்ற கிராமம்தான் எனது சொந்த ஊர். அப்பா பொன்னுரங்கம் பள்ளி ஆசிரியர். அதனால் படிப்பின் அருமையையும் அவசியத்தையும் சிறு வயதிலேயே அப்பா மூலம் நன்கு உணர்ந்திருந்தேன். இன்று நான் இந்த அளவுக்கு உயர்ந்திருக்கக் காரணம் கல்விதான். ஆகவே, அந்தக் கல்வி கிடைக்காமல் தவிக்கும் ஏழை மாணவர்களுக்கு உதவ வேண்டும் என்ற எண்ணம் நீண்ட காலமாகவே என் மனத்தில் இருந்து வந்தது.



அதற்குச் செயல் வடிவம் கொடுக்கும் எண்ணத்துடன் 'AMR Charitable Foundation Trust' என்ற பெயரில் ஒரு டிரஸ்ட் ஆரம்பித்தேன். சேலம் மாவட்டத்தில் கணவாய்ப்புதூர் என்ற கிராமத்தில் எங்களுக்குச் சொந்தமான நூறு ஏக்கர் நிலம் உள்ளது. அங்கே ஒரு கல்லூரி கட்டலாம் என்று முடிவெடுத்தேன். எனது இந்த எண்ணத்தை அறிந்த, சுவாமி சித்பவானந்தா அவர்களின் முதன்மை சீடரான சுவாமி ஆத்மானந்தா (கரூர் மற்றும் தரங்கம்பாடியிலுள்ள ஸ்ரீ சாரதா நிகேதன் மகளிர் கல்லூரிகளின் நிறுவனர்) என்னை அணுகி, 'தங்களுக்கு கல்லூரி கட்டுவதற்கு இடம் தேவை' என்று தெரிவித்தார். அடிப்படையில் எனது நோக்கம்தான் அவர்களது நோக்கம் என்பதாலும், எங்களைவிடச் சிறப்பாக அவர்களால் செயல்படுத்த முடியும் என்பதாலும் உடனடியாகச் சம்மதித்து இடத்தைக் கொடுத்தேன்'' என்கிறார். இந்த இடத்தில் தொடங்கப்படவுள்ளது 'ஸ்ரீ சாரதா நிகேதன் கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி.'

''அதென்ன குறிப்பாக கிராமப் பகுதி மாணவிகளின் படிப்புச் செலவை ஏற்றுக் கொண்டுள்ளீர்கள்?'' என்று கேட்டால் புன்னகை புரிகிறார். ''பெண்களின் கல்வித் தரம் உயர்ந்தால் குடும்பத்தின் தரமும் அதனால் நாட்டின் தரமும் உயரும். நகரத்தில் கல்லூரியில் பயில்வதற்கான வசதியும் வாய்ப்பும் எளிதில் கிடைக்கின்றன. கிராமப்புறத்தில் உள்ளவர்களுக்குப் பணப்பிரச்னை, தொலைவு,

தங்குவதற்கான இடப்பிரச்னை என நிறைய பிரச்னைகள். இதனாலே பள்ளி இறுதியுடன் பலரது படிப்புக்கு முற்றுப் புள்ளி வைக்கப்படுகிறது. இந்தக் குறையைப் போக்குவதற்காக எங்களால் முடிந்த சிறு முயற்சியே இது. முதல் கட்டமாக இருநூறு மாணவிகளின் படிப்புச் செலவை ஏற்றுக் கொண்டுள்ளோம்'' என்கிறார்.

ஆதரவற்ற அல்லது பெற்றோரில் யாராவது ஒருவரை இழந்த, மிகவும் வறுமை நிலையிலுள்ள மாணவிகளுக்கு உதவுவதே இவரது நோக்கம்.



கனவுகள் நனவாகும் கணவாய்ப்புதூர்!

கரூர் இராமகிருஷ்ணா சேவாஸ்ரமத்தின் தலைவர் ஸ்ரீமத் சுவாமி ஆத்மானந்தா:

''அருள்முடி அவர்களைப் போல் இன்னும் பலர் இதுபோன்ற நல்ல காரியங்களைச் செய்ய முன்வந்தால், பல ஏழை மாணவர்களின் வாழ்வில் ஒளியேற்ற முடியும். இப்போது தொடங்கவுள்ள இந்தக் கல்லூரி மூலம் சுற்று வட்டாரத்திலுள்ள ஏராளமான மாணவிகளின் எதிர்காலம் பிரகாசமடையும். இங்கே சாதி, சமய வேறுபாடு இல்லாமல் எல்லா மாணவிகளும் சரிசமமாக நடத்தப்படுவார்கள். கரூரிலுள்ள எங்களது இன்னொரு கல்லூரியிலும் இதே முறைதான் உள்ளது. வறுமையிலுள்ள மாணவிகள் கல்வி வளம் பெற வேண்டும் என்பதே எங்களது நோக்கம். அந்தக் கல்லூரி மூலம் ஏராளமான பொறியியல் வல்லுநர்களை உருவாக்கியுள்ளோம். இப்போது தொடங்கப்படவுள்ள 'ஸ்ரீ சாரதா நிகேதன் கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி' மூலம் எதிர்காலத்தில் பல பெண்கள் ஏற்றம் பெறுவது நிச்சயம். பெண்கள் முன்னேற்றம், சுயச்சார்பு இவையே கல்லூரியின் நோக்கமாக அமையும்.''



''பிப்ரவரி இருபத்தைந்தாம் தேதி இந்தக் கல்லூரி கட்டுவதற்கான பூமிபூஜை நடக்கவுள்ளது. இந்தக் கல்லூரி மூலம் தருமபுரி, கிருஷ்ணகிரி, சேலம், திருவண்ணாமலை, வடஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான மாணவிகளின் வாழ்வில் கல்வி ஒளியை ஏற்ற முடியும்'' என்கிறார் அருள்முடி.

கணவாய்புதூரில் கல்லூரி அமைவதன் மூலம் அவர் கனவு மட்டுமல்ல, ஆயிரக்கணக்கான கிராமத்துப் பெண்களின் கனவுகளும் நிறைவேறப் போகின்றன!

- யுவராஜ்

மனிதர்கள் 'அன்பை' விட்டு விலகி ஓடிவிடக் கூடாது என்ற நோக்கத்துடன் 'அன்புக்காக ஓர் ஓட்டம்' என்ற விழிப் புணர்வை ஏற்படுத்தி நடத்துவது பாராட் டத் தக்கது!

- எஸ்.ஜானகி, உடுமலைப்பேட்டை

நகைச்சுவை பற்றி விளக்கம் கேட்ட கேள்விக்கு, 'நாகேஷ்' என்று பதிலளித்த விதம் கிரேஸி மோகனின் 'டைம்லி டிராஜடி!'

- லெ.நா.சிவகுமார், சென்னை - 33

ஒபாமா பற்றிய போட்டோ போட்டி யில் வாசகர்களின் கமெண்ட்ஸ் அபாரம்!

- த.சத்தியநாராயணன், அயன்புரம்

நாகேஷின் பெயர் 'குண்டுராவ்' என்று தான் மற்ற பத்திரிகைகளில் கண்டேன். ஆனால், நாகேஷின் பெயர் 'நாகேஸ் வரன்' என்பதை, கல்கி மூலமாகத்தான் தெரிந்து கொண்டேன்.

- எஸ்.கோபாலன், நங்கநல்லூர்

காமெடி சூப்பர் ஸ்டார் நாகேஷ் பற்றி கல்கி வழங்கியிருந்தது கட்டுரை அல்ல... கலங்க வைத்த கண்ணீர் அஞ்சலி!

- ஆர்.ராம்சுப்ரமணி, திருவாரூர்-2

இலங்கைப் பிரச்னை பற்றிய முதலை கார்ட்டூன் எங்களைச் சிந்திக்க வைத்தது! இப்படியே போனால் இதற்குத் தீர்வே கிடையாது போலத்தான் தெரிகிறது!

- வே.முருகேசன், சென்னை - 88

வெறும் வாய்க்குச் சுவையான அவலாக இருந்த சினி சிப்ஸ் எங்கே காணோம்?

- ராஜேந்திரம் தி.சௌந்தர், வடபழனி

'அப்பாவின் காதலி' கதையில் அம்மா கூறிய பதில், தகப்பனின், கணவனின் பொறுப்புணர்வைக் காட்டியிருந்தது!

- சு.இந்துமதி, நெய்வேலி

ரசிகர்கள்







வட்ட மேஜை

'அக்கம் பக்கம்' படிக்கப் படிக்கச் சுவாரஸ்யம். அடைப்புக் குறிக்குள் உள்ள கமெண்ட்ஸ் சூப்பரோ சூப்பர்.

- அ.முரளிதரன், மதுரை - 3

தஞ்சாவூர்க் கவிராயரின் 'நிறத்தைச் சாப்பிட்டு, இருட்டைப் போர்த்திக்கொள்!' கவிதை, நெஞ்சை ஈர்த்தது!

- 'குலசை' க.மீ.நஜ்முதீன், காயல்பட்டினம்

சி.ஜே. அந்தோணிதாஸ் வரைந்த ஓவியங்களைக் காவியமாக்கிய, அவரது மகனுக்குப் பாராட்டு!

- பி.இசக்கிபாண்டியன், திருநெல்வேலி

ஈழத் தமிழர்களை வைத்து, ஈனத்தனமான அரசியல் நடத்தும் அரசியல்வாதிகளுக்கு கல்கியின் தலையங்க கார்ட்டூன் நெத்தியடி....!

-பி.என்.ஜெய்குமார், திருவாரூர்

'என்றுமே ரசிகர்கள் போற்றும் ரத்னா' என்று நாகேஷுக்கு 'கல்கி' சூட்டிய பட்டத்துக்கு இணை, வேறெதுவுமேயில்லை!

-கே.கஸ்தூரி, வேலூர்

பேட்டி என்ற பெயரில் கேரம் வீராங்கனை இளவழகியை ஏமாற்றிய செயல் தந்திரமானது மட்டுல்ல; கோழைத்தனமானதும்கூட.

- ப.சுகுமார், தூத்துக்குடி

இயல்பான நடையில், மனசை இதமாய் வருடிச் சென்றது 'மனசெல்லாம் சங்கீதம்!'-அருமையான கேம்பஸ் கதை!

-என்.பாலகிருஷ்ணன், மதுரை

நகைச்சுவையால் நனையவைத்த நாகேஷுக்கு இந்திய அரசாங்கம் எந்தக் கௌரவமும் செய்யாதது அவரது ரசிகர்களுக்கு ஒரு ஏமாற்றமே!

-ஜே.துரைராஜ், சென்னை-116

ஆராவமுதன் உங்களை ரொம்பவும்தான் புளகாங்கிதமடையச் செய்துவிட்டான் போலிருக்கிறது. (நீங்கள் கேட்டவை - தராக, கல்கி 15.2.09) அது சாரங்கபாணி (மான் கொண்டவன்) அல்ல, சார்ங்கபாணி (வில்லேந்தியவன்) கோயில், சுவாமி!

- எம்.லட்சுமி, பெரம்பூர்

போற்றும் ரத்னம்!



போட்டோ போட்டி!

உங்க கற்பனைக்கு ஒரு சவால்!

ஏ.ஆர். ரஹ்மான், 'ஸ்லம் டாக் மில்லியனர்' படத்துக்கு இசையமைத்ததற்காக விருது மேல் விருதுகள் வந்து குவிந்து கொண்டிருக்கின்றன. விருதுகள் கிடைத்த மகிழ்ச்சியில், மனைவியே ஆச்சர்யப்பட்டுப் பார்க்கும் வகையில் அப்படி என்ன சொல்லியிருப்பார் ரஹ்மான்?

வளவளன்னு இல்லாம கலகலன்னு ஒரு கமெண்ட் எழுதி அனுப்புங்க. அசத்தல் கமெண்ட் எழுதறவங்களுக்குப் பரிசு காத்திருக்கு. போஸ்ட் கார்டுல மட்டுமே எழுதுங்க. கூப்பனை மறக்காம ஒட்டுங்க.

முடிவு தேதி : 23.2.2009

போட்டோ போட்டி
ஆசிரியர் - கல்கி
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 032



DR. KAMAKSHI MEMORIAL HOSPITAL



Dr. T.G. Govindarajan
President - Founder -
Medical Director

தமிழகத்தில் இதுவே முதல் முறை

டாக்டர் காமாட்சி நினைவு மருத்துவமனை

கேன்சர் இன்ஸ்டிடியூட் (WIA) – உடன்

இணைந்து பெருமையுடன் அறிமுகம் செய்துள்ளது

தமிழ்நாட்டின் முதல் PET-CT



Discovery VCT64 SLICE PET-CT SCAN
Installed at CANCER INSTITUTE (WIA)
Canal Bank Road Gandhi Nagar, Adyar
Chennai - 20
Cell : 93814 36899
93814 36896

10% Special Discount On Sunday for Master & Executive Health Check-up

தமிழ் நாட்டில் முதல் PET CT Scan

இந்தியாவில் 4, 5 இடங்களில் மட்டுமே உள்ள இந்த ஸ்கேனிங் கருவியின் சிறப்பம்சங்கள்:

* கேன்சரை அறிகிறது. * கேன்சர் பரவியுள்ள மற்றும் முற்றியுள்ள நிலவரத்தை அறிகிறது. * கேன்சர் சிகிச்சைகான மருத்துவ திட்டமிடலுக்கு உதவுகிறது. * சிகிச்சைக்குபின் கேன்சர் மீண்டும் தோன்றுவதை அறிகிறது. * இதய தசைகளுக்கான இரத்த ஓட்டத்தை அறிகிறது. * மாரடைப்பு இதயத் தசைகளின் மீது ஏற்படுத்தியுள்ள தாக்கத்தின் விளைவுகளை அறிகிறது. * ஆஞ்சியோபிளாஸ்டி மற்றும் கரோனரி ஆர்டெரி பைபாஸ் சர்ஜரிகளின் மூலம் குணப்படுத்த இயலும் இதயத்தின் தசைப்பகுதிகளை அறிகிறது. (மையோ கார்டியல் பெரிஃபியூசன் ஸ்கேன் உதவியுடன்). * மனக்குழப்பம், நினைவிழத்தல், டியூமர் முதலான மூளையின் சீர்ற்ற தன்மையைக் கணிப்பதுடன் மத்திய நரம்புத் தொகுப்பில் உள்ள பாதிப்புகளையும் அறிகிறது. * நோயாளியின் மூளை மற்றும் இதயத்தின் செயல்பாடுகளை இயல்பான மனிதனோடு ஒப்பிட்டு பார்க்க உதவுகிறது.

DR. KAMAKSHI MEMORIAL HOSPITAL - SPECIALITIES AT A GLANCE

• Intensive Care Unit Cardiology & Cardio Thoracic Surgery • Neurology & Neuro Surgery • Trauma Care & Orthopaedics • Obstetrics & Gynaecology • ENT Surgery • Dermato Cosmetology • Pulmonology • Dentistry and Oral & Maxillofacial Surgery • Paediatrics • Gastroenterology • Transplant Surgery • Oncology • Transfusion Medicine • Nephrology • Urology • Vascular Surgery

இலவச ஆலோசனைக்கு: எஸ்.சுபாஷிணி - 93451 20265, 93810 30712

#1, Radial Road, Pallikaranai, Chennai - 600 100.
Tel : +91-44-22469200 (30 Lines), 66300300 (30 Lines), Fax : 22463282
E-mail : info@drkamakshimemorialhospital.org
Website : www.drkamakshimemorialhospital.org

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / CC (S) DN / 144 / 0
post without prepayment under PMG's Licence No. WPP TN / CC (S) DN / 70 / 09 - 11* Registered as a Newsp

